பக்கங்கள்: 24 விலை:20 ரூபா

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 ஆவணி 18, ஞாயிற்றுக்கிழமை 03.09.2017 கதிர் 301

கண்கவர் ஆடைத் தெரிவுகளுக்கு

சரவணா ரெக்ஸ்

இல.526,529 பருத்தித்துறை வீதி, நல்லூர்,யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0778448045
இல.171, பிரதான வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 2992

## இரு பெண் அரசியல், இராஜதந்திரிகள் நேரில்

# அரசமைப்பு உருவாக்கத்தை துரிதப்படுத்த கடும் அழுத்தம்



### அலிஸ் அம்மையார் மூலம் அமெரிக்கா



### சுஷ்மா ஸ்வராஜின் ஊடாக இந்தியா



கொழும்பு, செப்ரெம்பர் 03

கடந்த வாரம் கொழும்புக்கு வந்திருந்த அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான பதில் இராஜாங்கச் செயலாளர் அலிஸ் வேல்ஸ் அம்மையார் புதிய அரசமைப்பு உருவாக்கத்தை இனியும் தாமதிக்காது விரைவுபடுத்துமாறு இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவுக்கு நேரில் கடும் அழுத்தம் கொடுத்தார்.

தமது அழுத்தத்தை அடுத்து இந்த வருட இறுதிக்குள் அந்தப் பணியைத் தாம் பூர்த்தி செய்வார் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமக்கு உறுதியளித்தார் என்றும் அலிஸ் வேல்ஸ், பின்னர் தாம் சந்தித்த சில அரசியல்வாதிகளிடம் தெரிவித்தார்.

பக்கம் 22 »

கொழும்பு, செப்ரெம்பர் 03

நேற்றுமுன்தினம் காலையில் கொழும்பில் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்த இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ் இனப்பிரச்சினைத் தீர்வையும் உள்ளடக்கிய புதிய அரசமைப்பு உருவாக்கத்தை இனிமேலும் தாமதிக்காமல் துரிதமாக முன்னெடுக்கும்படி கடும் அழுத்தத்தைப் பிரயோகித்தார் எனத் தெரிகின்றது. இந்தச் சந்திப்பின் பின்னர் புதுடில்லி புறப்பட்ட சுஷ்மா ஸ்வராஜ், கட்டுநாயக்க விமான நிலையத்தை விட்டுப் புறப்பட முன்னர் இந்தத் தகவலை இரா.சம்பந்தனையும் சுமந்திரனையும் விமான நிலையத்துக்கு அழைப்பித்துத் தெரியப்படுத்தியிருக்கின்றார்.

பக்கம் 22 »

### எரிகாயங்களுடன் கீதா குமாரசிங்க ஆஸ்பத்திரியில்



கொழும்பு, செ.03

நடிகையும் நாடாளுமன்ற உறுப்பினருமான கீதா குமாரசிங்க (வயது

பக்கம் 22 »

## பலாலி விமான நிலைய அபிவிருத்தி: இலங்கைக்கு இந்தியா அறிக்கை

கொழும்பு, செப்.03

பலாலி விமானத் தளத்தை எவ்வாறு அபிவிருத்தி செய்யலாம் என்பது தொடர்பாக, இந்திய விமான நிலைய அதிகார சபை ஆய்வொன்றை நடத்தியுள்ளது. இந்த அறிக்கை இலங்கை அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

பலாலி விமானப்படைத் தளத்தைப் பிராந்திய விமான நிலையமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. பிரதானமாக, இந்தியாவுக்கான விமானப் பயணங்களை மேற்கொள்ளும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

பிராந்திய விமான நிலையமாக பலாலி விமானத் தளத்தை மாற்றுவதற்கான வாய்ப்புகள் தொடர்பாக இந்தியா சாத்திய ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது.

பலாலி விமானத்தளம் பிராந்திய விமான நிலை

பக்கம் 22 »

# சமஷ்டிக்கு இதுதான் தருணம்!

### தர்மலிங்கம் நினைவு நிகழ்வில் சுமந்திரன் எம்.பி. விவரிப்பு



யாழ்ப்பாணம், செப்.03

"தமிழர்கள் சமஷ்டி அடிப்படையிலான தீர்வு ஒன்றைக் கோருவதற்கும் – ஏன் சுயநிர்ணய உரிமையைக் கோருவதற்கும் – உரித்துடையவர்கள் என்பதை அங்கீகரிக்கும் விதத்தில் இலங்கை உயர் நீதிமன்றத்திடமிருந்து சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தீர்ப்புக் கிட்டியிருக்கின்றது.

பக்கம் 22 »

## ஜெனரல் ஜெகத் ஜயசூரியவுக்கு தூதுவர் பதவி இனி இல்லை



கொழும்பு, செப்.03

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜெகத் ஜயசூரியவுக்கு மீண்டும் வெளிநாட்டுத் தூதுவர் பதவியை வழங்குவதில்லை என அரசாங்கம் தீர்மானித்துள்ளதாம்.

பிரேஸிலுக்கான இலங்கையின் தூதுவராகப் பணியாற்றிய அவர் இரண்டு ஆண்டுப் பதவிக் காலம்

பக்கம் 22 »

## சு.க.மாநாடு இன்று கொழும்பில்; கூட்டமைப்பு சார்பில் சுமந்திரன்

கொழும்பு,செப்.03

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 66ஆவது ஆண்டு விழா கொழும்பில் இன்று நடைபெறும். இந்த மாநாட்டில் தமிழ்க் கூட்டமைப்பின் சார்பில் பங்குபற்றுமாறு அதன் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான இரா.சம்பந்தனுக்கு அழைப்பு

பக்கம் 22 »

## பூநகரியில் மின்னல் தாக்குதல் மனைவி பலி; கணவன் பாதிப்பு

கிளிநொச்சி,செப்.03

கிளிநொச்சி மாவட்டத்தில் நீண்ட நாள்களுக்கு பின் நேற்றுப் பெய்த கன மழையின் போது ஏற்பட்ட மின்னல் தாக்கத்தில் மனைவி பலியானார்; கடுமையாகப் பாதிக்கப்பட்ட கணவன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

பூநகரி, இரணைமாதா நகர் கிராமத்தைச் சேர்ந்த ரூபன் லட்டிசியா பிரதீபா (வயது 40) என்பவரே பலியானார். அவரின் கணவர்

பக்கம் 22 »

## மார்க்ஸிய இளைஞர் முன்னணியாக நேற்று முதல் மாறியது 'ஆவா குறூப்'!

### பொலிஸ் அராஜகங்களை அம்பலப்படுத்த சங்கற்பம்

யாழ்ப்பாணம்,செப்.3

இதுவரை 'ஆவா குறூப்' என அழைக்கப்பட்டு வந்த தமது நட்பு வட்டம் நேற்று முதல் "ஒட்டு மொத்த மனிதகுல மேன்மைக்காகத் தனது மரணம் வரை போராடிய பேராசான் கார்ல் மார்க்ஸின் கோட்பாடுகளினால் ஈர்க்கப்பட்ட – மார்க்ஸிய பின்னணி கொண்ட – இளைஞர் பங்களிப்புடன் ஜனநாயக, சிவில் உரிமைகளுக்கான மாக்ஸிய இளைஞர் முன்னணி எனும் அமைப்பாகச் செயல்பட ஆரம்பிக்கின்றது." – என அறிவித்திருக்கின்றார் 'ஆவா குறூப்' பின் தலைவர் என பொலிஸ் தரப்பால் அறிவிக்கப்பட்டு வரும் குமரேசரத்தினம் வினோதன்.

பக்கம் 22 »

# சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அழுத்தம் கொடுக்கவேண்டிய அவசியம் யாருக்கும் இல்லை என்கிறார் புதிய நீதி அமைச்சர் தலதா அத்துக்கோரள!

கொழும்பு, செப். 03

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசில் இடம்பெற்ற ஊழல் மற்றும் மோசடி குறித்த வழக்குகளில் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டிய அவசியம் யாருக்கும் இல்லை என புதிய நீதி அமைச்சர் தலதா அத்துக்கோரள தெரிவித்துள்ளார்.



அம்பாந்தோட்டைத் துறைமுக விவகாரத்தில் அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பை மீறியமைக்காகவே விஜயதாஸ ராஜபக்ஷ நீதி அமைச்சு பதவியில் இருந்து நீக்கப்பட்டார் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஸ்ரீலங்காவின் முதலாவது பெண் நீதி அமைச்சராக நியமிக்கப்பட்ட தலதா அத்துகோரள கடமைகளைப் பொறுப்பேற்ற பின்னர் நேற்றுமுன்தினம் கண்டிக்கு விஜயம் செய்திருந்தார்.

இதன்போது பௌத்தர்களின் புனித தலமான தலதா மாளிகைக்கு சென்ற அமைச்சர், அங்கு வழிபாடுகளிலும் ஈடுபட்டார்.

இதனையடுத்து பௌத்தர்களின் உயர் பீடமான மல்வத்து பீட மகாநாயக்க தேரரை சந்தித்து ஆசிபெற்றுக்கொண்ட அமைச்சர், மகா நாயக்கதேரருக்கு அரசின் செயற்பாடுகள் குறித்து தெளிவுபடுத்தியுள்ளார்.

இதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட நீதி அமைச்சர் தலதா அத்துகோரள மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

முன்னைய அரசின் காலத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் குறித்த வழக்குகளில் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டிய அவசியம் யாருக்கும் இல்லை.

முதலில் ஒன்றை நான் கூற வேண்டும். அமைச்சரவை கூட்டுப் பொறுப்பை மீறியமைக்காகவே விஜயதாஸ ராஜபக்ஷ அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கப்பட்டார் என நான் நம்புகின்றேன்.

இந்த நாட்டின் பெரிய அளவான நிதியைக் கடனாகப் பெற்று, அனைத்து நாட்டு மக்களையும் ஒரு நபரை ஐந்துலட்சம் ரூபா கடனாளி ஆக்கியுள்ளனர். இதனால் நாடு முன்னோக்கிச் செல்ல முடியாத நிலைமை காரணமாகவே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இரண்டு வருடங்கள் இருந்த போதிலும் ஜனாதிபதி தேர்தலை 2015 ஆம் ஆண்டு நடத்த வேண்டி ஏற்பட்டது.

அவர் அவ்வாறு செய்த நாட்டைத் தான் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க ஆகியோர் பொறுப் பேற்றனர்.

முன்னெப்போதும் இல்லாத வகையில் பெறப்பட்டுள்ள கடன் சுமையில் இருந்து இந்த நாட்டை மீட்பதற்கு, நாடு என்ற வகையிலும் அரசு என்ற வகையிலும் ஜனாதிபதி மற்றும் பிரதமர் உள்ளிட்ட எம் அனைவருக்கும் பொறுப்பொன்று உள்ளது. எம் அனைவருக்கும் தெரியும் உலகில் முதல்முறையாகநிலமொன்றை உருவாக்கி அமைக்கப்பட்ட துறைமுகமே அம்பாந் தோட்டை.

அம்பாந்தோட்டைக்கு கப்பல்கள் வரவில்லை. ஆயின் அம்பாந்தோட்டையை இலாப மீட்டும் நிறுவனமாக மாற்றாவிடின் பெரிய கடன் சுமை மற்றும் நஷ்டத்தைத் தரும் இந்த இடத்தை அபிவிருத்தி செய்வது எமது கடமை.

அந்தச் செயற்பாடுகளின் போது விஜயதாஸ ராஜபக்ஷ, அரசு நடவடிக்கை எடுக்கும் போது அதற்குத் தேவையான அனைத்து அனுமதிகளையும் சட்டமா அதிபர் அனுமதியையும் பெற்று செய்திருந்த போது பொறுப்பற்றவிதத்தில் கருத்து வெளியிட்டமைக்காகவே அமைச்சு பதவியில் இருந்து அவர் நீக்கப்பட்டார்.

மறுபுறம் வழக்குத் தொடர்பான விடயங்களில் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அழுத்தம் கொடுப்பதற்கு யாருக்கும் அவசியமில்லை. சட்டமா அதிபர் அவரின் செயற்பாடுகளைச் சரியாக செய்கின்றார் என்பதில் எமக்கு நம்பிக்கை உள்ளது. நம்பிக்கை இல்லாவிடின் அது குறித்து பேசுவதற்கு எமக்கு உரிமை உள்ளது. அந்த நடவடிக்கைகளை எதிர்காலத்தில் பார்க்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(க)

## வேலைவாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறி பண மோசடியில் ஈடுபட்ட நபர் கைது!

வவுனியா, செப். 03

வவுனியாவில் பல இளைஞர்களிடம் கப்பல் துறை முகத்தில் வேலை வாய்ப்புப் பெற்றுத் தருகிறேன் என்று தெரிவித்து பல லட்ச ரூபா பணம் மோசடி செய்த நபரை வவுனியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவைச் சேர்ந்த சிவனேஸ்ராஜா வினோத்குமார் எனும் 29 வயதான இளைஞர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சந்தேக நபர், வவுனியா - பூவரசங்குளத்தைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை விஸ்வதீபன் என்பவரிடம் கொழும்பு கப்பல் துறைமுகத்தில் வேலை வாய்ப்புப் பெற்றுத் தருகிறேன் என்று தெரிவித்து 15லட்சத்து 86 ஆயிரம் ரூபா பணத்தை பெற்றுக் கொண்டுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன என்றும் இதன் பின்னர் அவரை வவுனியா மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவுள்ளோம் எனவும் வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## ரோஹிங்யா முஸ்லிம்களுக்கு ஆதரவாக யாழ். நகரில் ஆர்ப்பாட்டம்!

யாழ்ப்பாணம், செப். 03

மியன்மாரில் ரோஹிங்யா முஸ்லிம் மக்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்படும் தாக்குதல்களைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் ஒன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ளது.






யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சமூக ஆர்வலர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தப் போராட்டம் நேற்றுக் காலை யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்துக்கு முன்பாக இடம்பெற்றது.

மியன்மார்நாட்டில் ரோஹிங்யா முஸ்லிம்கள் கொல்லப்படுகின்றனர் எனவும் அவர்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்படும் இனப்படு கொலையையும் கண்டிக்கும் வகையிலான பதாகைகளை தாங்கியவாறு இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

சர்வதேசம் இந்த விடயத்தில் உடனடியாகத் தலையிட்டு அந்த மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்றும் இனப்படுகொலையை மேற்கொள்பவர்கள் தண்டிக்கப்படுகின்றமையை உறுதி செய்யவேண்டும் எனவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் வட மாகாணசபை உறுப்பினர்களான பொ.ஐங்கரநேசன், விந்தன் கனகரத்தினம் மற்றும் பெரும் எண்ணிக்கையான இளைஞர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(க)

## திடீரென கட்டுநாயக்க வந்தார் தென்னாபிரிக்க ஜனாதிபதி!

கொழும்பு, செப். 03

தென்னாபிரிக்கா ஜனாதிபதி ஜேகப் ஜுமா, சீனாவில் நடைபெறும் பிரிக்ஸ் மாநாட்டில் கலந்துகொள்ளச் செல்லும் வழியில் நேற்று அதி காலை கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்துள்ளார்.

தென்னாபிரிக்க ஜனாதிபதி உட்பட தூதுக் குழுவினர் அந்நாட்டுக்குச் சொந்தமான சிறப்பு விமானத்தில் பயணம் மேற்கொண்டிருந் ததுடன் எரிபொருள் நிரப்புவதற்காக விமானத்தைக் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறக்கியுள்ளனர்.

எரிபொருள் நிரப்பட்ட பின்னர், விமானம் நேற்று அதிகாலை 1.40 அளவில் கட்டுநாயக்கவில் இருந்து சீனா நோக்கி புறப்பட்டுச் சென்றுள்ளது.

## சரத் பொன்சேகாவைச் சந்தித்தார் ட்ராவிஸ் சின்னையா!



கொழும்பு, செப். 03

இலங்கை கடற்படையின் 21 ஆவது கட்டளைத் தளபதியாக பொறுப்பேற்றுள்ள வைஸ் அட்மிரல் ட்ராவிஸ் சின்னையா நேற்று பிரதேச அபிவிருத்தி அமைச்சில் வைத்து பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவைச் சந்தித்துள்ளார்.

கடற்படையின் 21ஆவது கட்டளைத் தளபதியாக ட்ராவிஸ் சின்னையா பொறுப்பேற்ற பின்னர் சரத் பொன்சேகாவை சந்தித்த உத்தியோகபூர்வ முதல் சந்திப்பு இதுவே ஆகும்.

இச்சந்திப்பின்போது சரத் பொன்சேகா ட்ராவிஸ் சின்னையாவிற்கு அதி உயர் கடற்படைப் பதவியை பெற்றதற்கு வாழ்த்து தெரிவித்ததோடு சுமுகமான கலந்துரையாடலில் இருவரும் ஈடுபட்டனர்.

கலந்துரையாடலின் பின்னர் கடற்படைத் தளபதி சரத் பொன்சேகாவிற்கு நினைவுச் சின்னமொன்றை வழங்கி வைத்தார்.

# ஜெனரல் ஜகத் ஜயசூரிய மீது குற்றச்சாட்டா? அவர் தவறே இழைக்கவில்லை என அரசு உறுதி

யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் தவறிழைத்த போர்க் குற்றவாளியே ஜெனரல் ஜகத் ஜயசூரிய என்று மற்றொரு முன்னாள் இராணுவத் தளபதியும் அமைச்சருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கூறியுள்ள பின்னணியில் -

அவருக்கு எதிராகவும் முன்னாள் இராணுவத் தளபதி ஜயசூரியாவுக்கும் ஆதரவாகக் கொதித்து எழுந்திருக்கின்றனர் அரசுத் தரப்பின் ஏனைய அமைச்சர்கள்.

கட்சி வேறுபாடின்றி ஜகத் ஜயசூரியவுக்கு ஆதரவாக அவர்கள் கருத்து வெளியிட்டு வருகின்றனர்.

போர் இடம்பெற்றபோது ஜெனரல் ஜகத் ஜயசூரிய குற்றச் செயல்களில் ஈடுபடவில்லை என அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்றுக் கொழும்பில் இடம் பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் அங்கு தெரிவித்தவை வருமாறு:-

அரசு எப்போதும் முன்னாள் இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரியவுக்காகச் செயற்படும். அமைச்சர் சரத் பொன்சேகா தெரிவித்த கருத்து அவரது தனிப்பட்ட கருத்தாகும். அது கட்சியின் பொதுக் கருத்து அல்ல.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அமைச்சரவையில் இது குறித்து கலந்தாலோசிக்கப்படவில்லை. இராணுவத்தினர் எந்த சந்தர்ப்பத்திலும் காட்டிக்கொடுக்கப்பட மாட்டார்கள். - என்றார்.

இதற்கிடையில் இந்த விடயம் தொடர்பில் அமைச்சர் சஜித் பிரேமதாஸவும் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

சர்வதேச மனித உரிமைகள் குற்றச்சாட்டுக்கு இலக்காகியுள்ள முன்னாள் இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரிய நிரபராதி என்பதை நிரூபிக்க அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றார் சஜித்.

திஸ்ஸமாராம பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினர் தொடர்பில் யாராவது குற்றச்சாட்டுக்களை முன்வைத்தால் நிபந்தனையின்றி இராணுவத்தினரை காப்பாற்ற அரசு செயற்படும் என்றார் அவர்.

போர் இடம்பெற்ற காலத்தில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றுள்ளன என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவுக்கும், அப்போதைய ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தமே ஜகத் ஜயசூரியவுக்கு எதிரான இவ்வாறான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுவதற்கான காரணம். - என்றார் சஜித் பிரேமதாஸ.

# மகாதேவ சுவாமிகளின் திருவுருவப்படம் திறப்பு



அண்மையில் மகாசமாதி அடைந்த கிளிநொச்சி, ஜெயந்திநகர் மகாதேவா ஆச்சிரமத்தின் இரண்டாவது குருபீடாதிபதி ஸ்ரீமத் கணேஷானந்தா மஹா தேவா சுவாமிகளின் திருவுருவப்படம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நிறைமதி நாளன்று காலையில் திருக்கேதீஸ்வரம் ஸ்ரீமத் சுபாரத்தினம் சுவாமிகள் தொண்டர் சபையினரால் அவர்களது திருக்கேதீஸ்வரம் இந்து கலாசார நிலையத்தில் திறந்து வைக்கப்படும்.

அன்றைதினம் காலை 5 மணி முதல் திருவாசக முற்றோதல் இடம் பெறும் அதன் பின்னர் படம் திறந்து வைக்கப்படும்.

சுவாமிகள் மகாசமாதி நிலை அடைவதற்கு முன்பு தனது திருக்கரத்தினால் 'தனது மறைவுக்குப் பின்பு பயன்படுத்துமாறு' கூறி மேற்படி தொண்டர் சபையின் செயலாளரான தம்பு துரைராசா அவர்களிடம் நேரடியாகக் கையளித்த சுவாமிகளினது திருவுருவப் படமே மேற்படி இந்துக் கலாசாலை நிலையப் பொது மண்டபத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது. ஏற்கனவே இம் மண்டபத்தில் இடம்பெற்றுள்ள முப்பத்தியாறு அருளாளர்களினதும் படங்களுடன் சுவாமிகளினது திருவுருவப்படமும் அம்மண்டபத்தை அலங்கரிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. அன்றைய நிறைமதி நாள் திருவமுது வழங்கல் சேவையும் அங்கு இடம்பெறும். (உ)

## மார்க்ஸிய...

(22ஆம் பக்கத் தொடர்ச்சி)

பங்களிப்புடன் இன்று முதல் நாம் ஜனநாயக, சிவில் உரிமைகளுடன மார்க்ஸிய இளைஞர் முன்னணி (Maxist) Youth Front for Democratic and Civil rights) என்னும் அமைப்பை ஸ்தாபித்து செயல்பட ஆரம்பிக் கிறோம்.

இலங்கையில் ஊழல் மிக்க அரசதிணைக்களங்களில் முதன்மையானது (Most corrupted institution) என Transparancy internaional எனப்படும் ஊழல்களுக்கு எதிரான சர்வதேச அமைப்பினால் தரப்பட்டிருக்கும் இலங்கைப் பொலிஸாரின் சட்டவிரோத செயற்பாடுகள் அனைத்தையும் ஆதாரங்களுடன் அம்பலப்படுத்துவதே எமது பிரதான செயற்பாடாக அமையும். அங்கொன்றும், இங்கொன்றுமாக மிகவும் அரிதானவர்களாக இருக்கும் நேர்மையான பொலிஸாருக்கு எமது மரியாதைக்குரிய செவ்வணங்கங்கள் உரித்தாகட்டும்.

சக மனிதனுக்கான பொறுப்பு தன்னுடையதல்ல என்று ஒவ்வொரு மனிதனும் எண்ணிக் கொணடு வாழும் காலத்தில் 'உங்களைப் போலவே அடுத்த மனிதரையும் நேசியுங்கள்' என்ற வார்த்தையினால் அல்லாமல் அடுத்த மனிதனைக் கொன்றால் நீங்கள் கொல்லப்படுவீர்கள் என்ற பீதியில் வைத்துத் தான் முதலாளித்துவ நாட்டுச் சட்டங்கள் மனிதகுலத்தின் எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப முயல்கின்றன.

ஒரு நாட்டின் ஜனாதிபதியின் மகனும், தெருவில் குப்பை அள்ளுபவனின் மகனும் ஒரு பாடசாலையில், ஒரே தரமான கல்வியைக் கற்கும் வாய்ப்பை ஒரு Marxist தலைவனால் மட்டுமே வழங்க முடியும் என நாம் கருதுகிறோம். அந்த வாய்ப்புக்காக நாம் போராடுவோம்.

நட்சத்திர ஹோட்டல்களில் உலக நாட்டுத் தலைவர்கள் வறுமை ஒழிப்பு மாநாடுகளை நடத்திய போது 'உலகத்தில் எண்பது கோடி மக்களுக்கு உணவில்லை' எத் தன்னந்தனியாக ஐக்கிய நாடுகள் சபையில் கர்ஜித்த 'பிடல் காஸ்ரோ'வையும், தனது அமைச்சுப் பதவிகளை இரவோடிரவாக தூக்கி யெறிந்து விட்டு ஒடுக்கப்பட்ட இன்னொரு நாட்டு மக்களுக்காகக் காடுகளில் போராடச் சென்று பொலிவியாவில் ஏகாதிபத்திய அரசுகளால் கொல்லப்பட்ட எமது மைத் தோழன் சேகுவேராவையும் எமது ஆதர்ச நாயகர்களாகக் கொள்கிறோம்.

சிங்கள் மக்களே, தாய் தந்தையரே, சகோதர சகோதரிகளே, ஜே.வி.பி. இளைஞர்களை ஒரு காலத்தில் இலங்கையில் தெருத் தெருவாக டயர் போட்டு எரித்துக் கொன்றழித்து போல் எம்மையும் கொல்லாமல் காப்பாற்றுமாறு உங்களிடம் கோருகிறோம்.

- என்று உள்ளது.

இந்த அறிக்கையின் பிரதிகள் சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமைகள் கண்காணிப்பகம், ஆசிய மனித உரிமைகள் அமைப்பு, செஞ்சிலுவைச் சங்க சர்வதேச குழு, சட்ட ஒழுங்கு அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர், வடக்கு மாகாண முதல்வர், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பொலிஸ்மா அதிபர், ஜே.வி.பி. தலைவர் அநுர குமார திஸாநாயக்கா, இந்தியத் தூதரகம், ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகள் போன்ற பல தரப்பினருக்கும் அனுப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# ஊடகவியலாளர் குருநாதனுக்கு சம்பந்தன் அனுதாபச் செய்தி

திருகோணமலையின் மூத்த பத்திரிகையாளர்களில் ஒருவரும், தமிழ்ப் பற்றாளரும், தமிழ் மக்களின் விடுதலையின் பால் மிகுந்த அக்கறை கொண்டவருமான சின்னையா குருநாதன் மறைவுச் செய்தி கேட்டு மிகுந்த மன வேதனையடைகின்றேன். - என்று கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன் தாம் விடுத்துள்ள இரங்கற் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அந்த செய்தியின் முழு விவரம் வருமாறு:-

திருகோணமலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டிருந்த அன்னார், திருக்கோணேஸ்வர இந்துக் கல்லூரியில் கல்வி கற்றபின் தனது 21வது வயதில் ஊடகத்துறையில் காலடி பதித்திருந்தார். 2016 ஆம் ஆண்டு வரை 58 வருடங்களாக அத்துறையில் இடையறாது தனது பணியை மேற்கொண்டு வந்த அவர், தினபதி, சிந்தாமணி, சூடாமணி, வீரகேசரி, தினக்குரல் மற்றும் உதயன் போன்ற தமிழ்ப் பத்திரிகைகளில் சிறப்பாகப் பணியாற்றினார். யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் உதயன் பத்திரிகையின் வாரவெளியீடான சஞ்சீவி இதழின் ஆசிரியராகவும் அவர் பொறுப்பு வகித்திருந்தார்.

தமிழ்ப் பத்திரிகைகளில் மட்டுமல்லாது, ஆங்கிலப் பத்திரிகைகளான Sunday Observer, The Island, Sunday Times ஆகிய பத்திரிகைகளுக்குக் கட்டுரைகளை எழுதிவந்ததன் மூலம் ஆங்கிலமொழி மூல ஊடகப் பணியிலும் அவர் தடம் பதித்திருந்தார்.

செய்திகளைச் சேகரிப்பதிலும் அவற்றைத் துரிதமாக மக்களிடையே கொண்டு சேர்ப்பதிலும் அர்ப்பணிப்புடன் செயற்படும் வழக்கத்தைக் கொண்டிருந்த அன்னார், நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலைகளின் போதும் விரைவாகச் செய்திகளைச் சேகரிப்பதில் அக்கறையுடன் செயற்பட்டு வந்துள்ளதுடன், மக்களின் துயரங்களை வெளிக்கொண்டு வருவதிலும், நெருக்கடியான காலங்களில் மக்களை அறிவூட்டும் வகையிலான செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதிலும் அவர் ஆற்றிய பணிகள் மக்கள் மனங்களில் என்றும் நிலைத்திருப்பன வாகும்.

தமிழ், ஆங்கிலமொழிகளில் அவருக்கிருந்த ஆழ்ந்த அறிவும் ஆற்றலும், தான் சார்ந்த துறையில் அவர் கொண்டிருந்த பட்டறிவும் அவரை ஒரு சிறந்த ஊடகவியலாளராக சமூகத்தில் இனங்காட்டியிருந்தன.

தமிழ் மக்களின் அரசியலைப் பொறுத்த வரையில், தந்தை செல்வாவின் காலம் முதல் அண்ணன் அமிர்தலிங்கம் அவர்களின் காலத்திலும் தொடர்ந்த அவரது அரசியல் கருத்துக்கள் அவர் இறக்கும் வரை உறுதிமிக்க ஒரே நிலைப்பாட்டிலேயே இருந்து வந்துள்ளது. அரசியல் கருத்துக்கள் எவ்வாறு இருந்தபோதும் ஒரு பத்திரிகையாளனுக்கு இருக்க வேண்டிய நடுநிலையிலிருந்து அவர் என்றும் விலகாது பணியாற்றியமை அவரது உயர்ந்த குணாம்சமாகும்.

எனக்கும் அவருக்கு மிடையில் மிக நீண்டகாலமாக நெருக்கமாக தொடர்பு இருந்து வந்தது. அரசியல் ரீதியான கருத்துக்களை அவர் அடிக்கடி எனக்கு எடுத்துரைத்து வந்திருந்தார். அவ்வாறான அவரது கருத்துக்கள் எப்பொழுதும் பெறுமதி மிக்கவையாக அமைந்திருந்தன. அதன் காரணமாக நான் அவரின் கருத்துக்களைச் செவிமடுத்து அவற்றைப் பயன்மிகு வகையில் பயன்படுத்துவதில் அக்கறையாக இருந்தேன். அத்தகைய ஒரு பெருமகனாரது இழப்பு தனிப்பட்ட முறையில் எனக்குப் பேரிழப்பாகும்.

அன்னாரது இழப்பினால் துயருற்றிருக்கும் அவரது இரு பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கும் ஊடகத்துறையில் அவருடன் பணியாற்றிய அனைவருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பிலும், இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பிலும், தமிழ் மக்கள் சார்பிலும், எனது சார்பிலும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறையருளை இறைஞ்சுகின்றேன். - என்று உள்ளது.

## சமஷ்டி...

(22ஆம் பக்கத் தொடர்ச்சி)

சொல்லால் அல்ல. எனவே சொற்களைக் கைவிட்டு தமிழர்கள் எதிர்பார்க்கும் விடயங்களை உள்ளடக்கிய தீர்வுக்கு எம்மால் இயன்ற மட்டும் முயற்சிப்போம்.

அத்தகைய முயற்சி தோல்வி அடையக் கூடிய சூழல் ஏதும் இதுவரை தென்படவில்லை. ஆகவே நாம் நம்பிக்கையுடன் தொடர்ந்து முயற்சிக்க வேண்டும்.

அப்படி முயற்சி எடுக்கும் பொறுப்பைத்தான் மக்கள் வாக்குகள் மூலம் எங்களிடம் ஒப்படைத்திருக்கின்றார்கள். ஆகவே நாம் அதை விடாது தொடர வேண்டும்.

அந்த முயற்சியில் நாங்கள் தோற்கவே மாட்டோம் எனக் கூற மாட்டேன். சில சமயங்களில் தோற்கலாம்.

தோற்றால் தொடர்ந்து போராட நாம் நிர்ப்பந்திக்கப்படுவோம். எப்படி, எந்த மார்க்கத்தில் போராடுவது? அதை அப்போதுதான் நாம் தீர்மானிக்க வேண்டியிருக்கும் - அதுதான் முக்கியமானது.

இன்று தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகளையோ பிற இனவழிப்பு நடவடிக்கைகளையோ நாம் குறிப்பிடும் போது எம்மிடம் ஒரு வீச்சம் இருக்கும் ஓர் ஆக்ரோஷம் இருக்கும். நாம் சிங்கள இனவாத அரசே இதைச் செய்தது என்று முழங்குவோம்.

ஆனால் இன்று தர்மலிங்கத்தின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் நாம் அவரை இவ்வாறு கொன்றவர்கள் விடயத்தில் ட்டும் அப்படி ஆக்ரோஷமாகக் குரல் எழுப்புவதில்லை.

அதற்குக் காரணம் உண்டு. தர்மலிங்கம் போன்றவர்களின் கொலைகளைச் செய்தவர்கள் சிங்களப் படையினர் அல்லர். அதனால் அந்தக் கொலைகளைச் செய்தவர்கள் குறித்துப் பேசாமல் வெறுமனே தர்மலிங்கம் குறித்து மட்டும் பேசுவதுடன் நாம் அடக்கி வாசிக்கிறோம்.

ஏனென்றால், ஆயுதப் போராட்ட வரலாற்றில் இத்தகைய சகோதரப் படுகொலைகள் தவிர்க்க முடியாதவையாக வந்து விடுகின்றன.

அதனால் அந்த சகோதரப் படுகொலைகளை நாம் உரத்துக் கண்டித்து, அவற்றுக்கு எதிராக குரல் எழுப்புவதில்லை.

சரியோ, பிழையோ நாற்பது வருடங்களிற்கு முன்னர் எமது இளைஞர்கள் ஆயுதம் ஏந்த நிர்ப்பந்திக்கப் பட்டார்கள். முடிவு எடுத்தார்கள்.

அது தவறு என்று நாம் இப்போது வந்திருந்து கொண்டு கூற முடியாது. அந்தச் சூழ்நிலையில் அதைத் தவிர, அவர்களுக்கு வேறு மார்க்கம் இருந்திருக்க முடியாது.

இதுவேதான் ஆரம்பத்தில் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட நெல்ஸன் மண்டேலாவுக்கும் நேர்ந்தது.

முன்னர் ஆயுதப் போராட்டத்தில் நாம் குதித்தமை தவறு என்று இப்போது இருந்து கொண்டு நாம் கூறமுடியாது. அன்றைய சூழல் அப்படி.

ஆனால், இப்போதைய எமது சமஷ்டித் தீர்வு முயற்சி தோல்வியடைந்து இனி மீண்டும் போராட்டம்தான் என்ற நிலைக்கு நாம் மீளுவோமானால், அப்போது எத்தகைய போராட்ட அணுகுமுறையை நாம் வகுக்க வேண்டும் என்பதை எமக்கு உணர்த்துவதற்கு, தர்மலிங்கம் போன்றோரின் படுகொலை மாதிரியான அம்சங்கள் எமக்கு அவசியம்.

அதனை முன்னுதாரணமாக - அந்தச் செய்தி கூறும் விடயத்தை வழிகாட்டலாகக் கொண்டு - அப்போது நாம் எமது போராட்ட வழிப்பாதையைத் தீர்மானிக்கக் கூடியதாக இருக்கும் - என்றார் அவர். (உ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## ஆவா குழுவின் மடல்

தமிழர் அரசியலில் மட்டுமல்லாமல், தென்னிலங்கை அரசியலிலும் இப்போது அதிகம் அடிபடும் பெயர்களில் ஒன்று 'ஆவா' குறூப்.

இலங்கையின் பொலிஸ்மா அதிபரே வடக்குக்கு வந்து நிலைமைகளை ஆராயும் விதத்தில், 'ஆவா' குழுவின் விவகாரம் மிகவும் சூடு பிடித்ததாகி இப்போதுதான் சற்று அடங்கியிருக்கின்றது.

ஆவா குழுவின் அட்டகாசத்தை அடக்கிவிட்டதாக பொலிஸ்மா அதிபர் மமதையோடு பெருமிதம் கொள்ளும் நிலைமை காணப்படுகின்றது.

'ஆவா குழு' முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில், அந்த ஆட்சிப்பீடத்தால் உருவாக்கப்பட்ட 'திருவிளையாடல்' என்று அமைச்சரவைப் பேச்சாளர் கயிறு திரிக்கும் விவகாரமாகவும் கூட இது உள்ளது.

யாழ். குடாநாடு ஆவா குழுவினரின் கைகளில் விழவில்லை, அரசினதும் அரசுப் படைகளினதும் முழுப் 'பிடி'யில்தான் உள்ளது என்பதை தென்னிலங்கைக்கு - குறிப்பாக தெற்கு பௌத்த, சிங்கள மத பீடங்களுக்கு - உறுதிப்படுத்திக் காட்டுவதற்காக அந்த பௌத்த பீடத்தின் தலைவர் ஒருவர் தலைமையில் பௌத்த பிக்குகளையே யாழ்ப்பாணத்துக்கு நேரடியாக அனுப்புவித்து நிலைமையை நிரூபித்துக் காட்ட வேண்டிய பொறுப்பு கொழும்பு அரசுக்கு இன்று நேர்ந்திருக்கின்றமையும் யதார்த்தம்தான்.

'ஆவா குழு'வை மடக்கி, முழுதாகக் கம்பிக்குப் பின்னால் அடைத்து வைத்திருக்கின்றோம் என்று பொலிஸ் தரப்பு நெஞ்சை நிமிர்த்தி அறிவிக்கும் இந்தச் சமயத்தில்தான், ஒரு திருப்புமுனையாக அதே ஆவா குழுவின் தலைவன் என்று பொலிஸாரால் அடையாளப்படுத்தப்பட்டவன் நானே என்று குறிப்பிட்டு ஓர் இளைஞரின் பெயரால் அறிக்கை ஒன்று வெளிவந்திருக்கின்றது.

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் விடயங்கள் உண்மையா? பொய்யா? அல்லது புனைகதைகளா? என்று எடுத்த எடுப்பிலேயே தீர்ப்புச் சொல்லிவிட முடியாது.

ஆனால், அந்த அறிக்கைக்குள் ஏதோ சில விடயங்கள் - ஆழ்ந்து கவனிக்கப்பட வேண்டிய அம்சங்கள் - பொதிந்து கிடக்கின்றன என நாம் கருதுகிறோம்.

'ஆவா குழு' என்பது வன்முறையை நாடும் இளைஞர்களை - அதுவும் வாள்வெட்டு கலாசாரத்தில் மூழ்கிய இளசுகளின் - ஓர் அட்டகாசக் குழு என்றே எல்லோர் மத்தியிலும் ஓர் எண்ணப்பாடு உள்ளது. வெளியாரும், ஊடகவியலாளர்களாகிய நாங்களும் அப்படித்தான் ஒரு பிம்பத்தைக் காட்டினோம். அதுவே தான் முழு உண்மையாகவும் இருக்கலாம்.

ஆனால், இப்போது வந்திருக்கின்ற பகிரங்க அறிக்கை அந்தக் குழுவுக்குப் பின்னர் ஒரு மார்க்ஸிய சிந்தனையோட்டம் இருப்பதை உறுதிப்படுத்துகின்றது.

அந்த அறிக்கைக்குள் அந்த இளைஞர் சமுதாயம் ஏதோ ஒரு செய்தியை சமூகத்துக்கும், அரசியல் தலைவர்களுக்கும், அதிகாரத் தரப்புக்கும் சொல்ல விழைவதாகவே தோன்றுகின்றது.

தமிழர்களின் இளம் சமூகத்தின் ஒரு பகுதி, எங்கோ சமுதாயத்தின் ஒரு மூலைக்குள்ளிருந்து திசை தெரியாது ஆதங்கத்தோடு எழுப்பும் குரலாக அந்த அறிக்கையின் சொல்லாடல்கள் அமைகின்றன.

இந்த அறிக்கையை இன்னோர் அடக்குமுறை நடவடிக்கையாக வெறுமனே பொலிஸ் தரப்பிடம் தூக்கிக் கொடுத்து, அந்த அறிக்கைக்கு ஒரு நிறமும் பூசி, அதைத் தூக்கிக் கடாசாமல் அதில் ஏதோ ஒரு விடயம் - அர்த்தம் - கிடப்பதாக நோக்கி, அதை நுட்பத்தோடு ஆராய்வதற்கு அரசுத் தலைமையும், அரசியல் தலைமைகளும், சமூகத் தலைமைகளும் முன்வரவேண்டும் என வலியுறுத்துகிறோம்.

அரச தரப்பினரும், நம்மவர்களும் கடந்த காலத்தை மறந்திருக்கமாட்டார்கள் என்று நம்புகின்றோம்.

இப்போது ஆவா குழுவை வாள்வெட்டுக் கும்பல் என்று பட்டம் சூட்டியமை போன்றுதான் அன்று குட்டிமணி, தங்கத்துரையைக் 'கள்ளக் கடத்தல்காரர்கள்' என்றீர்கள். அவர்களைச் சிறையில் அடைத்து, மரண தண்டனை விதித்து, சிறையில் கண்களைத் தோண்டிப் படுகொலை செய்தபோதுதான் விடுதலை முளை விஸ்வரூபம் எடுத்து பெருவிருட்சமாகி இலங்கைத் தீவையே வன்முறைப் புயலுக்குள்ளும் இரத்த சூறாவளிக்குள்ளும் ஆழ்த்தியது.

இப்படி நாம் எழுதுவதன் அர்த்தம் குட்டிமணி, தங்கத்துரை போன்ற தியாகிகளை இன்றைய ஆவா குழுவுடன் ஒப்பிடும் நோக்கிலல்ல. அப்படி ஒப்பீடு செய்யும் தகுதி பின்னவர்களுக்கு இருப்பதாகவும் நாம் கருதவுமில்லை.

ஆனால், இளம் சமூகத்தின் குரலை - கோரிக்கையை - ஆதங்கத்தை - எதிர்பார்ப்பை - சரிவரக் கேட்க நாம் தவறுவோமானால், அது பெரும் வரலாற்றுத் தவறாகவும் மாறிவிடும் ஆபத்து உண்டு.

எனவே, இப்போது ஆவா குழுவின் பெயரில் வந்திருக்கும் பகிரங்க அறிக்கையை பொலிஸ் விசாரணை - புலனாய்வு உறுதிப்பாடு - என்ற மேசைகளுக்குக் கடாசிவிடாமல், அரசியல் தலைமைகளும், சமூக சிற்பிகளும் அதை ஆழமாக ஆராய வேண்டும்.

திக்கு, திசை தெரியாமல் தீனமாக எங்கோ ஒரு மூலையில் இருந்து ஒலிக்கும் ஓர் இளைஞர் கூட்டத்தின் வெப்பியாரமாக அது தெரிகிறது.

தயவு செய்து அதை ஆராயுங்கள். அதற்குள் ஏதேனும் நியாயம் பொதிந்திருந்தால் அதைக் கண்டுபிடித்து ஆவன செய்யுங்கள்.

# ஜனாதிபதி மைத்திரியை மீண்டும் ஜப்பானுக்கு அழைக்கிறார் வெளிவிவகார அமைச்சர் ஹோரி



எதிர்காலத்தில் மீண்டும் ஒருமுறை ஜப்பானுக்கு விஜயம் செய்யுங்கள் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் இவாவ் ஹோரி அழைப்பு விடுத்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற இந்து சமுத்திர பிராந்திய நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்ள இலங்கை வந்திருந்த ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் நேற்றுமுன்தினம் மாலை ஜனாதிபதியை அவரது இல்லத்தில் சந்தித்தபோது இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

மேலும், இலங்கைக்கு வழங்கி வரும் உதவிகளைத் தொடர்ந்தும் வழங்கவுள்ளோம் என்றும் வெளிவிவகார அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

உண்மையான நண்பன் என்ற வகையில் இலங்கையின் அபிவிருத்திக்கு ஜப்பான் செய்துவரும் பங்களிப்பை மதிக்கின்றார் எனத் தெரிவித்துள்ள ஜனாதிபதி, வேறு நோக்கங்கள் இன்றி நேர்மையான நண்பனாக ஜப்பான் வழங்கி வரும் உதவிகளுக்கு இதயபூர்வமாக நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார் என ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. (க)

# மூன்று நாள்களாகத் தேடப்பட்டு வந்த வல்வெட்டித்துறை மீனவர் மீட்பு!



வல்வெட்டித்துறைக் கடற்பரப்புக்குக் கடந்த வியாழக்கிழமை இரவு மீன்பிடிக்கச் சென்ற மீனவர் ஒருவர் மூன்று நாள்களாகக் காணாமற்போன நிலையில் நேற்று மீட்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் 10இற்கும் மேற்பட்ட படகுகளில் கடற்படையினரும் கடல் தொழில் சங்கங்களும் இணைந்து இந்தத் தேடுதல் நடவடிக்கையில் மிகவும் தீவிரமாக ஈடுபட்டனர்.

இந்த நிலையில், காணாமற்போன மீனவர் சென்ற படகின் பெற்றோல் முடிவடைந்த நிலையில் வேறு இடத்தில் அந்தப் படகு கரையொதுங்கியது என்றும் தற்பொழுது அவரையும் படகையும் இலங்கைக் கடற்படையினர் மீட்டுள்ளனர் என்றும் கூறப்பட்டது.

வல்வெட்டித்துறையின் கொண்டைகட்டைப் பகுதியைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான 48 வயதுடைய வடிவேலு சிறீகாந்த் என்ற மீனவரே வல்வெட்டித்துறைக்கடல் பரப்பில் தூண்டில் தொழில் மேற்கொள்ளக் கடந்த வியாழக்கிழமை பிற்பகல் படகில் தனியாகச் சென்ற நிலையில் காணாமல்போனார் என்பது குறிப்பிட்டத்தக்கது.

# பஸ் நிலையத்திற்கு அருகில் தேங்கும் குப்பைகளால் பயணிகள் அசௌகரியம்!



மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கொடிகாமம் மற்றும் பருத்தித்துறை தனியார் பேருந்து தரிப்பிடத்திற்கு அருகில் குப்பைகள் தேங்கிக் காணப்படுகின்றமையால் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

இதனால், இந்தப் பகுதிகளில் ஈ தொல்லை அதிகமாகக் காணப்படுகிறது என்றும், பஸ் நிலையத்தில் துர்நாற்றம் வீசுவதால் பஸ் நிலையத்தைப் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பகுதிகளில் உரப்பைகளை நாய்கள் பிய்த்தெறிவதால் வீதிகளில் பொலித்தீன்கள் மற்றும் குப்பைகள் பரவிக் காணப்படுகின்றன.

அருகில் உள்ள வர்த்தக மற்றும் உணவுக் கடைகளின் கழிவுகளே இந்தப் பகுதிகளில் தேங்குகின்றன எனவும் அவற்றைப் பாதுகாப்பான முறையில் அப்புறப்படுத்திப் பஸ் தரிப்பிடத்தை எந்தவித அசௌகரியங்களும் இன்றிப் பயணிகள் பயன்படுத்த நடவடிக்கைஎடுக்க வேண்டும் எனவும் மக்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# காரைநகரில் நேற்று நடந்த விபத்தில் வெளிநாட்டிலிருந்து வந்த இளைஞன் பலி!

காரைநகர் களபூமி பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார்.

காரைநகரைச் சேர்ந்த 24 வயது இளைஞரே சம்பவ இடத்தில் பலியாகியுள்ளார்.

வெளிநாட்டில் இருந்து கோயில் திருவிழாவுக்காக வந்த இந்த இளைஞன், தனது உறவினருடன் கோயிலுக்குச் சென்று கொண்டிருந்தபோதே இந்த விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதி அருகே இருந்த பனை மரத்துடன் மோதியுள்ளது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளை ஓட்டிச்சென்ற அந்த இளைஞர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார்.

மற்றையவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாண வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

## நாளை

04.09.2017
திங்கட்கிழமை
நட்சத்திரம் : திருவோணம் பி.ப. 12.13 வரை
திதி : திரயோதசி பி.ப. 12.19 வரை
சுபநேரம் : 12.05 – 1.35 வரை
இராகுகாலம் : 7.35 – 9.05 வரை

# இலங்கையில் பொருளாதாரத் திட்டங்களை இந்தியா துரிதப்படுத்தும் என்கிறார் சுஷ்மா!

கொழும்பு, செப். 03

இரு நாடுகளின் மக்களின் நன்மைக்காகவும், முன்மொழியப்பட்டுள்ள புதிய இருதரப்பு பொருளாதாரத் திட்டங்களைத் துரிதப்படுத்துவதற்கு இந்தியா அர்ப்பணிப் புடன் செயற்படும் என்று இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜனாதிபதியிடம் உறுதியளித்துள்ளார்.

இரண்டாவது இந்து சமுத்திர மாநாட்டில் பங்கேற்க இவர் கொழும்புக்கு வருகை தந்திருந்தார். இந்த நிலையில், நேற்று முன்தினம் முற்பகல் ஜனாதிபதியை அவரது உத்தியோக பூர்வ இல்லத்தில் சந்தித்துள்ளார்.

இதன்போதே மேற்கண்டவாறு அவர் கூறியுள்ளார் என்றும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.



இந்து சமுத்திர வலய நாடுகளின் பிரதான பொருளாதார வளமாகக் காணப்படும் சமுத்திரத்தின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு முன்னுரிமையளித்து செயற்படவேண்டியதன் முக்கியத்துவம் தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வலியுறுத்தினார்.

இந்து சமுத்திர வலயத்தில் அமைந்துள்ள நாடுகளின் பொருளாதார மற்றும் மின்சக்தி தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கான முக்கிய போக்குவரத்து ஊடகமாக இந்து சமுத்திரம் விளங்குவதைச் சுட்டிக் காட்டிய ஜனாதிபதி, அதனூடாக நாட்டு மக்களுக்கு நேரடித் தாக்கங்கள் காணப்படுகின்றன எனவும் குறிப்பிட்டார்.

இந்து சமுத்திர வலய நாடுகளிலும், வலயத்திலும் அமைதி, பாதுகாப்பு மற்றும் ஸ்திரத் தன்மையை ஏற்படுத்துவதில் இந்து சமுத்திரத்தின் பாதுகாப்பு நேரடியாகத் தொடர்புபடுகிறது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அண்மையிலுள்ள நட்பு நாடு என்றவகையில் இந்தியா இலங்கைக்கு வழங்கி வரும் ஒத்துழைப்புக்கு ஜனாதிபதி, இதன்போது இந்திய வெளிநாட்டலுவல்கள் அமைச்சருக்கு நன்றி தெரிவித்தார்.

இந்த நிலையில், இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் தொன்றுதொட்டு காணப்படும் வலுவான உறவுகளை மேலும் பலப்படுத்துவதற்கு இலங்கை அரசால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு இந்திய வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளின் மக்களின் நன்மைக்காகவும், முன்மொழியப்பட்டுள்ள புதிய இருதரப்பு பொருளாதாரத் திட்டங்களைத் துரிதப்படுத்துவதற்கு இந்தியா அர்ப்பணிப்புடன் செயற்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கிடையே விரிவான சுமுக உறவுகள் மற்றும் அன்னியோன்ய அரசியல் நிலைமைகள் காரணமாக எந்தவொரு பிரச்சினையையும் சுமுகமாகத் தீர்த்துக் கொள்வதற்கான வாய்ப்பு காணப்படுவதாக இந்திய வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் குறிப்பிட்டார்.

# இந்தியாவின் கடல்சார் பார்வை பிராந்திய நலன்சார் கொள்கையாகும்!

## இந்திய வெளியுறவு செயலர் எஸ். ஜெயசங்கர் தெரிவிப்பு

கொழும்பு, செப். 03

இந்து சமுத்திர வலய நாடுகள் பொது இணக்கப்பாட்டை நோக்கி நகர வேண்டியுள்ளது.

இந்தியர் இந்த விடயத்தில் கடல்சார் பார்வை என்ற கொள்கையின் அடிப்படையில் இந்து சமுத்திர பாதுகாப்பு , பிராந்திய ஒத்துழைப்பு மற்றும் தொடர்பாடல் உள்ளிட்ட பல்துறைசார் ஒற்றுமையை நோக்காகக் கொண்டு பரந்தளவில் செயற்படுகிறது என இந்திய வெளியுறவுச் செயலர் எஸ்.ஜெயசங்கர் தெரிவித்தார்.

இந்து சமுத்திர மாநாட்டின் இரண்டாவது நாள் அமர்வுகள் கடந்த வெள்ளிக்கிழமை அலரி மாளிகையில் இடம்பெற்றன.

இதன் போது உரையாற்றுகையிலேயே இந்திய வெளிவுறவு செயலர் எஸ். ஜெயசங்கர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்து சமுத்திரத்தில் பல முக்கிய திட்டங்கள் முன்னெடுக்கப் பட்டுவருகின்றன. அந்தவகையில் இந்தியா பிராந்திய நலன்கள் மற்றும் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு பல்வேறு திட்டங்களை நேச நாடுகளுடன் ஒன்றிணைந்து முன்னெடுத்து வருகின்றது.

பூகோள அரசியலில் ஏனைய



உலக கடல்களைப் போன்று தற்போது இந்து சமுத்திரமும் பல்வேறு முக்கியத்துவங்களை வெளிப் படுத்தி வருகின்றது.

கடல்சார் கலாசாரம் மற்றும் நடவடிக்கைகளை புரிந்துகொள்ள வேண்டியுள்ளது. இந்து சமுத்திரம் பல்வேறு சிறப்புகளுக்குப் பாத்திரமானதாக அமைந்துள்ளது.

பிராந்திய நாடுகளின் கூட்டு முயற்சிகள் தனி அடையாளத்தை நோக்கி நகர்த்தப்பட வேண்டும் என்பதுடன், சவால்களை எதிர் கொள்வதிலும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

கடல் பயங்கரவாதம் , கடத்தல்கள் போன்ற சவால்கள் இந்து சமுத்திரம் எதிர்கொண்டுள்ள சவால்களாகும். அதேபோன்று உலக கால நிலை மாற்றங்களும் சவால் மிக்கனவாகவே உள்ளன.

அண்மையில் ஏற்பட்ட இயற்கை மற்றும் மனித நடவடிக்கைகள் காரணமான அனர்த்தங்களின் போது ஒருமித்து செயற்படுவதில் அண்மைக்கால சம்பவங்கள் பல்வேறு விடயங்களை உணர்த்துகின்றன. யேமனில் இடம்பெரும் மோதல்கள் , நேபாளத்தில் இடம்பெற்ற பூமியதிர்ச்சி, மாலைதீவின் தண்ணீர் பிரச்சினை மற்றும் இலங்கையின் மண்சரிவு என்பன அண்மைக் கால அனுபவங்களாகும்.

நேச நாடுகளுடன் இணைப்புகளை வளர்ப்பதும் பாதுகாப்பதும் இந்தியாவின் முக்கிய கொள்கையாகக் காணப்படுகின்றது. மறுப்புறம் இந்து சமுத்திரத்தின் பாதுகாப்பு என்பது அடிப்படையான விடயமாகவே காணப்படுகின்றது.

இந்த நிலைப்பாட்டிலிருந்து நேச நாடுகளுடன் ஒத்துழைப்புடன் செயற்படுதல் அந்த நாடுகளின் மனிதாபிமான தேவைகளின் போது ஒத்துழைப்புகளை வழங்குவதும் இந்தியாவின் கொள்கையாகக் காணப்படுகின்றது என் றும் அவர் தெரிவித்துள்ளார்.

## சு.க. மாநாட்டில் கலந்துகொள்வதற்கு நிபந்தனை விதிக்கிறார் டலஸ் அழகப்பெரும!


கொழும்பு, செப். 03

ஐக்கிய தேசியக் கட்சியினுடனான கூட்டரசிலிருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி விலகிக் கொள்வதற்கான ஆலோசனையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த ஆலோசனைக்கு சம்மதித்தால் மட்டுமே பொது எதிரணியிலுள்ள தன்னைப் போன்ற பலர் அக்கட்சியின் 66ஆவது ஆண்டு விழாவில் கலந்து கொள்வதைப் பற்றித் தீர்மானிக்க முடியுமென அவர் தெரிவித்துள்ளார்.

ஆண்டுவிழா வைபவத்தில் கலந்து கொள்வதற்கான அழைப்பு இதுவரை பொது எதிரணியில் எவருக்கும் வரவில்லை எனவும், அவ்வாறு அழைப்பு வந்தாலும் தங்களது நிபந்தனையை ஏற்றுக்கொள்ள சம்மதித்தால் மாத்திரமே தங்களில் சிலர் அந்த வைபவத்தில் கலந்து கொள்வதற்கு முயற்சி செய்வார்கள் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## சுதந்திரக் கட்சியின் 66 ஆவது மாநாட்டில் மஹிந்தர் கலந்து கொள்ள மாட்டாராம்!



கொழும்பு, செப். 03

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 66 ஆவது வருடாந்த மாநாட்டில் தான் கலந்து கொள்ளப் போவதில்லை என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கட்சியின் மாநாட்டில் கலந்துகொள்வீர்களா என ஊடகவியலாளர்கள் இதன் போது அவரிடம் கேள்வி எழுப்பினர்.

இதற்கு பதிலளித்த அவர், மாநாட்டில் பங்கேற்காதிருக்க தமது தரப்பினர் தீர்மானித்துள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் தொடர்பு கொண்டிருப்பதால், மாநாட்டில் கலந்து கொள்ளவேண்டாம் எனத் தமது தரப்பினர் கூறினர் எனவும் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

(க)

# பல்கலைக்கழகத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் பெயர்ப் பட்டியல் விரைவில்!

2016 - 2017 ஆம் ஆண்டு பல்கலைக்கழகக் கல்வி ஆண்டுக்காகத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பெயர்ப் பட்டியல் இம்மாத நடுப் பகுதியில் பல்கலைக் கழகங்களுக்கு அனுப்பி வைக்கப் படவுள்ளன என பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மொஹான் சில்வா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இம்முறை பல்கலைக்கழக கல்விநடவடிக்கைகளுக்காகப் பொதுவான அனுமதியின் கீழ் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 29 ஆயிரத்து 696.

தற்பொழுது நிலவும் வெற்றிடங்கள் நிரப்பப்பட்ட பின்னர் இந்தப் பெயர்ப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

இம்முறை பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகள் ஒக்ரோபர் மாதத்தில் ஆரம்பிக்கப்படும்.

வெற்றிடங்கள் இல்லாமையால் மொறட்டுவ பல்கலைக் கழகத்தின் பொறியியல்பீட கல்வி நடவடிக்கைகள் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பட் டியலுடன் மகா பொல புலமைப் பரிசில்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய தகுதியுடைய மாணவர்களின் பட்டியலும் சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறியுள்ளார்

(க)



# பஞ்சகவ்வியத்தின் மகிமை!

நவரட்ணம் பரமேஸ்வரன்

பஞ்சகவ்வியம் தெளிக்காமல் எந்த ஒரு நல்ல காரியமோ கெட்ட காரியமோ இந்துக்களின் வாழ்வில் இடம்பெறுவதில்லை. திருமணம், புதுமனைப் புகுவிழா, பூப்புனித நீராட்டு, மரணச்சடங்கு, அந்தி யேஷ்டி போன்ற சகல கிரியைகளின் போதும் பஞ்சகவ்வியம் தயாரிக்கப்பட்டு தெளிக்கப்பட்ட பின்னரே கிரியைகள் ஆரம்பிக்கப்படும். அதே போல் கோயில் கிரியைகள் தொடங்கும் போதும் பஞ்சகவ்வியம் தெளித்த பின்னரே கிரியைகள் ஆரம்பிக்கப்படுவது வழக்கம்.

பால், அதன் அரைவாசியளவு தயிர், தயிரின் அரைவாசியளவு நெய், நெய்யின் அரைவாசியளவு கோசலம் (பசு மாட்டின் சிறுநீர்) அதன் அரைவாசியளவு கோமயம் (சாணம்) சேர்த்து தயாரிக்கப்படுவது தான் பஞ்சகவ்வியம்.

பஞ்சகவ்வியம் ஒரு சிறந்த கிருமிநாசினி என்பதை அண்மையில் தான் இந்திய விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர். தமிழ் நாட்டில் பஞ்சகவ்வியம் பெரிய தொட்டிகளில் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது. தமிழ் நாட்டில் விவசாய பல்கலைக்கழகங்களும் தனியார் நிறுவனங்களும் பஞ்சகவ்விய உற்பத்தி விற்பனை என்பவற்றில் ஈடுபட்டு வருகின்றன. ஆரம்பத்தில் பஞ்சகவ்விய பரிசோதனைக்கு மறுப்புத்தெரிவித்த இந்திய விஞ்ஞானிகள் பின்னர் வேண்டாவெறுப்பாக பஞ்சகவ்வியத்தை பரிசோதித்துப் பார்க்க உடன்பட்டனர்.

பயிர் விதையியல் துறை, விளையியல் துறை, உழவியல் துறை போன்றவற்றில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் முடிவுகள் ஆச்சரியப்படத்தக்க வகையில் அமைந்திருந்தன. பஞ்சகவ்வியம் தெளித்த வயல்களில் அமோக விளைச்சல் காணப்பட்டது. இதனையடுத்து 2007 ஆம் ஆண்டு பஞ்சகவ்வியத்தை ஒரு சிறந்த கிருமிநாசினி என்பதை இந்திய விஞ்ஞானிகள் அங்கீகரித்துள்ளனர்.

பொதுவாக செடிகளில் வளர்ச்சிதை மாற்றம் 35% நடக்கும் ஆனால் பஞ்சகவ்வியம் தெளித்த செடிகளில் அது 100% காணப்பட்டது அத்துடன் காய்கறிகளின் நிறையும் கூடுதலாக இருந்தது என்கிறார் கோயம்புத்தூர் வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 36 ஆண்டுகள் பல்வேறு பதவிகளில் பணியாற்றி ஓய்வு பெற்ற பின் பஞ்சகவ்வியம் தயாரிக்கும் நிறுவனத்தை ஆரம்பித்துள்ள பேராசிரியர் வடிவேல்.

இப்போது வறட்சி காரணமாக விவசாயிகள் தற்கொலை செய்து கொள்ளும் சம்பவங்கள் பற்றி ஊடகங்களில் செய்திகள் வருகின்றன ஆனால் பஞ்சகவ்வியத்தை உபயோகித்து விவசாயத்தி லீடுபடும் விவசாயிகளால் பஞ்சத்திலும் 50% ஆவது அறுவடை செய்ய முடியும் என்கிறார் கோயில் பிரசாதமாக இருந்த பஞ்சகவ்வியத்தை கிருமி நாசினியாக மாற்றிய டாக்டர் கொடுமுடி நடராஜன். ( இவர் ஒரு MBBS மருத்துவர்)

தமிழ்நாட்டில் விவசாயத்துறையில் கலாநிதிப்பட்டம் பெற்ற நான்கு மாணவர்கள் தமது ஆய்வுக்காக பஞ்சகவ்வியத்தை தெரிவு செய் துள்ளனர். இப்போது மலேஷியா, ருவாண்டா, பிரேசில், இந்தோனேஷியா போன்ற நாடுகளில் பஞ்சகவ்வியம் பாவனையிலுள்ளது. ஒரு ஏக்கர் நிலத்திற்கு மூன்று லீற்றர் பஞ்சகவ்வியத்தை நூறு லீற்றர் தண்ணீரில் கலந்து பதினைந்து நாள்களுக்கொரு முறை தெளித்தால் போதும் என பஞ்சகவ்வியத்தை உற்பத்தி செய்து விற்பனை செய்து வரும் நிறுவனங்கள் விளம்பரம் செய்து வருகின்றன. பஞ்சகவ்வியம் உற்பத்தி செய்து விற்பனை செய்து வரும் நிறுவனங்கள் ஒருலீற்றர் பஞ்சகவ்வியம் இருநூறு இந்திய ரூபாவாக விற்பனை செய்து வருகின்றன.






பஞ்சகவ்வியம் தெளித்த விவசாய நிலங்களில் பெறப்பட்ட விளைச்சல் அதிகரிப்பு புள்ளி விவரம் கீழே தரப்பட்டுள்ளது.

**நெல்:**

ஒரு நெல்லில் 300 நெல் மணிகள் காணப்பட்டதுடன் பதினைந்து நாள்களுக்கு முன்னதாகவே அறுவடை செய்யக்கூடிய நிலை காணப்பட்டது . நிறை 20 வீதத்தால் அதிகரித்து காணப்பட்டது.

**மஞ்சள்:**

விளைச்சல் அதிகமாக காணப்பட்டதுடன் பூச்சி புழுக்களின் தாக்கமும் குறைவாகக்காணப்பட்டது.

**சோளம், கச்சான், கரும்பு, கோதுமை, சூரியகாந்தி** போன்றவற்றுக்கு பஞ்சகவ்வியம் சிறந்த கிருமிநாசினியாகக் காணப்பட்டது.

வாழைப்பழத்திற்கு பஞ்சகவ்வியத்தை தெளித்த பின்னர் குலையிலுள்ள பழங்கள் யாவும் ஒரே அளவாக காணப்பட்டன.

பஞ்சகவ்வியம் தெளித்த மரங்களின் இலைகள் பெரிதாக காணப்பட்டன. கிளைகள் நீண்டு காணப்பட்டதுடன் அதிகளவு பழங்களையும் பெற முடிந்தது. இரசாயன கிருமிநாசினிகள் உரங்கள் என்பவற்றைப் பாவித்து பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலங்களில் பஞ்சகவ்வியத்தைப் பாவித்து பயிர்ச்செய்கை மேற்கொண்ட போது 15% விளைச்சல் அதிகமாக காணப் பட்டது.

இரசாயன கிருமிநாசினிகளை பாவிக்கும் போது அவை நுண்ணுயிரினங்களை சித்திரவதை செய்து கொல்கின்றன. பஞ்சகவ்வியத்தை பாவிக்கும் போது நுண்ணங்கிகளுக்கோ மனிதருக்கோ எந்தவிதமான தீங்கும் ஏற்படுவதில்லை.

**ஆயுர்வேத நிவாரணி**

பஞ்சகவ்வியம் விவசாய கிருமி நாசினியாக மட்டுமல்ல சிறந்த ஆயுர்வேத நிவாரணியாகவும் பயன்படுகிறது. பஞ்சகவ்வியம் அல்சர், வயிற்றுக் கோளாறு, இருமல், கொழுப்பு, நீரிழிவு, இரத்த அழுத்தம், மாரடைப்பு, ஆஸ் துமா, கசம், பாரிசவாதம், என்பவற்றுடன் சகலவிதமான காய்ச்சல்களையும் குணமாக்குவதுடன் ஆரம்ப கட்டப் புற்றுநோய், தோல்வியாதிகள், தடிமன், போன்றவற்றையும் குணமாக்குகிறது அத்துடன் உடலில் இரத்த ஓட்டத்தையும் சமப்படுத்துகிறது என்கிறார் டாக்டர். கொடுமுடி நடராஜன். எச்.ஐ.வி தொற்றுள்ளவர்களின் மரணத்தையும் கூட தள்ளிப்போட முடியும் என்கிறார்.

பஞ்சகவ்வியத்தின் மகிமை பற்றி கூறுவதானால் அண்மையில் பாரிஸில் நடைபெற்ற காலநிலை மாற்றம் தொடர்பான மாநாட்டில் கலந்து கொண்ட இந்திய அமைச்சர் தெரிவித்ததை இங்கு சுட்டிக்காட்டுவது பொருத்தமாக இருக்கும். இந்த மாநாட்டில் இந்திய அமைச்சர் விவசாய நிலங்களில் பஞ்சகவ்வியத்தை பயன்படுத்துவதன் மூலம் காலநிலை மாற்றத்திற்குத் தீர்வு காணலாமெனக் கூறியுள்ளார்.

இலங்கையில் சிறுநீரக நோயாளிகளினதும் புற்றுநோயாளிகளினதும் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. நிலத்தடி நீர் மாசடைந்து விட்டது. இதற்குக்காரணம் அளவு கணக்கில்லாத உரப்பாவனையும் கிருமிநாசினிப் பாவனையுமே. அத்துடன் சர்வ தேச ரீதியில் தடை செய்யப்பட்ட கிருமிநாசினிகள் கூட வேறு பெயர்களில் இலங் கையில் விற்பனை செய்யப்படுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

வடபகுதியில் விவசாய நிலங்களை கிருமிநாசினிகளின் விளம்பரங்கள் ஆக்கிரமித்துள்ளன. எந்த வித கட்டுப்பாடுமில்லாமல் வயல்களிலும் விவசாய நிலங்களிலும் கிருமி நாசினி விளம்பரங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

எமது மக்களை நோயணுகா வண்ணம் பாதுகாக்க வேண்டுமானால் நம்மாழ்வார் கொடுமுடி நடராஜனின் பஞ்சகவ்வியத்தை இலங்கையிலும் அறிமுகம் செய்வதே ஒரே வழி. விவ சாய திணைக்களம், விவசாய ஆராய்ச்சி நிலையம், பல்கலைக்கழக விவசாயபீடங்கள் என்பன பஞ்சகவ்வியத்தை விவசாயிகள் மத்தியில் அறிமுகம் செய்து ஊக்குவிக்க முன் வர வேண்டும். ★



# படையினருக்கு எதிராக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள்; பொருட்படுத்தாமல் அவர்களுக்கு ஆதரவு வழங்குவோம்!

## அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவிப்பு

கொழும்பு, செப். 03

இலங்கைப் படையினருக்கு எதிராக முன்வைக்கப்படும் எந்தவொரு குற்றச்சாட்டுக்களையும் பொருட்படுத்தாமல் அவர்களுக்கு நாம் தொடர்ந்தும் ஆதரவு வழங்குவோம் என வீடமைப்பு மற்றும் நிர்மாணத் துறை அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

திஸ்ஸமகாராம பகுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

படையினருக்கு எதிராக வழக்கு தொடுக்கப்படும் போது அரசு அதனை மௌனமாகப் பார்த்துக்கொண்டிருக்காது .



முன்னாள் ஐ.நா.மனித உரிமை பிரதிநிதியான யஸ்மின் சூக்காவின் தனியார் நிறுவனமொன்று பிரேசிலுக்குச் சென்று அங்கு முன்னாள் இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரியவிற்கு எதிராக வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான சம்பவங்களை அரசாங்கம் என்ற வகையில் தாம் பொறுத்துக்கொண்டிருக்க மாட்டோம்.

இலங்கையின் யுத்த வெற்றி வீரர்கள் மீது யார் விரல் நீட்டினாலும் அரசு நிபந்தனையின்றி அவர்கள் பக்கம் நின்று செயற்படும்.

முன்னைய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புத் தலைமையிலான அரசு நாட்டின் படைவீரர்களைச் சர்வதேச அரங்கில் காட்டிக்கொடுத்திருந்தது.

முன்னாள் செயலாளர் நாயகம் பான் கீ மூன் தலைமையிலான ஐக்கிய நாடுகள் சபை, இலங்கையில் யுத்தக் குற்றங்கள் நடைபெற்றுள்ளன என்ற முடிவுக்கு எவ்வாறு வந்தது.

கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி யுத்தத்தை வெற்றிகொண்ட நாட்டின் படையினருக்கு எமது நன்றிகளைத் தெரிவிக்கிறோம்

எவ்வாறாயினும், யுத்த வெற்றிக்களிப்பானது போகப் போக மங்கிப் போனது. பான் கீ மூன் இலங்கைக்கு வருகை தந்து , மிகவும் நாட்டுப்பற்று அற்ற உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்தார்.

அதன் பின்னர் இந்த உடன்படிக்கையில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கைச்சாத்திட்டார். மோதல்களின் போது யுத்தக் குற்றங்கள் இடம்பெறமையை ஏற்றுக்கொள்ளும் வகையில் இந்த உடன்படிக்கை அமைந்திருந்தது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## நாளை மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கள் காலை 9.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ் பிரதேசத்தில்** மானிப்பாய் ஒரு பகுதி, அரசடி, கட்டுடை, பிப்பிலி ஆகிய இடங்களிலும் – **வவுனியா பிரதேசத்தில்** பூவரசங்குளத்திலிருந்து செட்டிக்குளம் வரை, செட்டிக்குளம் வைத்தியசாலை, செட்டிகுளம் தொலைத்தொடர்பு நிலையம், செட்டிகுளம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆகிய பிரதேசங்களிலும மின்சாரம் தடைப்படும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

## போர் முடிவுக்கும் வந்தமைக்கும் தனக்கும் தொடர்பில்லை என்கிறார் ஜெகத் ஜயசூரிய

கொழும்பு, செப்.03

தம்மீது சுமத்தப்பட்ட போர்க் குற்றச்சாட்டுக்களை முன்னாள் இராணுவத் தளபதியும் பிரேசில் நாட்டுக்கான முன்னாள் தூதுவருமான ஜெகத் ஜயசூரிய மறுத் துள்ளார்.

இறுதிப் போர் நடவடிக்கைகளில் இருந்து தம்மை, அப்போதைய இராணுவத்தளபதி சரத் பொன்சேகா விடுவித்தமைக்கான எழுத்து மூல ஆவணம் தம்மிடம் உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜெகத் ஜயசூரியவின் மீது பிரேசிலில் போர்க் குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட நிலையில் அவர் நாட்டுக்குத் திரும்பினார்.

இந்த நிலையில், நேற்று சரத் பொன்சேகா, ஜெகத் ஜயசூரியவின் மீது உள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சாட்சியங்கள் உள்ளது எனத் தெரிவித்திருந்தார்.

இதனையடுத்தே ஜெகத் ஜயசூரிய தமக்கும் இறுதிப் போர் நடவடிக்கைகளுக்கும் தொடர்பில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

# மடு வலய 150 மாணவருக்கு கற்றல் உபகரணங்கள்!

மன்னார், செப். 03

மன்னார் புனர்வாழ்வு அமையத்தின் ஏற்பாட்டில், மடு வலயக் கல்விப் பணிமனை பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு நேற்று கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

மன்னார் புனர்வாழ்வு அமையத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில், தட்சனா மருதமடு ம.வி பாடசாலையில் இடம்பெற்ற இந்த நிகழ்வின் போது 150 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.





இந்த நிகழ்வில் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், அருட்தந்தை, மாணவர்கள் மற்றும் மன்னார் புனர்வாழ்வு அமையத்தின் உறுப்பினர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

## விஸ்மடுவில் குளவித் தாக்குதலுக்கு இலக்காகி ஐவர் காயம்!

முல்லைத்தீவு,செப்.03

முல்லைத்தீவு, விஸ்வமடு மேற்கு பகுதியில் குளவி கொட்டியதில் 5 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விஸ்வமடு மேற்கு அதிசய விநாயகர் ஆலயத்திற்கு அருகில் உள்ள நாவல் மரம் ஒன்றில் இருந்த குளவிக்கூடு கலைந்ததில் இந்தச் சம்பவம் ஏற்பட்டுள்ளது.

வறட்சி நிவாரண சிரமதான பணிக்காக வந்தவர்களே குளவிகளின் தாக்குதலுக்கு இலக்காயினர்.

காயமடைந்த ஐவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனதுடன் 65 வயதுடைய தங்கவேலு மகேஸ்வரி என்பவர் மயக்கமடைந்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## கிளிநொச்சியில் வாலிபர் ஒன்றுகூடல்!



தென்னிந்திய திருச்சபை யாழ்ப்பாண ஆதீனத்தின் 2017ஆம் ஆண்டுக்கான வாலிபர் ஒன்றுகூடல் நேற்று முன்தினம் கிளிநொச்சியில் இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி கிறிஸ்து அரசர் ஆலயத்தில் இடம்பெற்ற இந்த வாலிபர் ஒன்றுகூடலில் கொழும்பு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் உள்ளிட்ட பல பகுதிகளிலிருந்தும் 150 மேற்பட்ட வாலிபர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

பலன் தரும் கிறிஸ்து எனும் தொனிப்பொருளில் இடம் பெற்ற இந்த ஒன்றுகூடல் தென்னிந்தியத் திருச்சபை நிறைவாழ்வு மையத்தின் அனுசரணையில் இடம் பெற்றது.

இதன்போது, ஆலோசனைகள், வேதாகம படிப்புக்கள், விளையாட்டுக்கள், குழு செயற்பாடுகள் உள்ளிட்ட பல விடயங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இதில் யாழ். பேராயர், தென்னிந்திய திருச்சபை தூத்துக்குடி திருமண்டலத்தின் சிறுவர் ஊழியத்தின் பெரிய நண்பர் குழுவின் செயலாளர் ஸ்ரேல் ஆகியோர் ஆலோசனைச் செய்திகளை வழங்கியுள்ளனர்.

கொழும்பு திருச்சபை ஊழியன் பத்மதயாளன், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு குருமுதல்வர்கள், திருச்சபை குருவானவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## முன்னேஸ்வரம் ஆலய மஹோற்சவம்!

சிலாபம், செப். 03

சிலாபம் - முன்னேஸ்வரம் ஸ்ரீவடிவாம்பிகா சமேத ஸ்ரீ முன்னைநாதஸ்வாமி ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் திரு விழாவில் தீமிதிப்பு நிகழ்வு நேற்றுமுன்தினம் சிறப்பாக இடம் பெற்றுள்ளது.

இதன்போது கரகம் உள்வீதி, வெளிவீதி வலம் நடைபெற்றுள்ளது.

மேலும், இந்த நிகழ்வில் பக்தர்கள் பெருந்திரளாகத் தீ மிதிப்பில் கலந்து கொண்டனர்.

# வவுனியா உக்குளாங்குளத்தில் டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டம்!

வவுனியா உக்குளாங் குளத்தில் நேற்று காலை சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எஸ். லவன் தலைமையில் பொதுசுகாதாரப் பரிசோதகர்கள், சிவில் பாதுகாப்புகுழு, பிரதேசசபை ஊழியர்கள், பொலிஸார், பொதுமக்கள் என ஒன்றிணைந்து வவுனியா உக்குளாங்குளம் பகுதிகளில் டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்தும் விசேட டெங்கு ஒழிப்பு செயற்றிட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

நேற்றுக் காலை 8.30மணியளவில் ஆரம்பமாகிய இந்தச் செயற்றிட்டம் மாலை 4.30 மணிவரையும் இடம்பெற்றுள்ளது.

உக்குளாங்குளம் டெங்கு பெருகும் இடங்களை இனங்கண்டு அவற்றை அழித்தல், மேலும் டெங்கு நுளம்பு பெருக்கத்தைக் குறைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளல், தமது இருப்பிடங்களை துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளாத உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளல் போன்ற நடவடிக்கை இடம்பெறவுள்ளதாகப் பொதுச்சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.

துப்புரவற்ற டெங்கு பரவும் இடங்களைகண்டறியப்பட்ட பகுதிகளுக்கு எச்சரிக்கையாக சிவப்பு அறிவிப்புக்கள் விடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தச் செயற்திட்டமானது இன்றும் நடைபெறவுள்ளது.

# இந்த வாரம் உங்களுக்கு எப்படி?

**சந்திராஷ்டமநாள்:** மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள் இந்த நட்சத்திரங்களில் உதய மானோர் சுபகருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்க வேண்டும்.

**03.09.2017**
**09.09.2017**

2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஆவணித் திங்கள் 18 ஆம் நாள் துவாதசித் திதி பகல் 11.13 மணி வரை. பின்னர் திரயோதசி. நட்சத்திரம்: உத்தராடம் காலை 9.37 மணி வரை. பின்னர் திருவோணம். அமிர்தயோகம் முழுவதும். பிறந்த நட்சத்திர வழிபாடு: திருவோணம்.

ராகுகாலம்:- மாலை 4.44 மணி முதல் 6.16 மணி வரை.

சுபநேரம்:- காலை 9.04 மணி முதல் 10.34 மணி வரை.

திவசம் செய்ய வேண்டிய திதி:- ஆவணி மாத வளர்பிறை திரயோதசி.

கணிப்பு: 'ஜோதிடமணி' பிரம்ம ஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா (ஜே.பி.)



## மேஷம்:

விருத்தியான வாரம். பணப் புழக்கம் சரளமாக இருக்கும். குடும்ப ஒற்றுமை மேம்படும். ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரம் நல்ல லாபத்தைத் தரும். உத்தியோகத்தருக்குத் திறமையின் அடிப்படையில் உயர்வுகள் கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் மேன்மை அடைவார்கள். கலைஞர்களுக்குத் தொடர் வாய்ப்புக்களால் வருமானம் பெருகும். வாழ்க்கைத்தரம் உயரும். தொழிலாளர்கள் தொழில் வாய்ப்புக்கள் பெற்று மகிழ்வார்கள். பெண்கள் சுயதொழிலில் ஆதாயம் பெறுவார்கள். திருமணமாகாதோருக்கு மணவாழ்க்கை அமையும். சகோதர வழியால் நன்மைகள் உண்டாகும்.



## ரிஷபம்:

யோகமான வாரம். பணபலம் அதிகரிக்கும். உடலில் தைரியம், சுறுசுறுப்பு உண்டாகும். குடும்பவாழ்க்கை அன்பும், பண்பும் நிறைந்து காணப்படும். வியாபாரம் விறுவிறுப்பாக நடக்கும். தொழிலில் முன்னேற்றம் உண்டாகும். அரசவழியால் காணி கிடைத்து வீடு கட்டத் தொடங்குவார்கள். வாகனயோகம் உண்டாகும். ஆடை, அணிமணிகள் சேரும். பெண்கள் வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்கி மகிழ்வார்கள். மூதாதையர்களின் சொத்து வந்துசேரும். சிலருக்குத் தொழில் வாய்ப்புக் கிடைத்து வெளிநாடு செல்லும் யோகம் உண்டாகும்.



## மிதுனம்:

குழப்பமான வாரம். மனதில் சஞ்சலம் ஒருவித கவலை, பயம் காணப்படும். பணவரவு குறையும். குடும்பத்தில் வீண் சண்டை, சச்சரவு உண்டாகும். வியாபாரத்தில் பொருள்கள் தேங்கிக் கிடக்கும். உத்தியோகத்தர்களுக்குக் கடின உழைப்பால் உடலும், மனமும் சோர்வடையும். மாணவர்களுக்கு ஞாபக மறதிக்குறைவால் தேர்வில் தோல்வியைத் தழுவ நேரும். விவசாயிகளுக்குப் பயிர்கள் அழிந்து சேதமுண்டாகும். திருமணப் பேச்சுகள் குழம்பிய நிலையில் இருக்கும். தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புக்கள் குறைந்தபடியால் செலவைச் சமாளிக்க முடியாமல் தடுமாறுவார்கள்.



## கடகம்:

சமபலன்கள் உள்ள வாரம். பொருளாதாரம் சுமாராக இருக்கும். செலவினங்கள் அதிகரிக்கும். குடும்ப அமைதி பேணப்படும். எடுக்கும் முயற்சிகள் தாமதமாகும். வியாபாரம் ஏறு, இறங்கு முகமாக நடக்கும். தொழில் அலைச்சல்கள் அதிகரிக்கும். உத்தியோகத்தர்களுக்கு உயர்வுகள் தள்ளிப்போகும். கடின உழைப்பால் உடல் சோர்வடையும். தொழிலாளர்கள் தீவிர முயற்சியால் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்வார்கள். சுயதொழில் தொடங்க எண்ணியவர்களுக்கு வங்கிகளின் உதவிகள் குறையும்.



## சிம்மம்:

உயர்வான வாரம். வருமானம் உயர்வடையும். குடும்பத்தில் அன்னியோன்யம் அதிகரிக்கும். செய்யும் தொழிலில் உயர்வுகள் கிடைக்கும். சமூக அந்தஸ்து உயரும். வியாபாரம் நன்கு அபிவிருத்தி அடையும். கலைஞர்களுக்கு அரச விருதுகளும், பரிசுகளும் கிடைக்கும். உத்தியோகம் செய்யும் பெண்களுக்கு வரவேற்பு அதிகரிக்கும். தொழிலாளர்களுக்கு வருமானம் உயர்வடையும். சகோதர வழியால் நன்மைகள் உண்டாகும். பிள்ளைகளால் பெருமையும், மகிழ்ச்சியும் உண்டாகும். புதிய வேலைவாய்ப்புகள் கிடைக்கும். கொடுக்கல், வாங்கலில் புரிந்துணர்வு அதிகரிக்கும்.



## கன்னி:

மகிழ்ச்சியான வாரம். பணபலம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி ததும்பும். வராத கடன்பணம் வந்துசேரும். உறவினர்கள் வரவால் மகிழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரம் சுறுசுறுப்பாக நடக்கும். தொழிலில் முன்னேற்றம் உண்டாகும். சகோதர உறவு வலுவடையும். வெளிநாடு செல்லும் எண்ணம் நிறைவேறும். நீண்டகாலமாகக் காணாதிருந்த சகோதரியைக் கண்டு மகிழும் பாக்கியம் கிட்டும். உத்தியோகத்தில் பதவி உயர்வு, ஊதிய உயர்வு என்பன கிடைக்கும். பெண்களுக்கு விவாக காரியங்கள் ஒப்பேறும். பிரிந்த குடும்பங்கள் மீண்டும் இணைய வாய்ப்பு உண்டாகும்.



## துலாம்:

சலனம் மிகுந்த வாரம். மனம் ஒருவித படபடப்புடன் இருக்கும். பணம் பற்றாக்குறையாக இருக்கும். குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். சுயதொழிலில் வருமானம் குறையும். குடும்பத்தில் வீண் பிரச்சினைகள் உண்டாகும். சகோதரியைப் பற்றிய கவலை ஏற்படும். வாடகை வீட்டில் உள்ளவர்களுக்கு எதிர்பாராத தொல்லைகள் உண்டாகும். தொழிலில் கவனக்குறைவால் உயர் அதிகாரிகளின் கண்டனத்துக்கு ஆளாக நேரும். தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புகளின்மையால் குடும்ப கஷ்டங்கள் அதிகரிக்கும். கொடுக்கல், வாங்கலில் சிக்கல்கள் உண்டாகும்.



## விருச்சிகம்:

மத்திம வாரம். பொருள் வாரவு சுமாராக இருப்பினும், செலவுகள் அளவுக்கதிகமாகும். நினைத்த காரியங்கள் தடை, தாமதங்களின் மேல் நிறைவேறும். தேக சுகக் குறைவால் மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். சிலர் தம் வீடுகளைத் திருத்தும் பணியில் செலவழிப்பார்கள். வியாபாரம் சுமாராக நடக்கும். தொழில் விஷயமாய் நிறைய அலைய வேண்டியிருக்கும். உத்தியோகத்தில் வேலைச்சுமை, பொறுப்புகள் அதிகரிக்கும். திருமண காரியங்கள் இழுபறி நிலையில் இருக்கும். கொடுக்கல், வாங்கலில் அவதானம் தேவை.



## தனுசு:

அதிஷ்டமான வாரம். தனலாபம் அதிகரிக்கும். குடும்பத்தில் நெருக்கம், பாசம் அதிகரிக்கும். படித்து முடித்த மாணவர்களுக்குத் திறமைக்கேற்ப வேலை கிடைக்கும். வியாபாரத்தில் முன்னேற்றமும், வருவாயும் அதிகரிக்கும். அரச உத்தியோகத்தர்களுக்குக் கௌரவப் பதவிகள் கிடைக்கும். மாணவர்களுக்கு அரச உதவிப்பணமும் கிடைக்கும். பெண்களுக்கு அரச உதவியால் தொழிற்பயிற்சியுடன் கூடிய வேலை வாய்ப்பும் கிடைக்கும். இதுவரை பிரச்சினையாய் இருந்த பூர்வீக சொத்துகள் கைக்கு வந்துசேரும். திருமணமாகாதவர்களுக்கு அதற்கான வாய்ப்புகள் கிடைக்கும்.



## மகரம்:

அனுகூலமான வாரம். பணம் சரளமாகப் புழங்கும். குடும்பத்தில் அன்னியோன்யம் அதிகரிக்கும். வேலை தேடுவோருக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கும். பிரிந்திருந்த உறவினர்கள் மீண்டும் ஒன்று சேரும் வாய்ப்பு உண்டாகும். சகோதர உறவு பலமடையும். சிலருக்கு வெளிநாட்டுப் பயணம் அனுகூலமாகும். திருமண முயற்சிகள் வெற்றியைத் தரும். மாணவர்களுக்கு உயர் கல்வி கற்க வாய்ப்புகள் உண்டாகும். வியாபாரிகளுக்கு வெளியூர் ஒப்பந்தங்கள் அனுகூலமாகும். தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கும். உத்தியோகத்தில் உயர்வுகள் அனுகூலமாகும்.



## கும்பம்:

யோசனையான வாரம். மனமுடைவு ஏற்படும். எண்ணிய காரியங்கள் கைகூடாமற்போகும். தேகநிலை பாதிப்படையும். குடும்பச் செலவுகள் அதிகரிப்பால், கடன்பட நேரும். சிலர் வாங்கிய கடனைத் திரும்பத் தராமல் ஏமாற்றுவார்கள். திட்டமிட்ட வெளிநாட்டுப் பயணம் கானல் நீராகிவிடும். வேலை தேடுவோருக்கு வேலை கிடைப்பது கடினம். உறவினர்களால் வீண் தொல்லைகள் உருவாகும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் குறையும். உத்தியோகத்தர்களின் கோரிக்கைகள் தாமதமாகும். கொடுக்கல், வாங்கலில் பிரச்சினைகள் உண்டாகும்.



## மீனம்:

மேன்மையான வாரம். பொருளாதாரம் ஏற்றமடையும். குடும்ப உறவு மேம்படும். வியாபாரம் மேன்மையடையும். செய்யும் தொழிலில் முன்னேற்றம் உண்டாகும். மாணவர்கள் கல்வியில் முதன்மை அடைவார்கள். இதுவரை வாட்டி வதைத்த நோய்கள் நீங்கி சுகமடைவார்கள். சகோதர உறவு வலுவானதாக இருக்கும். உத்தியோகத்தர்கள் திறமையான செயற்பாடுகளால் உயர் அதிகாரிகளின் பாராட்டைப் பெறுவார்கள். நண்பர்கள் தக்கநேரத்தில் உதவுவார்கள். கொடுக்கல், வாங்கலில் நாணயம் உண்டாகும்.

# வாக்கியமா திருக்கணிதமா சரி?




வாக்கியமா, திருக்கணிதமா சரி? என்று அறிந்து சரியான பஞ்சாங்கத்தைப் பின்பற்றவே எல்லோரும் விரும்புகிறீர்கள். வாக்கியம் பிழை, திருக்கணிதமே சரி என்று நிரூபிப்பதற்கு மிகச் சிறந்த இன்னொரு ஆதாரத்தை இக்கட்டுரையில் பாருங்கள். இந்த ஆதாரம் உங்களுடைய கைத்தொலைபேசி, கொம்பியூட்டரில் உள்ள இன்ரநெற்றில் உள்ளது. அமெரிக்காவின் நாஸா ஆகாயக் கலண்டர் இணையத் தளத்தில் இருக்கிறது. அதில் அமாவாசை, பூரணை விவரங்கள் மிகவும் துல்லியமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றுடன் வாக்கிய, திருக்கணித பஞ்சாங்கங்களில் உள்ள நேரங்களை ஒப்பிட்டு எது சரி என்று நீங்களே தீர்ப்பு வழங்கலாம்.

சூரிய, சந்திர கிரகண விவரங்களில் உள்ள பிழைகள் பிடிபடாது இருப்பதற்கு இவற்றை இரகுநாதையர் திருக்கணிதத்திலிருந்து கொப்பியடித்துக் குறிப்பிடுகிறார். நீங்கள் இன்ரநெற்றில் நாஸா ஆகாயக் கலண்டரைப் பார்ப்பீர்கள். அதில் உள்ள அமாவாசை, பூரணை விவரங்களை ஒப்பிட்டுப் பார்த்து வாக்கியம் பிழை என்று கண்டுபிடித்து விடுவீர்கள். சகல மாதங்களிலும் பிழைகள் உள்ளன. இவை பிடிபட்டால் வாக் கியத்தின் கதை கந்தலாகி விடும்.

இரகுநாதையரே! இதிலிருந்து தப்புவதற்கு என்ன செய்யப் போகிறீர்? பிழையான வாக்கியக் கணிப்பைப் பின்பற்றிக் கலண்டர் வெளியிடும் மெய்கண்டான், லீலா, அஷ்டலட்சுமி.. கலண்டர் கம்பனிகளே! உங்களது கலண்டர்களில் உள்ள பிழைகளும் பிடிபட்டு விடும். நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள். உங்களால் சரியான திருக்கணிதக் கணிப்பைப் பின்பற்றிக் கலண்டர் வெளியிட முடியாதா? திருக்கணிதம் என்றால் நஞ்சா?

இரகுநாதையரே! வாக்கிய பஞ்சாங்கத்தைப் பின்பற்றும் மெய்கண்டான், லீலா, அஷ்டலட்சுமி.. கலண்டர் கம்பனிகளே! இலங்கையில் நடைமுறையில் உள்ள நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின்படி பிழையான பஞ்சாங்கக் கலண்டர் வெளியிட்டு விற்பனை செய்து மக்களைக் குழப்புவது, ஏமாற்றுவது தண்டனைக் குரிய குற்றம் என்று தெரியாதா? பிழையான கலண்டர், பஞ்சாங்கத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி தேவை. இவை 2018 இலும் தொடர்ந்தால், விற்பனைக்கு வந்தவுடன் அதற்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். பத்திரிகைகளில் வெளிவரும் கட்டுரைகளுக்குப் பதில் எழுதாது இருப்பது போன்று, இரகுநாதையர் நீதிமன்றத்திற்குச் சமுகம் அளிக்காது ஒளித்திருக்க முடியாது. நீதிமன்றத்திற்குச் சென்று கேள்விக்கணைகளுக்குப் பதில் அளிக்க வேண்டும்.

இரகுநாதையரே! நாஸா ஆகாயக் கலண்டர் பிழை என்று தகுந்த ஆதாரத்துடன் நிரூபித்து வாக்கியம் சரி என்று உறுதிப்படுத்த முடியுமா? என்று நீதிமன்றத்தில் கேட்டால் என்ன பதில் சொல்லுவீர்? இது மட்டுமல்ல, இன்னும் பல கேள்விகளும் உள்ளன. 2018 இலும் பிழையான வாக்கியக் கலண்டரை தொடர்வதாயின். அதனை அச்சிட ஆரம்பிக்க முன்னர் நல்லதொரு சட்டத் தரணியிடம் ஆலோசனை கேளுங்கள்.

பஞ்சாங்கம் என்பது நம்பிக்கை. அதற்கு எதிராகக் கட்டுரைகள் வெளியிட்டுத் தங்களது நம்பிக்கையைக் குழப்பாதீர்கள், கட்டுரைகளை வெளியிடாதீர்கள் என்று ஒரு சிலர் சொல்கிறார்கள். வாக்கியம் சரி என்று நம்புகிறீர்கள். அது நம்பிக்கையே தவிரச் சரியானதல்ல. பிழையான பஞ்சாங்கத்தைச் சரி என்று நம்புவதால் பிழைப்பீர்களே தவிரப் பிழைக்க மாட்டீர்கள். பிழையான வாக்கிய பஞ்சாங்கத்தைச் சரி என்று உங்களை நம்ப வைத்து ஏமாற்றுகிறார்கள். திருக்கணிதம் விஞ்ஞான, வான சாஸ்திரப்படி சரி என்று நிரூபிக்கப்பட்ட உண்மை.



> நாஸா ஆகாயக் கலண்டரில் அமாவாசை, பூரணை. நீங்களே ஒப்பிட்டுப் பார்க்கலாம்

வாக்கியமா, திருக்கணிதமா சரி? என்ற பிரச்சினை 40, 50 வருடங்களாகத் தொடர்கின்றது. இப்போதும் கட்டுரை எழுதுவதால் என்ன நடக்கப் போகின்றது என்று சிலர் கேட்கிறார்கள். பிழையான பஞ்சாங்கம் தொடரவே வேண்டுமா? இதற்கு ஒரு முடிவு இல்லையா? வாக்கியம் பிழை, திருக் கணிதமே சரி என்று தகுந்த ஆதாரத் துடன் நிரூபித்துக் கட்டுரைகள் வெளிவரும். அதன் பின்னரும் 2018 இற்குரிய பிழையான வாக்கிய பஞ்சாங்கக் கலண்டர்கள் விற்பனைக்கு வந்தால், இந்த விவகாரம் நீதிமன்றம் செல்லும். பிழையாகக் கணிக்கும் இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்தினர் நீதிமன்றத்தை ஏமாற்ற முடியாது.

நாஸா இப்ப வந்தது. வாக்கியம் அப்ப வந்தது. அதையே பின்பற்ற வேண்டும் என்று வாக்கியம் என்ற போதைக்கு அடிமையான சிலர் புலம்புகிறார்கள். இவர்கள் 25 வயசுப் பொம்பிளை இப்ப வந்தது என்று சொல்லி விட்டு, அப்ப வந்த 50 வயசுப் பெண்ணைக் கலியாணம் செய்வார்களா? அந்தக் காலத்திலிருந்து வெளிவருவது நல்லது என்று சொல்லுவதற்குப் பஞ்சாங்கம் சினிமாவும் அல்ல, சாராயமும் அல்ல. சினிமாவில் இப்போது வரும் படங்கள், பாடல்களைவிட 40, 50 வருடங்களுக்கு முன்னர் வந்தவை சிறந்தவை. இப் போது விற்பனையாகும் சாராயத்தில் 5 வருடம் பழமையானதை விட 25 வருடங்களுக்கு முன்னர் தயாரித்தது சிறந்தது. சேட்டு, சேலை, கடிகாரம், தொலைபேசி, கொம்பியூட்டர், வானொலி, தொலைக்காட்சி, கார்... போன்றவற்றில் இப்ப வந்த புதுசு வேண்டும் என்று சொல்பவர்கள், இப்ப வந்த நாஸாவுடன் அப்ப வந்த வாக்கியத்தை ஒப்பிடக்கூடாது என்று கூறுவது விநோதமாக உள்ளது.

இப்போது நேரத்தைத் துல்லியமாகக் காட்டும் மணிக்கூடுகள், கைக் கடிகாரங்கள் உள்ளன. இதனால் முன்னர்; நடைமுறையில் இருந்த கோழி கூவும் நேரம், பொழுது புலரும் நேரம், சூரியன் உச்சிக்கு வரும் நேரம், அந்தி சாயும் நேரம்,...போன்ற அண்ணளவான நேரங்கள் கைவிடப்பட்டன. இவற்றைப் போன்றதே வாக்கிய பஞ்சாங்கம். திருக்கணிதமே மிகவும் துல்லியமான சரியான கணிப்பு.

வாக்கியம் சரி என்று அதீத நம்பிக்கை உள்ள அந்தப் பஞ்சாங்க அபிமானிகளே! வாக்கியத்தில் உள்ள விசுவாசத்தால், அது பிழை என்ற கருத்தை ஏற்பதற்கு உங்களது மனசு மறுக்கிறது. வாக்கியம் பிழை என்று உணர்ந்து, ஏமாற்றி விட்டார்கள் என்று ஆத்திரம் அடையும் போது. அந்தப் பஞ்சாங்கத்திற்கு எதிராகப் போர்க் கொடி பிடிப்பவர்களும் நீங்களாகவே இருப்பீர்கள். நாஸா ஆகாயக் கலண்டர் பிழை, வாக்கியமே சரி என்று தகுந்த ஆதாரத்துடன் நிரூபித்து எவராவது பதில் எழுதினால். அதன் பின்னர் வாக்கியம் பிழை என்று கட்டுரை எழுத மாட்டேன். வாக்கிய பஞ்சாங்க அபிமானிகளே! திருக்கணிதம் பிழை, வாக்கியமே சரி என்று தகுந்த ஆதாரத் துடன் நிரூபித்து இரகுநாதையர் பதில் ஏதாவது எழுதினாரா? இதுவரையில் இல்லை. இதனை நிரூபிக்கக்கூடிய தகுந்த ஆதாரம் வைத்திருக்கும் முதுகெலும்பு உள்ளவர்கள் எவராவது




தகுந்த பதிலடி கொடுக்காது இருப்பார்களா? அவர் ஏன் எவ்வித பதிலும் எழுதவில்லை என்று சிந்தித்தீர்களா? ஏன் பதிலடி கொடுக்கவில்லை என்று அவரை யாராவது கேட்டீர்களா?


நாஸா ஆகாயக் கலண்டரா, வாக்கிய பஞ்சாங்கமா சரி என்று இரகுநாதையரிடம் கேளுங்கள். இவை இரண்டிற்கும் இடையில் அமாவாசை, பூரணை நேரங்களில் வித்தியாசம் இருப்பதால் இவை இரண்டும் சரியாக இருக்க முடியாது. ஒன்று நிச்சயமாகப் பிழை என்று மிகவும் உறுதியாகக் கூறலாம்.

நீல் ஆம்ஸ்றோங்கைச் சந்திர மண்டலத்திற்கு றொக்கற்றில் அனுப்பிச் சாதனை படைத்த அமெரிக்க நாஸாவின் ஆகாயக் கலண்டர் பிழை என்று சித்த சுவாதீனம் உள்ள, படித்தவர்கள் எவருமே சொல்ல மாட்டார்கள். எனவே

கனடாவிலிருந்து
கௌசிகர்

வாக்கியம் பிழை என்று ஒத்துக் கொள்வதிலிருந்து இரகுநாதையர் தப்பவே முடியாது. நாஸா ஆகாயக் கலண்டர் பிழை என்று அவர் சொன்னால், அதனைத் தகுந்த ஆதாரத்துடன் நிரூபிக்கும்படி கேளுங்கள்.

வாக்கியமா, திருக்கணிதமா சரி என்ற சர்ச்சைக்கு நீங்களே முடிவு காண்பீர்கள். சரியான பஞ்சாங்கம் மட்டுமே வேண்டும் என்றால், பிழையானதை ஒழிக்க நீங்கள் தான் குரல் கொடுக்க வேண்டும். நீங்கள் எல்லோரும் குரல் கொடுத்தால் முடியாதது எதுவுமே இல்லை. நீங்கள் வெற்றி வாகை சூடுவீர்கள். சரியைப் பிழை வென்றதாகச் சரித்திரமே இல்லை. ★




நாஸா ஆகாயக் கலண்டருக்கும் இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்திற்கும் இடையில் உள்ள வித்தியாசம், "பிழை" என்று கீழே "ம:நி"இல் குறிக்கப்பட்டுள்ளது

| நாஸா ஆகாயக் கலண்டர் Date | நாஸா ஆகாயக் கலண்டர் Time | இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் Time | பிழை | திதி | நாஸா ஆகாயக் கலண்டர் Date | நாஸா ஆகாயக் கலண்டர் Time | இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் Time | பிழை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 02-01-18 | 07:54 AM | 09:21 AM | 01:27 | பூரணை | 28-06-18 | 10:23 AM | 10:47 AM | 00:24 |
| 17-01-18 | 07:47 AM | 08:26 AM | 00:39 | அமாவாசை | 13-07-18 | 08:18 AM | 09:24 AM | 01:06 |
| 31-01-18 | 06:57 PM | 08:10 PM | 01:13 | பூரணை | 28-07-18 | 01:51 AM | 02:07 AM | 00:16 |
| 16-02-18 | 02:35 AM | 03:08 AM | 00:33 | அமாவாசை | 11-08-18 | 03:28 PM | 04:28 PM | 01:00 |
| 02-03-18 | 06:21 AM | 07:02 AM | 00:41 | பூரணை | 26-08-18 | 05:26 PM | 05:45 PM | 00:19 |
| 17-03-18 | 06:42 PM | 07:07 PM | 00:25 | அமாவாசை | 09-09-18 | 11:31 PM | 12:05 AM | 00:34 |
| 31-03-18 | 06:07 PM | 06:32 PM | 00:25 | பூரணை | 25-09-18 | 08:23 AM | 08:43 AM | 00:20 |
| 16-04-18 | 07:27 AM | 08:03 AM | 00:36 | அமாவாசை | 09-10-18 | 09:17AM | 09:41 AM | 00:24 |
| 30-04-18 | 06:28 AM | 06:46 AM | 00:18 | பூரணை | 24-10-18 | 10:15 PM | 10:59 PM | 00:44 |
| 15-05-18 | 05:18 PM | 06:08 PM | 00:50 | அமாவாசை | 07-11-18 | 09:32 PM | 10:13 PM | 00:41 |
| 29-05-18 | 07:50 PM | 08:15 PM | 00:25 | பூரணை | 23-11-18 | 11:09 AM | 12:07 PM | 00:58 |
| 14-06-18 | 01:13 AM | 02:17 AM | 01:04 | அமாவாசை | 07-12-18 | 12:50 PM | 01:28 PM | 00:38 |
| | | | | பூரணை | 22-12-18 | 11:19 PM | 12:23 AM | 01:04 |

திருக்கணிதத்திலும் நாஸா ஆகாயக் கலண்டரிலும் இருக்கும் நேரங்கள் ஒன்றாக உள்ளன.

வாக்கியத்திலும் நாஸா ஆகாயக் கலண்டரிலும் இருக்கும் நேரங்கள் வித்தியாசமாக உள்ளன.

இலங்கை, இந்தியப் பொது நேரப்படி கணிக்கப்பட்டது. 10-09-18 23-12-18

வாக்கியம் பிழை, திருக்கணிமே சரி என்று நாஸா ஆகாயக் கலண்டர் தெட்டத் தெளிவாக நிரூபித்துள்ளது.




தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா

அதிவலது போராட்டங்களின் ''மிக அருமையானவர்களை'' ட்ரம்ப் பாராட்டியமையும் மற்றும் சார்லட் வில்லின் ''இரு தரப்புகளையும்'' அவர் கண்டித்தமையும் ஐரோப்பிய அதிகாரிகளிடம் இருந்து சரமாரியாக வெள்ளமென விமர்சனங்களைக் கட்ட விழ்த்துவிட்டது. ஜேர்மன் சான் சிலர் அங்கேலா மேர்க்கெல் Deutschland funk க்கு கூறுகையில், அது பயங்கர மானது, அது தீயது. அது இனவாத அதிவலது வன்முறையாகும். அது உலகில் எங்கே நடந்தாலும், முழு பலத்துடன் தீர்மானகரமாகக் கையாளப் பட வேண்டும். - என்றார்.

**''இனவாத கண்ணோட்டங்களை முன்வைப்பவர்களுக்கும் மற்றும் அவற்றைக் கண்டிப்பவர்களுக்கும் இடையே எனக்கு சமநிலை தெரிய வில்லை. அதிவலது கண்ணோட் டங்களை எங்கே செவியுற்றாலும் அவற்றைக் கண்டிக்க வேண்டியது, பதவியில் இருப்பவர்களின் முக்கிய பொறுப்பு என்பதே என் கருத்து.''**

ஜேர்மன் பொதுத் தேர்தல்களில் மேர்க்கெலின் பிரதான எதிர்போட்டி யாளரான சமூக ஜனநாயகக் கட்சியின் (SPD) மார்டின் சூல்ஸ், வொஷிங்ட னுக்கு ''தலைவணங்கி'' கொண்டிருப் பதற்காக மேர்க்கெலைத் தாக்கினார். அவர் கூறுகையில், நீங்கள் ட்ரம்பிடம், 'பாருங்கள், இது இவ்வாறு நடப்ப தில்லை' என்று கூறினால், ட்ரம்பிடம் இருந்து நீங்கள் நிறைய வெற்றி கொள்ளலாம் என்று நான் கருதுகிறேன், - என்றார். ஜேர்மன் தேர்தல் பிரசாரத் தின் போது இனவாதம் மற்றும் யூத-எதிர்ப்பு வாதத்திற்கு எதிரான ஒரு போராட்டத்திற்கு அழைப்பு விடுத்த பின்னர்,

**''நீங்கள் நாஜிக்களுக்கு எதிராக எழுந்து நின்று போராட வேண்டும். ட்ரம்ப் என்ன செய்து கொண்டிருக் கிறாரோ அது பயங்கர ஆபத்தானது. வன்முறை மற்றும் வெறுப்பைக் குறைத்துக்காட்டுபவர்கள் நமது மேற்கத்திய மதிப்புகளைக் காட்டிக் கொடுக்கிறார்கள்.''**

சூல்ஸ் ட்வீட்டரில் எழுதினார், நீங்கள் நாஜிக்களுக்கு எதிராக எழுந்து நின்று போராட வேண்டும். ட்ரம்ப் என்ன செய்து கொண்டிருக்கிறாரோ அது பயங்கர ஆபத்தானது. வன்முறை மற்றும் வெறுப்பைக் குறைத்துக்காட்டு பவர்கள் நமது மேற்கத்திய மதிப்புக ளைக் காட்டிக்கொடுக்கிறார்கள்.

சார்லட்வில் சம்பவங்களை ''கொடூர மானவை'' என்று குறிப்பிட்ட பிரிட்டிஷ் பிரதமர் தெரசா மே அறிவிக்கையில், இனவாத கண்ணோட்டங்களை முன் வைப்பவர்களுக்கும் மற்றும் அவற்றைக் கண்டிப்பவர்களுக்கும் இடையே எனக்கு சமநிலை தெரியவில்லை. அதிவலது கண்ணோட்டங்களை எங்கே செவியுற்றாலும் அவற்றை கண்டிக்க வேண்டியது, பதவியில் இருப்பவர்களின் முக்கிய பொறுப்பு என்பதே என் கருத்து. - என்றார்.

பிரெஞ்சு ஜனாதிபதி இமானுவல் மக்ரோன் சார்லட்வில் குறித்து ட்வீட் டரில் எழுதுகையில், ''இனவாதம் மற்றும் இனவெறிக்கு எதிராகப் போராடு




பவர்கள் பக்கம் இருக்கிறேன். நேற்றும் சரி, இன்றும் சரி, அது நமது பொது வான போராட்டம். - என்றார்.

சார்லட்வில் படுகொலை, சர்வதேச தொழிலாள வர்க்கத்திற்கு ஓர் அபாய கரமானதிருப்புமுனையைக்குறிக்கிறது. கனரக ஆயுதமேந்திய நூற்றுக் கணக் கான நாஜிக்கள் மற்றும் வெள்ளையின மேலாதிக்கவாதிகளின் நாடுதழுவிய ஒரு ''வலதை ஐக்கியப்படுத்துவோம்'' பேரணி, ஓர் அமெரிக்க நகரைத் தற் காலிகமாக ஆக்கிரமித்து, எதிர்ப்பாளர் களை பீதியூட்ட வடிவமைக்கப்பட்ட ஓர் அரசியல் படுகொலையை நடத்தி யது. அமெரிக்க உள்துறை உளவுச் சேவைக்கு முன்தகவல் இல்லாமல் நடந்திருக்க முடியாத இந்த நடவடிக்கை, அமெரிக்க அரசின் குறிப்பிடத்தக்க கன்னைகளிடம் இருந்து ஆதரவைப் பெற்றுள்ளது என்பதையே ட்ரம்பின் கருத்துக்கள் தெளிவுபடுத்துகின்றன.

இருப்பினும் ஐரோப்பிய அரசியல் ஸ்தாபகம் அடிப்படையில் ட்ரம்பிடம் இருந்து வேறுபட்டதைப் போல காட் டிக்கொள்ள அவை வெற்றுத்தனமாக ''மேற்கத்திய மதிப்புகளை'' துணைக்கு இழுப்பது, மையத்திலேயே பொய் மற்றும் பாசாங்குத்தனத்தைக் கொண் டுள்ளது. சில ஊடகங்கள், ட்ரம்ப் தேர் வானமைக்குப் பின்னர் மேர்க்கெலை ''சுதந்திர உலகின் தலைவியாக'' குறிப்பிட்டிருந்த நிலையில், சார்லட் வில் சம்பவங்கள் போன்றவை ஐரோப் பாவிலும் கூட எளிதாக நடக்கலாம் என்பதே உண்மையாகும்.

**ஐரோப்பிய கண்டம் எங்கிலும், பாதுகாப்பு சேவைகளிலும் மற்றும் ஆயுதப்படைகளிலும் அதிவலது கள் வேகமாக அவற்றின் செல் வாக்கைநிலைநிறுத்திவருகின்றனர்.**

ஐரோப்பிய கண்டம் எங்கிலும், பாது காப்பு சேவைகளிலும் மற்றும் ஆயுதப் படைகளிலும் அதிவலதுகள் வேகமாக அவற்றின் செல்வாக்கை நிலைநிறுத்தி வருகின்றனர். கிரீஸின் நாஜி-சார்பு கோல் டன் டௌன் கட்சி மற்றும் பிரான்ஸின் நவ-பாசிஸவாத தேசிய முன்னணி (FN) ஆகியவை முறையே அவற்றின் நாடுகளில் பொலிஸ் படையில் பாதி வாக்குகளை கொண்டுள்ள நிலையில், ஜேர்மன் அரசோ, கண்மூடித்தனமாக படுகொலை நடத்தி அவற்றைப் புலம் பெயர்ந்தவர்கள் மீது பழி சுமத்தத் திட்டமிடும் நவ- நாஜி படை அதி காரிகளின் ஒரு வலையமைப்பை விசா ரணை செய்துகொண்டுள்ளது.



2011 இல் பெரும்பாலும் சமூக ஜனநாயக இளைஞர்களான 77 பேரை நோர்வேஜிய பாசிஸவாத Anders Behring Breivik கொன்றதில் இருந்து, கிரேக்க ஹிப்-ஹாப் இசையமைப்பாளர் Pavlos Fyssas இன் கோல்டன் டௌன் படுகொலை, 2013 இல் பிரான்ஸின் பாசிஸ-எதிர்ப்பு மாணவன் Clément Méric மீது புரட்சிகர தேசியவாத இளைஞர் அமைப்பின் படுகொலை, 2016 இல் இங்கிலாந்து தொழிற் கட்சி நாடாளுமன்றவாதி Jo Cox பாசிஸவாதி தோமஸ் அலெக்சாண்டர் மையரால் கொல்லப்பட்டது வரையில், ஐரோப்பிய பாசிஸவாத குழுக்கள் மீண் டும் மீண்டும் அரசியல் படுகொலை களை நடத்தி உள்ளன.

சார்லட்வில் சம்பவங்கள் ஒரு திருப்புமுனையைக் குறிப்பது. ஏனென் றால், அதிவலதின் இதுமாதிரியான படுகொலை நடவடிக்கைக்கு அரசு தலைவரிடம் இருந்து நேரடியாக ஆதரவு கிடைப்பதென்பது முன்னொரு போதும் நடந்திராததாகும். 20 நூற் றாண்டு ஐரோப்பாவில் செய்ததைப் போலவே, ஆளும் வர்க்கத்தின் பிரிவு கள் அவற்றின் ஆட்சிக்கு அடித்தளத்தை அமைக்க ஒரு பாசிஸவாத இயக்கத்தை முடுக்கிவிடுவதற்குச் செயற்பட்டு வருகின்றன என்பதையே இது காட்டு கிறது.

அமெரிக்க மற்றும் மேற்கு ஐரோப் பாவின் பாரம்பரிய பெரும்நிலமெங் கிலும் தீவிரமடைந்துவரும் முதலா ளித்துவ ஜனநாயக சிதைவைக் குறித்து ஐரோப்பிய ஊடகங்கள் விளங்கப்படுத்தவில்லை என்பது ஒருபுறம் இருக்கட்டும், அதை குறிப் பிடவும் கூட முடியாமல் இருக்கின்றன என்பதுடன், அதற்குப் பதிலாக அவை ட்ரம்புக்கு எதிராக தனிப்பட்டரீதியில் தார்மீக பழிகளைச் சுமத்துகின்றன.

**இனவாதம், யூத-எதிர்ப்புவாதம், வெள்ளையின மேலாதிக்கவாதம் மற்றும் நாஜிசம், புதியதோ அல்லது பழையதோ, தவறானதே. இதை தெளிவாகவும் தங்குதடையின்றி யும் கூற முன்வராத ஒரு தலைவர், எது குறித்தும் தெளிவில்லாதவர். தார்மீக அதிகாரம் மீதான அவர் உரிமைகோரலையும் மற்றும் தலை வராக மதிக்கப்பட வேண்டுமென்ற அவர் உரிமையின் பெரும்பகுதி யையும் இழக்கிறார். எது எவ்வாறி ருப்பினும் ட்ரம்ப் தன்னை அந்த இடத்தில் கொண்டுவந்துள்ளார்**

ட்ரம்பை ''தார்மீக எல்லைக்கு வெளியில்'' இருப்பவராகக் கண்டிக்கும் ஒரு தலையங்கத்தில், பிரிட்டிஷ் கார்டியன் எழுதியது: இனவாதம், யூத-எதிர்ப்புவாதம், வெள்ளையின மேலாதிக்கவாதம் மற்றும் நாஜிசம், புதியதோ அல்லது பழையதோ, தவ றானதே. இதை தெளிவாகவும் தங்கு தடையின்றியும் கூற முன்வராத ஒரு தலைவர், எதுகுறித்தும் தெளிவில்லா தவர். தார்மீக அதிகாரம் மீதான அவர் உரிமைகோரலையும் மற்றும் தலைவ ராக மதிக்கப்பட வேண்டுமென்ற அவர்உரிமையின்பெரும்பகுதியையும் இழக்கிறார். எது எவ்வாறிருப்பினும் ட்ரம்ப்தன்னைஅவ்விடத்தில்கொண்டு வந்துள்ளார். அமெரிக்கா அதன் மதிப்பு கள், அமைப்புகள் மற்றும் குறைபாடாற்ற சமூக கண்ணியத்துடன் எவ்வாறு 2020 இற்குள் நுழையப் போகிறது என்பதுதான் இத்தகைய சம்பவங்களை அடுத்து அது முகங்கொடுக்கும் கேள்வி ஆகும்.

(கேள்வி தொடரும்)





# சுதந்திர வேட்கை

முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.



84




**அத்தியாயம் - VI**

## வடக்கிலும் தெற்கிலும் கொந்தளிப்பு

முன்னெப்போதும் நிலவாத சமூக அரசியல் சீரழிவு, இந்தக் காலப் பகுதியில் இலங்கையை சின்னாபின்னப்படுத்தியது. பன்னிரண்டு ஆண்டுகள் ஐக்கிய தேசியக் கட்சி (யூ.என்.பி.) ஆட்சியை வழிநடத்திய ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, தமது வாரிசாகப் பதவியில் அமர்த்திய ரணசிங்க பிரேமதாசவிடம் இந்தச் சீரழிவையே அரசியல் முதிசமாகக் கையளித்தார். சிறிலங்காவின் இரண்டாவது நிறைவேற்று அதிகார அரசுத் தலைவராக 1988 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 20 ஆம் திகதி பிரேமதாச தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்போது, மட்டு மீறிய நெருக்கடி நிலையை அவர் முகம் கொடுத்தார். நாடு முழுவதும் குழப்பம். அமைதியின்மை, என்றுமே நிலவாத அத்துணை வன்செயல்கள் ஆகியவை அவரை எதிர்கொண்டன. வடக்கு - கிழக்கில், இந்தியாவுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் போர் தீவிரமாக நடந்து கொண்டிருந்தது. ஒரு லட்சத்துக்கும் அதிகமான இந்திய அமைதிப் படை, பொதுமக்கள் ஆதரவுடனும், அர்ப்பணிப்போடும் செயற்பட்டுக் கொண்டிருந்த விடுதலைப் புலிகளை அடக்க முடியாது திணறிக் கொண்டிருந்தது. தென்னிலங்கையில் அரசுக்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணியின் (ஜனதா விமுக்தி பெரமுன) ஆயுதம் தரித்த வன்முறைக் கிளர்ச்சி வேகம் பெற்றிருந்தது. சிறிமாவோ பண்டாரநாயக்க அம்மையாரின் 1971 ஆம் ஆண்டு ஆட்சியின் போது, புரட்சி செய்து நசுக்கப்பட்ட மார்க்சிய போராளி அமைப்பான ஜே.வி.பி, மீள முளைவிட்டு வளர்ந்து பல சிங்கள



மாவட்டங்களில் குழப்பத்தையும் கிளர்ச்சியையும் ஏற்படுத்தி வந்தது. படுகொலைகள், வன்செயல்கள் ஆகியவை மூலம் பொதுமக்கள் மீது பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிட்ட இந்த மார்க்சிய புரட்சியாளர்கள், தெற்கில், பல மாவட்டங்களை விடுதலை செய்திருந்ததோடு, அரசின் நிர்வாக அமைப்பை செயலிழக்கச் செய்திருந்தனர். இரத்தச் சகதி நிறைந்த அவர்களது வன்செயலில் ஆயிரமாயிரம் பேர் உயிரிழந்தார்கள். அரசியல் படுகொலைகள், விளக்குக் கம்பக் கொலைகள், பொதுப்புதைகுழிகள், சித்திரவதைக்கும், உறுப்புச் சிதைப்புக்கும் உள்ளாகி நதிகளில் மிதந்த பிணங்கள், எரியும் ரயர்களால் வீதிகளில் சிதை மூட்டப்பட்டு இறந்து கிடக்கும் மனிதக் கருகல்கள், காணாமற் போதல்கள் ஆகிய இவையெல்லாம் ஜே.வி.பியின் கிளர்ச்சி வன்செயல்களினதும், அரச பாதுகாப்புப் படைகளினதும் முறியடிப்புக் குரூரத்தினதும் பிரதிபலிப்புகளாக வடிவெடுத்தன. இவற்றின் சிகரமாக, கிளர்ச்சியாளர்கள் ஹர்த்தாலுக்கு ஆணையிட்டார்கள். அதன் விளைவாக சாதாரண மக்கள் சமுதாயம் முடங்கியது.பொது நிர்வாகம் கடும் பாதிப்புக்கு உள்ளாகியது. சமுதாயமே ஸ்தம்பிதம் அடைந்தது. கிளர்ச்சியாளரின் ஆணைக்கு அமையாவிட்டால் தண்டனை கடுமையாகியது. அதன் குரூரம் மக்கள் மனதில் பேரச்சத்தைத் தோற்றுவித்தது. ஜே.வி.பியின் வன்செயல் பரவ, காவல்துறை நிலையங்கள் தாக்கப்பட்டன. பல்கலைக்கழகங்களும், கல்லூரிகளும் மூடப்பட்டன. பொதுப் போக்குவரத்துத் திடீரென நின்றது. தலைநகர் கொழும்பு தவிர்ந்த பெரும்பாலான மாவட்ட மையங்கள், ஜே.வி.பியின் கிளர்ச்சியால் வெகுவாகப் பாதிக்கப்பட்டன. கிராமப்புறங்களைக் கைப்பற்றிய பின், நகரத்தைச் சுற்றி வளைக்கும் மாவோவின் கெரில்லா முறையின் சீரிய வடிவத்தைக் கடைப்பிடித்து, புதிதாகப் பதவியேற்றிருந்த, பிரேமதாச அரசுக்கு உடனடி அச்சுறுத்தலாக ஜே.வி.பி. கிளர்ந்தது. 1971 ஆம் ஆண்டில் கடைப்பிடித்த வழியை ஜே.வி.பியினர் இந்தமுறை தேர்ந்தெடுக்கவில்லை. வர்க்க முரண்பாட்டுப் பிரச்சினையையோ, பாட்டாளிப் புரட்சியையோ, முதலாளித்துவ அரசுக்கு எதிரான தமது கிளர்ச்சிப் போராட்டத்தின் மையக் கருத்தாக அவர்கள் இந்தத் தடவை முன்வைக்கவில்லை. சிறிலங்காவின் வடக்கு - கிழக்கில் இந்திய இராணுவ ஆக்கிரமிப்பே அடிநாதப் பிரச்சினையாக முன்வைக்கப்பட்டது. சிங்கள இனத்தின் பரிசுத்த பூமியை இந்திய ஏகாதிபத்தியவாதிகள் ஆக்கிரமிக்க யூ.என்.பி. ஆளும் வர்க்கத்தினர் இடமளித்திருப்பதாகவே ஜே.வி.பியினர் குற்றம் சுமத்தினர். இந்தியாவின் கேந்திர அபிலாஷைகளைப் பற்றிக் காலா காலமாகவே சந்தேகப்படும் சிங்களப் பொதுமக்கள், இந்த அதிதீவிர தேசியவாதப் பரப்புரையால் ஈர்க்கப்பட்டார்கள். ஓர் அந்நிய வல்லரசுக்கு சிறிலங்காவின் இறைமையைத் தாரை வார்த்துக் கொடுத்த அடிமை சாசனமாகவே இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை, ஜே.வி.பி. தலைமை கண்டித்தது. பிரேமதாச அரசுத் தலைவராகப் பதவி ஏற்கும் வேளை, தலைநகரைத் தாக்க ஜே.வி.பியின் 'செம்படை' உண்மையில் தயாராக நின்றது.

பிரேமதாச, தந்திரமும் அனுபவமும் கொண்ட அரசியல்வாதியாவார். வடக்கிலே விடுதலைப் புலிகளின் போருக்கான அடிப்படைக் காரணத்தையும், தெற்கிலே ஜே.வி.பியின் கிளர்ச்சிக்கான காரணத்தையும் அவர் புரிந்து கொண்டார். கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த திருகோணமலை உள்ளடங்கலாக வடக்கு - கிழக்கு மாநிலங்களில் அனைத்து எட்டு மாவட்டங்களையும் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்



கொண்ட இந்திய அமைதிப் படையின் பிரசன்னமே, வடக்கிலும் சரி, தெற்கிலும் சரி, வன்செயலுக்கான இயக்கத்தைத் தூண்டிவிட்டிருந்தது என்ற சரியான முடிவுக்கு அவர் வந்தார். இந்தியப் படைகளைக் களைப்புறச் செய்து, வலுவிழக்கச் செய்யும் நோக்குடனேயே விடுதலைப் புலிகளின் கெரில்லாப் போர் வடிவெடுத்தது. இந்தப் போர் தீவிரம் குறைந்ததும், இழுபட்டுச் செல்லும் போராட்டமாக மாறிவிட்டிருந்ததால், இந்தியப் படைகள் காலவரையறையின்றி இலங்கை மண்ணிலே தரித்து விடக்கூடும் என்றும் பிரேமதாச அஞ்சினார். இந்திய - இலங்கை ஒப்பந்தமோ, இந்திய இராணுவத்தின் பிரசன்னமோ இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்க மாட்டாதென்றும் அவர் கருதினார். வெளிநாட்டு இராணுவத் தலையீட்டுக்கும் ஆக்கிரமிப்புக்கும், காரணம் சிங்கள அரசியல் தலைமையிடம் தூரநோக்கோ மன உறுதியோ இல்லாமையே என்றும் அவர் நினைத்தார். இந்தியப் படைகளை நாட்டிலிருந்து வெளியேற்றிவிட்டு வடக்கிலும் தெற்கிலும் உள்ள போராளிகளை அமைதிப் பேச்சுக்கும் நல்லிணக்கத்துக்கும் வருமாறு அழைக்க வேண்டும் என்பதே அவருடைய உடனடி நோக்கமாக இருந்தது.

பிரேமதாசவின் பூர்வீகத்தைப் பார்க்கும்போது, அவரை ஒரு 'சாதாரண மனிதராக' கணிப்பிடலாம். இருப்பினும், பிரேமதாசவில் இருந்த அந்த சாதாரண மனிதம் ஆழமான சிங்கள பௌத்த உணர்வுகளைக் கொண்டிருந்தது. அவருடைய பதவிப் பிரமாண வைபவம் 1989 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2 ஆம் திகதி இடம்பெற்றது. சிங்கள பௌத்தத்தின் இதய பூமியான கண்டியில் பற்கோவிலான தலதாமாளிகையில் தமது பதவிப்பிரமாண வைபவத்தை நடத்த அவர் ஒழுங்குசெய்தமையில் இருந்தே அவருடைய பௌத்த உணர்வுகள் தெளிவாகத் தெரிந்தன. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தத் தலம் தேர்ந்தெடுக்கப்பட்டமை, அவருடைய அரசியல் இலக்குகளின் விசாலத்தை உணர்த்தின எனலாம். புனிதப் பற்கோவிலைத் தமது தனிப்பட்ட வாழ்வின் முக்கிய நாளன்று தேர்ந்தெடுத்தமை பௌத்தம் மட்டில் அவருடைய ஆழ்ந்த பற்றையும், அரச அலுவல்களை விட மதத்துக்கு முதன்மை அளிக்கும் பௌத்த மரபை அவர் முக்கியத்துவப் படுத்துகின்றமையையும் காணலாம். வரலாற்று பூர்வமாக ஆழப் பதிந்துள்ள சிங்கள தேசிய உணர்வுகளை வெளிப்படையாக இது முன்னிலைப்படுத்துவதாகும். வடக்கு - கிழக்கை இந்திய இராணுவம் ஆக்கிரமித்திருப்பது தொடர்பாக நாடு முழுவதும் வெளிப்படுத்தப்பட்ட எதிர்ப்பு உணர்வையே பிரேமதாசவும் கொண்டிருந்தார் என்று கூறலாம். வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வரலாறு படைத்த கண்டியை, பிரேமதாச தெரிவு செய்தமையின் மூலம் இந்தியப் படைகளின் ஆக்கிரமிப்பைத் தாமும் எதிர்ப்பதையும் நாட்டிலிருந்து அந்தப் படைகளை வெளியேற்றத் தாம் எண்ணியிருந்தார் என்பதையும் பிரேமதாச தெளிவாக எடுத்துணர்த்தினார். இந்திய - இலங்கை ஒப்பந்தத்துக்கும், நாட்டில் இந்தியத் தலையீட்டை ஆழமாக்கும் எந்த அரசியல் ஏற்பாட்டுக்கும் பிரேமதாச தொடர்ச்சியாக எதிர்ப்பைத் தெரிவித்து வந்தார் என்பது கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பிரசித்தமானது.

(தொடரும்...)

**ஒரு மாத பரோலில் பேரறிவாளன்**

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு, 26 ஆண்டுகள் கழித்து விட்ட பேரறிவாளனை ஒரு மாதம் பரோலில் செல்ல அனுமதிக்கும் படி தமிழக அரசு கடந்த மாதம் 24 ஆம் திகதி ஆணை பிறப்பித்தது.

அதை அடுத்து பேரறிவாளன் வேலூர் சிறையில் இருந்து வெளியேறியுள்ளார். அந்த 30 நாள்களில் பத்து நாள்கள் பறந்தோடி விட்டன.

தனது மகனுக்கு பரோல் கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து தாய் அற்புதம்மாள் தொடர்ந்து பல போராட்டங்களை நடத்தி இருந்தார்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சாந்தன், முருகன், பேரறிவாளன், நளினி, ரொபார்ட், பயாஸ், ஜெயகுமார், ரவிச்சந்திரன் ஆகிய ஏழு பேருக்கும் முதலில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு, பின்னர் அது ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது தெரிந்ததே!



# 26 வருடங்கள் சிறையில் வாடி வந்துள்ள மகனை ‘கண்மூடாமல்’ பார்த்து ஏங்கும் அன்புத் தாய்!!



தலைநிறைய சுருள் முடியோடுதுறுதுறுன்னுவளைய வந்துகொண்டிருந்த என் செல்லத்தை, 19 வயதில் ‘விசாரணை’ என்று சொல்லி, கூட்டிட்டுப்போனாங்க. 26 வருஷ மாச்சு. முதிர்ந்த இளைஞனா ‘பரோலில்’ வந்திருக்கான் என்று ஆனந்தக் கண்ணீர் பெருக்கெடுக்கப் பேசுகிறார், அற்புதம்மாள்.

ஓகஸ்ட் 24 ஆம் திகதி ஒரு மாத பரோலில் விடுவிக்கப்பட்ட பேரறிவாளன், 26 ஆண்டுகளுக் குப் பிறகு வீடு திரும்பியிருக்கிறார். ஜோலார் பேட்டை, கே.கே.தங்கவேல் தெருவில் உள்ள ‘பேரறிவாளன் இல்லம்’, இன்பவெள்ளத்தில் மிதக்கிறது. ஊர் மக்கள், நண்பர்கள், உறவுகள் என அனைவரும் பேரறிவாளனைக் கட்டித்தழுவி, உச்சி முகர்ந்து கொண்டாடுகிறார்கள். ‘‘மகன் வந்ததிலிருந்து அவரைக் கண்கொட்டாமல் அற்புதம்மாள் பார்த்துக்கொண்டே இருக்கிறார்’’என்று வீட்டுக்குள் போய் விட்டுவரும் அனைவரும் சொன்னார்கள்.

நாம் தகவலைச் சொல்லியனுப்பி விட்டு, பேரறிவாளன் இல்லத்துக்கு வெளியே காத்திருந்தோம். சிறிது நேரத்தில் வெளியே வந்த அற்புதம்மாள், உங்களை வீட்டுக்குள்ளே கூட்டிட்டுப் போயி ஒரு காப்பித் தண்ணிகூட தரமுடியலயே கண்ணு... என்று இயலாமையோடு சொன்னார்.

**பலத்த பொலிஸ் பாதுகாப்பு**

பேரறிவாளன் இல்லம் அமைந்துள்ள பகுதியில் பலத்த பொலிஸ் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது. பொலிஸ் கெடுபிடிகளுக்கு மத்தியில், வீட்டுக்கு வெளியே அமர்ந்து நம்முடன் பேச ஆரம்பித்தார் அற்புதம்மாள், என் மகன் விடுதலையாகிவிடுவான் என்கிற செய்தியைக் கேட்டு ஏமாந்த அனுபவம் நிறைய இருக்கு. அதனால் தான், ஓகஸ்ட் 24 ஆம் திகதி இரவு, பரோல் கிடைச்சு, அவன் வீட்டு வாசல் படியை மிதிக்கிறவரைக்கும் அந்தச் செய்தியை என்னால் உறுதிப்படுத்த முடியலை என்றார்.

வேலூர் சிறையிலிருந்து பொலிஸ் வாகனத்துல வீட்டுக்கு வந்தப்போ, வழி தெரியாமல் பேரறிவாளன் குழம்பிவிட்டாராமே? என்றதும், சட்டென்று முகம் மலர்ந்த அற்புதம்மாள், ஆமாப்பா... என்று அந்தக் கதையை விவரிக்க ஆரம்பித்தார்.

**வீட்டுக்கு வழிகாட்ட முடியாமல் விழித்த ‘அறிவு’**

‘வேலூர் சிறையிலிருந்து வீட்டுக்குச் செல்ல உத்தரவு கிடைச்சதும், ‘வீட்டுக்குப் போக நானே வழி சொல்றேன்’ டிரைவருக்கு வழிகாட்டிய படியே அறிவு வந்திருக்கான். வாணியம்பாடியைத் தாண்டி ஜோலார்பேட்டைக்குப் பிரியிற வழியைச் சரியாகக் கண்டுபிடித்துச் சொல்ல முடியாம குழம்பியிருக்கான். இருபத்தாறு வருஷமாச்சே. எவ்வளவு பெரிய இடைவெளி.

எவ்வளவு மாற்றங்கள் நிகழ்ந்திருக்கு. தேசிய நெடுஞ்சாலை அகலம் ஆகிட்டது. அறிவை விசா ரணைக்குக் கூட்டிட்டுப் போனப்போ, பொட்டல் காடாகக் கிடந்த இடமெல்லாம் இப்போ கட்டடங்களா ஆகிப்போச்சு. அதனால, அறிவுக்கு வழி தெரியலை யாம். வீட்டுக்குள்ளே வந்ததும், ‘‘என்னம்மா நம்ம வீடு ரொம்ப சின்ன தாயிடுச்சு’னு குழந்தை போல் கேட்டான். ‘இல்லடா கண்ணு! நீ வளந்துட்டே... ரோடெல்லாம் உயர்ந்துடுச்சு’ன்னு சொன்னேன்’’ என்று கண்ணீரைத் துடைத்தவாறே பதில் சொன்னார் அற்புதம்மாள்.



பொலிஸ் பாதுகாப்பில் பேரறிவாளன் வீடு...

*வீட்டுக்கு வந்திருக்கும் மகனுக்கு என்ன சமைத்துக் கொடுத்தீர்கள்?*

என்னை எங்கே சமைக்க விடுறாங்க. அறிவு வீட்டுக்கு வந்த செய்தியைத் தொலைக்காட்சியில் பார்த்துவிட்டு, அவனுடைய அக்காவும் தங்கையும் குடும்பத்தோட வந்துட்டாங்க. அவங்க தான் அறிவுக்கு ஆசை ஆசையா சமைச்சுப் போடுறாங்க. என்னுடைய சமையலில் அவனுக்குப் பிடிச்சது சாம் பார்தான். அவன் ஜெயில்ல இருந்தப்போ ஒருமுறை ‘என்னப்பா சாப்பிட்டே?’ னு கேட்டேன். ‘சாம்பார் சாதம் தான்ம்மா’ன்னு சாதாரணமா சொன்னான். ‘உனக்குப் பிடிச்ச சாப்பாடுதானேப்பா...’னு நான் கேட்டதும் முகத்தைத் திருப்பிக்கிட்டு, ‘இது நீ வெக்கிற சாம்பார் இல்லம்மா... வேற ஏதாவது பேசலாம்’னு சொல்லிட்டு வேதனை தாங்காம வெடிச்சு அழுதுட்டான். அதுக்கப்புறம் அவன்கிட்ட, ‘என்ன சாப்பிட்டப்பா’னு நான் கேட்ட தேயில்லை. எந்தத் தாய்க்கும் நேரக் கூடாத கொடுமை அழுகையைக் கட்டுப்படுத்த முடியாமல் கண்ணீர் வடித்தார்.

*‘‘சிறுவயதில் பேரறிவாளன் எப்படி... எல்லோரையும்போல் வீட்டில் அக்கா தங்கையோடு சண்டைபிடிப்பாரா?’’*

ம்ம்ம்... எல்லோர் வீட்டையும் போல் நடக்கும். என் பெரிய மகள் கொஞ்சம் புஷ்டியா இருப்பா. அதனால அவளை ‘தோளி’ என்று பட்டப் பெயர் வெச்சுக் கூப்பிடுவான். என் சின்ன மகளுக்குப் பெரிய கண்கள். அதை வெச்சு அவன் கிண்டல் பண்ணுவான். அவங்க ரெண்டு பேரும் இவனை ‘பட்டா’னு கூப்பிடுவாங்க. விடுமுறை நாள் வந்துட்டா, ஒண்ணா சேர்ந்து விளையாடுவாங்க. திடீர் திடீர்னு சண்டை வந்து அடிச்சுக்குவாங்க. அடுத்த நிமிஷமே அதை மறந்துட்டு அன்பா கொஞ்சி விளையாடுவாங்க. காலம் உருண்டோடிவிட்டது. அப்போ, சகோதரிகளோடு விளையாடினான். இப்போ, சகோதரிகளோட பிள்ளைகளுடன் செல்லச் சண்டை போட்டுக்கொண்டிருக்கிறான்.

(13 ஆம் பக்கம் பார்க்க...)

# இன்ப வெள்ளத்தில் பேரறிவாளன் இல்லம்

(12 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

நேத்து ‘விநாயகர் சதுர்த்தி’. பக்கத்து வீட்டுக்காரங்க எல்லாம் அறிவுக்காகக் கொழுக்கட்டை செஞ்சுட்டு வந்து கொடுத்தாங்க. அந்தக் கொழுக்கட்டைகளை என் பேத்திகள் எடுத்துச்சாப்பிட்டு காலி பண்ணிட்டாங்க. இப்போ, கொழுக்கட்டைக்காகத்தான் அறிவும் அவனுடைய மருமகள்களும் சண்டை போட்டுக்கிட்டு இருக்காங்க.

*சிறு வயதுப் பேரறிவாளனை, எந்த விஷயத்துக்காக நீங்கள் கண்டித்திருக்கிறீர்கள்?*

நான் கண்டிக்கிற அளவுக்கு தவறேதும் அவன் செய்ததில்லை. அவனுடைய அப்பா, பள்ளிக்கூட வாத்தியார். குடும்பத்திலுள்ள அனைவருமே பெரியார் இயக்கத்தைச் சேர்ந்தவங்க. அதனால, சிறுவயதிலேயே அவனுக்குத் தெளிவான மனநிலையும் உறுதியும் இருந்துச்சு. 26 வருட சிறை வாழ்க்கைக்குப் பிறகும், அதே தெளிவும் உறுதியும் அவன் கிட்ட இருப்பதைச் சொல்லித்தான் எல்லோரும் ஆச்சரியப்படுறாங்க.

பள்ளியில் படிக்கிறப்போ, ஏதோ ஒரு விஷயத்துக்காக அவனைக் கண்டிக்க நான் கூப்பிட்டேன். வராமல் ஓடினான். கோபத்தில், நான் கையில் வெச்சிருந்த ஜல்லிக்கரண்டியை வீசியெறிஞ்சிட்டேன். அது அவனுடைய கால்களுக்கிடையே மாட்டிக் கீழே விழுந்துட்டான்.

காலில் அடி பட்டிருச்சு. அப்போதிருந்து, ஜல்லிக் கரண்டியை ‘ஆயுதம்’னு விளையாட்டா சொல்வான். ஒரு தடவை, சிறையில பார்க்கப் போனப்போ, ‘ஆயுதம் எல்லாம் பத்திரமாக இருக்காம்மா’னு விளையாட்டா கேட்டான். அங்கே நின்றிருந்த பொலிஸ்காரர் பதற்றத் துடன் விசாரிக்க ஆரம்பிச்சுட்டார். ‘ஒண்ணுமில்லை. அது எனக்கும் அம்மாவுக்குமான விஷயம்’னு சொல்லி ஜல்லிக் கரண்டிக் கதையைச் சொன்னான்.

*அந்த ஜல்லிக்கரண்டி இப்போதும் இருக்கிறதா?*

அதுமட்டுமல்ல... அவன் ஓட்டிப் பழகிய சைக்கிள், வாசித்துப்பழகிய கிடார் எல்லாமும் பத்திரமாக இருக்கு. வீட்டுக்குள் வந்து அப்பாவின் உடல் நலத்தை விசாரித்தவன், அவனோட விளையாட்டுப் பொருள்கள் எல்லாம் பத்திரமா இருக்கான்னு போய்ப் பார்த்தான். எல்லோரையும் போல, என் மகனோட வாழ்க்கையும் இருந்திருந்தா, இந்நேரம் அவனோட பிள்ளைங்க இங்கே விளையாடிட்டிருப்பாங்க.

*அப்பா குயில்தாசன் - அம்மா அற்புதம்மாள் பற்றி பேரறிவாளன் என்ன சொன்னார்?*

வயசான காலத்துல நோய் நொடின்னு நாங்க சிரமப்படுறதைப் பார்த்து அவனுக்கு மனசுக்குள்ள வருத்தம். ‘நாம ஒரே பிள்ளையாயிருந்தும் பெத்தவங்களைப் பக்கத்துல இருந்து கவனிக்க முடியலியே... இந்த வயசுலேயும் நமக்காக அவங்களைச் சிரமப்படுத்துறோமே’ங்குற ஏக்கம் அவனுக்கு உண்டு. அதை மத்தவங்ககிட்டே சொல்வான். அவன் சொன்ன விஷயங்களையெல்லாம் நான் தெரிஞ்சுக் கிட்டாலும், அந்த வலியையெல்லாம் ஆழ்மனசுல புதைச்சுட்டு, எதுவும் தெரியாத மாதிரியேதான் அவன்கிட்ட பேசுவேன். ‘நாம யார்கிட்டயும் உதவின்னு போக வேண்டாம்மா... நாம ஒருத்தர்கிட்டே உதவின்னு போயிட்டாலே அவங்க நம்மை அடிமைப்படுத்தத்தான் நினைப்பாங்க’ன்னு எனக்கு அறிவுரை சொல்வான். சின்ன வயசிலிருந்தே ‘சுயமரியாதை’, ‘பகுத்தறிவு’ன்னு வளர்ந்ததால இந்தப் பக்குவம் அவனுக்கு இருக்கு.





குயில்தாசன்

**எப்படி மறப்பது ஜெயலலிதாவை?**

*பேரறிவாளன் திருமணத்துக்குப் பெண் பார்ப்பதாகச் செய்திகள் வந்தனவே?*

பிள்ளையைப் பெற்ற எனக்குள்ள இருக்குற ஆசையை நான் வெளிப்படுத்துறேன். ஆனா அவனோ, ‘என் வாழ்க்கை உள்ளேயா, வெளியேவா என உறுதியாகாத இந்த நேரத்துல கல்யாணமெல்லாம் வேண்டாம்மா’ன்னு விரக்தியா சொல்றான். ஆனா, என்னால் அப்படிக் கடந்து போக முடியல. எங்கள் குடும்பத்தில் அனைவருமே பெரியாரிஸ்ட்கள்தான். பிள்ளைகளையும் ஆண், பெண் என்ற பாகுபாடில்லாமல்தான் என் கணவர் வளர்த்தார். சமத்துவம், சுயமரியாதை, பெண் விடுதலை, சாதி ஒழிப்பு என்று முற்போக்குச் சிந்தனைப் பாதையிலேயே பயணிச்சிருக்கேன். என் மகன் உள்ளிட்டவர்களுக்கு ஏற்பட்ட களங்கத்தைத் துடைத்தெறிய நல்லவர்களின் துணையோடு நாங்கள் கடந்துவந்த பாதையும் எங்களுக்கு நம்பிக்கையைத் தந்திருக்கு.

‘பேரறிவாளன் நல்ல பையன்’ன்னு எங்க ஊர்க்காரங்களும், உறவுக்காரங்களும், நண்பர்களும்தான் சொல்லிட்டு இருந்தாங்க. ஆனா, தமிழகச் சட்டமன்றத்தில், மூவர் விடுதலைக்காகத் தீர்மானம் இயற்றித் தந்து, இவர்கள் ‘குற்றமற்றவர்கள்’ என உலகுக்கே உரக்கச் சொல்லிச் சென்ற மறைந்த முதல்வர் ஜெயலலிதாவுக்கு நாங்கள் நிச்சயம் நன்றி சொல்லணும். அதுக்கப்புறம்தான், உலகமே இவங்க பக்கம் இருந்த நியாயத்தை உணர ஆரம்பிச்சது. இப்போகூட, தமிழக அரசியல் சூழலில், பல சிக்கல்களுக்கிடையே என் மகன் பரோலுக்காக நான் முதல்வரைச் சந்திக்க நேரம் கேட்டப்போ, நேரம் ஒதுக்கியதோடு உதவுவதாகவும் முதல்வர் உறுதியளிச்சார். சொன்னதுபோலவே இப்போது என் மகனுக்கு ஒரு மாதம் பரோல் கொடுத்து வீட்டுக்கும் அனுப்பி வெச்சிருக்காங்க. இந்த மகிழ்ச்சி முப்பது நாள்களுக்குள் வடிந்துவிடாமல், இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட அனைவருமே நிரந்தர விடுதலை பெற்று வீடு திரும்பணும். எங்களின் இந்த மகிழ்ச்சியை நிரந்தரமாக்க நல்ல உள்ளம் படைத்தவர்கள் நிச்சயம் உதவுவார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கு.

**ஒரு சின்ன அறைக்குள் 26 வருடங்களை கழித்த என் மகன் அறிவு**

இத்தனை ஆண்டுக்காலமாக தனியாகக் கழிவறை வசதிகூட இல்லாமல், உணவு, தூக்கம், காலைக்கடன்... என அனைத்துமே ஒரேயொரு சின்ன அறைக்குள்தான் என்று வாழ்க்கையைக் கழித்துவிட்டவன் அவன். எல்லோரையும் போல், என் பிள்ளையும் குடும்பம், குழந்தைகள் என எங்களுடன் வந்து வாழவேண்டும் என்ற ஆசையைத் தவிர வேறு எந்த ஆசையும் எனக்கு இல்லை... கண்ணீர்மல்க நம் கரங்களைப் பற்றி விடைகொடுத்தார் அற்புதம்மாள். ★

நன்றி- விகடன்

**அனைவரது பெரும் மகிழ்ச்சி, குதூகலம்30 நாள்களின் பின்னரும் நீடிக்க வேண்டும்**

---

## இலங்கையின் ஆதி குடிகள்! தமிழர்களே

## ‘உண்மை கூறியது’ அரசின் தபால்தலை

1956 ஆம் ஆண்டில் ‘‘விஜயனின் வருகை’’ என்ற தலைப்புடன் சிறப்பு தபால்(த்) தலை ஒன்றை இலங்கை அரசு வெளியிட்டது.

குவேனி ஒரு மரத்தடியில் அமர்ந்திருப்பது போலவும், கப்பலில் வந்த விஜயன் அவளிடம் அடைக்கலம் கோருவது போலவும் இந்த தபால்(த்) தலை அமைந்திருந்தது.

தபால்(த்) தலையைப் பார்த்த சிங்களத் தலைவர்கள், அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். ‘‘விஜயன் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வந்தவன் என்ற கருத்து ஏற்கத்தக்கது அல்ல. தவிரவும், விஜயன் வந்தபோதே இங்கு குவேனி என்ற தமிழ்ப் பெண் இருந்திருக்கிறாள் என்று கூறினால், இலங்கையின் பூர்வகுடிகள் தமிழர்கள் என்பதை நாமே ஒப்புக் கொண்டது போலாகி விடும். எனவே, இந்தத் தபால்(த்) தலையை மீளப் பெறவேண்டும்’’ என்று கூறினார்களாம்.பலரின் எதிர்ப்புக்களை அடுத்து இலங்கை அரசு, விஜயனின் வருகை பற்றிய தபால்(த்) தலையை மீளப் பெற்றுக் கொண்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

**இலங்கையின் ஆதி குடிகள் தமிழர்கள்தான் என்பதற்கான ஆதாரம்!**




விஜயன் வருகை பற்றி இலங்கை அரசு வெளியிட்டு பிறகு வாபஸ் பெற்றுக் கொண்ட தபால் தலை!!

காலைக்கதிர் Kalaikkathir





# உலகையே கலக்கிய போலி சாமியார்கள்!

## ரஸ்புடின் முதல் குர்மீத் சிங் வரை...!!

குர்மீத் ராம் ரஹீம் சிங்... தற்போது இந்தியாவை புரட்டிப் போட்ட ஒரு பெயர். இந்த ஒரு பெயர் 30 இற்கும் மேற்பட்ட உயிர்களைக் காவு கொண்டிருக்கிறது. 300 இற்கும் அதிகமானவர்களைப் படுகாயங்களுடன் கவலைக்கிடமான நிலையில் வீழ்த்தியுள்ளது. இரண்டு பெண்களின் கற்பைச் சூறையாடியுள்ளது. ஒரு போலிச் சாமியாருக்காக இவ்வளவு கலவரமா? ''நான் கடவுளின் அவதாரம், கடவுள் என்னுள் குடிகொண்டிருக்கிறார்'' என பிதற்றிக் கொண்டிருக்கும் சாமியார்கள் 'போலிகள்' என்று அறிந்த பின்னும் 'செம்மறி ஆட்டுக்கூட்டங்கள் போல பள்ளத்தில் விழும்' மக்கள் இன் றைக்கும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

சாமியார்களை தங்களின் ஆதர்ச நாயகர்களாக, தங்களை சொர்க்கத்துக்கு அழைத்துச் செல்லும் இறைவனின் தூதுவர்களாக நினைத்து அந்தப் போலிகளின் காலடியில் விழுந்து கிடக்கும் கூட்டம் தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியாவில் மட்டுமல்ல, உலகம் முழுவதுமே உள்ளனர். அந்தப் போலிகளின் மாயப்பேச்சு வலையில் வீழ்ந்துவிடுகிறார்கள். தங்களைக் காக்க வந்த கடவுளாகவே அவர்களை எண்ணி பிரார்த்திக்கவும் செய்கின்றனர். தன்னைக் 'கடவுள்' என்றும், தன்னால் ஆரம்பிக்கப்பட்ட இயக்கமே, ''கடவுளைச் சேருவதற்கான ஒரே வழி'' என்றும் மக்களை முட்டாள்களாக்கி பல உயிர்களைக் காவு கொண்ட உலக அளவிலான கொடூர சாமியார்கள் சிலரைப் பார்ப்போம்.

### ஜிம் ஜோன்ஸ்





ஒரு சாமியார் தனது பேச்சால், பக்தகோடிகளை எந்த அளவுக்கு அடிமையாக, எந்திரமாக மாற்ற முடியும் என்பதற்கு சிறந்த உதாரணம் தான் ஜிம் ஜோன்ஸ்! அமெரிக்காவின் 'ஜோன்ஸ் டவுன்' என்கிற பகுதியில் ஆசிரமம் நடத்தி வந்தார் ஜிம்ஜோன்ஸ். 1978 ஆம் ஆண்டு நவம்பர் 18 ஆம் திகதி தனது ஆசிரமத்தில், பிரமாண்ட இறையுரையாற்ற ஏற்பாடு செய்கிறார். ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்தகோடிகள் கூடுகின்றனர். ஜிம் ஜோன்ஸ்அரங்கம் முழுக்க ஒரே பக்தி மயம். வந்திருந்த பக்தகோடிகள் அனைவரும் கடவுளை காணும் ஆசையில் தங்களை மறந்து ஆடிக்கொண்டிருந்தனர். திடீரென மேடையில் தோன்றிய ஜிம் ஜோன்ஸ், ''என் அருமை குழந்தைகளே இந்த உலகை பொறுத்தவரையில் இதுவே நமது கடைசிச் சந்திப்பு. தீய சக்திகள் இந்த உலகத்தை அழிக்கப் போகின்றன. அவர்களி டம் இருந்து தப்பிக்க நாம் சொர்க்கத்துக்குச் செல்ல வேண்டும். வேறுவழி இல்லை... நாம் உயிர் தியாகம் செய்யவில்லை என்றால், விளைவுகள் விபரீதமாக மாறிவிடும்'' என்று பக்தர்களை மூளை சலவை செய்தான்.

பெரிய அளவு குடுவைகளில் எலுமிச்சை பழச்சாறுடன் சயனைட்டை கலந்தார்கள். அனைவரும் வரிசையில் வாருங்கள். குழந்தைகளுக்கு முன்னுரிமை. பின் அனைவருக்கும் வழங்கப்படும். மகிழ்ச்சியாக பருகுங்கள். நாம் அனைவரும் சொர்க்கத்துக்குச் செல்லப்போகிறோம் என்றார் ஜோன்ஸ். கூட்டம் கூட்டமாக குடித்து மடிந்தார்கள் பலர். முரண்டு பிடித்த சிலர் துப்பாக்கி முனையில் குடிக்கவைக் கப்பட்டனர். பக்தகோடிகள், சிஷ்யர்கள் அனைவரும் இறந்ததை உறுதி செய்தபின் ''நானும் வருகிறேன்'' என்று துப்பாக்கியால் தன்னைத் தானே சுட்டு இறந்தார் ஜோன்ஸ். விவரம் அறிந்து காவலர்கள் விரைந்து வந்து பார்த்தபோது அந்த ஆசிரமத்தில் 900 இற்கும் அதிகமானோர் இறந்து கிடந்தனர்.

ஆட்டு மந்தைகள் போல் அவர்களின் பின்னால் சென்று மடிந்தவர்கள் ஏராளம்...!

### ஷோகோ அசஹரா



ஜப்பானைச் சேர்ந்த ஷோகோ அசஹரா உருவாக்கிய 'ஒரே மதம் ஒரே கடவுள்' இயக்கம் தான் ஓம் ஷின்ரிக்கியோ. இந்த ஷோகோ அசஹரா கடவுளுக்கு ஒரு விசித்திர எண்ணம் தோன்றுகிறது. ''எப்படியும் இந்த உலகம் அழியப்போகிறது. அதை நாமே அழித்தால் என்ன?'' ஷோகோ அசஹரா என்று புது அவதாரம் எடுக்கிறார். 1995 ஆம் ஆண்டு, மார்ச் மாதம் ஒரு சுரங்கப் பாதையின் ஓரத்தில் இருந்த ஒரு பொட்டலத்தை துப்புரவுத் தொழிலாளர் எடுத்து பிரித்துப் பார்க்கிறார். அந்த பொட்ட லத்திலிருந்து ஏதோ ஒரு வித வாசனை காற்றில் கலக்கிறது. அதை சுவாசித்த அடுத்த நொடி அந்த பெண்ணின் கண் கருவிழிகள் இறுக ஆரம்பித்து, வாயில் நுரை தள்ளி இறந்து போனாள்.

அந்தப் பெண்ணுக்கு உதவ வந்தவர்களும் அதே போல இறந்து போனார்கள். அவர்களுக்கு உதவ வந்தவர்களுக்கும் அதே கதிதான். இதுபோன்ற தொடர் மரணங்கள் தொடர்கதையாக மாறின. மக்கள் அனைவரும் அப்படி என்ன பொருளைத் தொட்டார்கள்? சுவாசித்தார்கள்? அது 'சரின்' என்ற வேதிப் பொருள். இதை சுவாசிக்கும் மறுநொடியே வாயில் நுரை தள்ளி, கை, கால் வலிப்பு ஏற்பட்டு இறப்பார்கள். (நடப்பு ஆண்டில் 2017 இந்தக் கொடிய 'சரின்' என்ற வேதிப்பொருள் அடைத்து வைக்கப்பட்ட குண்டுகளை வீசியெறிந்து ஒரே நாளில் நூற்றுக்கும் மேற்பட்ட மக்களைக் கொன்று குவித்தது சிரியா என்பது குறிப்பிடத்தக்கது).

இதனால் ஜப்பானில் பலநூறு பேர் இறந்துபோனார்கள். இந்தக் கொடிய செயலை செய்தவர்கள் ஷோகோ அசஹராவும், அவரது மதத்தைச் சேர்ந்த சிஷ்யகோடிகளும்தான். ஜப்பான் அரசு, இந்தக் குற்றவாளியைக் கண்டுபிடித்து மரண தண்டனை விதித்ததோடு, 'ஒரே மதம் ஒரே கடவுள்' இயக்கத்தையும் தடை செய்தது. இப்போது ஷோகோ அசஹரா ஜப்பான் நாட்டுச் சிறையில் மரண தண்டனையைக் கழித்து வருகிறார்.

### டேவிட் கொரேஷ்



இந்தச்சாமியாரின்செயல்கள்ஹொலிவுட் படங்களின் அக்ஷன் ரகத்தையே தூக்கிச் சாப்பிட்டுவிடும். அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தின் வாக்கோ நகர் அருகே ஆச்சிரமம் அமைத்து சாமியார் வேஷம் போட்டு வந்தவர் டேவிட் கொரேஷ்.

தாவீது மதப்பிரிவின் டேவிட் கொரேஷ் தலைவர் என்றும், இறைவனின் இறுதி தீர்க்கதரிசி என்றும் தன்னைக் கூறிவந்தார். இதனால் இவருக்கு பக்தகோடிகள் ஏராளம். போலியான மத இயக்கத்தை ஆரம்பித்து மக்களை மூளை சலவை செய்து வருகிறார் என்று FBI இற்குத் தகவல் போனது.

1993 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் காவலர்கள் டேவிட் கொரேஷின் ஆசிரமத்தைச் சுற்றி வளைத்து சரணடைய கட்டளையிட்டனர். ''பக்தர்களே சாத்தான்கள் நம்மைச் சுற்றி வளைத்துவிட்டார்கள்.

(18 ஆம் பக்கம் பார்க்க..)



# ஊர்வம்பு

■ குருவியார்
thamizhkaalaikathir@gmail.com

# குபேரன் கொடுத்த கடனும் மகிந்த வகுக்கும் வியூகமும்!

சந்தியடியில் செல்லாச்சி கச்சான் கடையைத் திறந்து வியாபாரத்தை ஆரம்பித்தாள்.

அப்போது கைபேசியைப் பார்த்தபடியே வந்தமர்ந்த ஜீவன் ''காலக்கொடுமையைப் பாத்தீங்களே....இந்தியாவிலைவறுமையால்ஏராளமான சனம் படாத பாடுபடுகுதுகள். ஆனால் திருப்பதி வெங்கடாசலபதி ஆலயத்துக்குச் சொந்தமான இரண்டாயிரத்து எழுநூற்றிச் சொச்சம் கிலோ எடையுள்ள தங்கம் வங்கியில் வைக்கப்பட்டிருக்காம்.இதை எடுத்து இந்திய அரசாங்கத்தின் கடனையும் அடைச்சு சனத்தின் வறுமையையும் போக்கலாமே?'' என்று கேட்டான்.

''இளம் வயசிலை இப்படிக் கடவுள் காரியத்தை நக்கலடிக்கிறது நாகரிகமாகப் போட்டுது.'' என்று கடுப்பானார் ஏரம்பர்.

''இதிலை என்ன இருக்கு. அவன் கேட்கிறதிலையும் ஒரு விதத்திலை நியாயம் இருக்குத்தானே.இங்கேயும் மத அமைப்புகள் முடிந்தவரை சமூகசேவையில் ஈடுபட வேண்டும் என்றுதானே சொல்லுறனாங்கள்''என்றாள் செல்லாச்சி கச்சான் வியாபாரத்தை கவனித்தபடியே.

இவற்றைக் கேட்ட வாத்தியார் ''இந்தியாவில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் அறிமுகமான பிறகு,அடிக்கடி கேட்கப்படும் கேள்வி 'திருப்பதி ஏழுமலை வெங்கேடசப் பெருமாள், குபேரனிடம் பெற்ற கடன் எவ்வளவு? அதற்கான வட்டியாக இதுவரை எவ்வளவு தொகை செலுத்தப்பட்டு உள்ளது? இன்னும் எத்தனை ஆண்டுகளில் இந்த கடன் நிறைவடையும்?' என்பதுதானே.இதுக்கு பதில் சொல்லியே திருப்பதி ஆலய அதிகாரிகள்களைச்சுப் போயிட்டினமாம்.''என்றார்.

''இதென்ன புதுக்கதையாக இருக்கு. எல்லோருக்கும் சொத்து சுகத்தைக் கொடுக்கிற கடவுளுக்கே கடன் இருக்கோ?'' என்று கேட்டான் ஜீவன்.

''அது காலம் காலமாகச் சொல்லப்படும் கதை.''என்று சொன்ன ஏரம்பர் அந்தக் கதையைப் பக்திபூர்வமாகச் சொல்ல ஆரம்பித்தார்.

''ஒருமுறைஇலட்சுமி தனது கணவரான திருமாலுடன் கோபித்துக்குக் கொண்டு பூலோகத்தில் ஆகாசராஜன் என்ற மன்னனுக்கு பத்மாவதி என்ற மகளாகப் பிறந்தாராம். அவரை மணம் முடிக்க திருமால் பூலோகத்தில் வெங்கடாசலபதியாக அவதரித்தாராம். இலக்குமிதேவி உடனில்லாத காரணத்தால் திருமாலிடம் கலியாணச் செலவுக்குப் பணமில்லையாம்.அதனால் பணம் அருளும் குபேரனிடம் திருமணச் செலவுக்குக் கடன் வாங்கினாராம்.இந்தக்கடனுக்கு வட்டியாக கலியுகம் முடியும் மட்டும் வட்டி கட்டுவதாகத் திருமால் வாக்குறுதி அளித்தாராம்.அதன்படிதான் பக்தர்கள் செலுத்தும் காணிக்கையைத் திருப்பதி ஆலயம் குபேரனுக்கு வட்டி செலுத்துவதாகக் கூறி, வங்கிகளில் இட்டு வருகிறது'' என்று சொல்லி முடித்த ஏரம்பர், கண்களை மூடி மானசீகமாகத் திருப்பதி வெங்கடசலபதியை கும்பிட்டுக் கொண்டார்.

''இதனடிப்படையில்தான் இந்தியாவில் இருக்கும் பலரும் திருப்பதித் தேவஸ்தான அதிகாரிகளிடம் பெருமாளின் கடன் பற்றிக் கேள்வி எழுப்புவது வழக்கமாகி இருக்கிறது. ஆனால் இதற்குப் பதில் சொல்ல மறுத்து விடும் கோவில் அதிகாரிகள் 'புராண, இதிகாசங்களில் ஏழுமலையான் குபேரனிடம் கடன் வாங்கியதாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால் சிலர் இதற்குச் சாட்சியங்கள் தேவை என்றும், இதுவரை தேவஸ்தானம் சார்பில் குபேரனுக்குக் கட்டிய வட்டி குறித்துக் கணக்கு காட்ட வேண்டும் என்றும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கேட்டு வருகின்றனர். சுய விளம்பரத்துக்காக கேட்கப்படும் இதுபோன்ற கேள்விகளுக்கு பதில் அளிக்க தேவையில்லை 'என்று சொல்லி காணிக்கையை வங்கியில் வைப்பிலிட்டு வருகின்றனர்.அதனால்தான் இவ்வளவு மூலதனம் வங்கியில் முடங்கிக் கிடக்கிறது.''என்று சொன்னார் வாத்தியார்.

''இன்றைக்குச் சந்தியடியில் பக்தி மணம் கமழுது'' என்று ஊர்வம்பில்கலந்துகொண்டான் பேப்பர்தம்பி.

''நாங்கள் ஊர்வம்பில் கதைக்கிறபோது,முடிந்தவரை எவரையும் குறிப்பிட்டுக்கதைப்பதில்லை.ஆனால் நாங்கள் தங்களைப்பற்றித்தான் குறிப்பிடுவதாக கிளம்பி கும்மியடிக்கிறவையை என்ன செய்யிறது என்றுதான் தெரியவில்லை'' என்று புதுக்கதையைத் தொடங்கினான் ரூபன்.

''இதைப் பார்த்தால் இலக்குமணனின் சிரிப்புத்தான் ஞாபகம் வருகிறது''என்றார் வாத்தியார்.

''அதென்ன சிரிப்பு?''என்று கேட்டாள் செல்லாச்சி.

சொல்லத் தொடங்கினார் வாத்தியார்.

''இராமாயணத்திலை இராவண வதம் முடிந்து,சீதையை மீட்டுக் கொண்டு, அயோத்தி திரும்பிய இராமனுக்கு முடிசூட்டு விழா நடந்ததாம்.அதற்காக எல்லோரும் சபா மண்டபத்தில் கூடியிருந்தார்களாம். அப்போது இராமனுக்குச் சாமரம் வீசிக் கொண்டிருந்த இலக்குவன் தனக்குத் தானே புன்னகைத்தானாம்.இதைக்கண்ட வசிட்ட முனிவர் 'தான் முன்னர் குறித்துக் கொடுத்த நாள் பிழைத்து, இராமன் காடேகியதால், தனது சோதிட அறிவைக் கேலி செய்து சிரிக்கிறானோ' என்று நினைத்தாராம்.இராமனோ' இராவணனின் பிடியிலிருந்த சீதையைக் கூட்டி வந்து அருகில் வைத்திருக்கும் தன்னைப்பாத்து சிரிக்கிறானோ' என்றுநினைத்தானாம்.சீதையோ தான் இராவணனிடம் இருந்ததை எண்ணிச் சிரிக்கிறானோ என்று துணுக்குற்றாளாம்.இப்படி அங்கிருந்த மற்றவர்கள் ஒவ்வொருவரும் தங்களை எண்ணியே இலக்குவன் சிரிப்பதாகக் கருதினார்களாம்''என்று சொல்லி விட்டு வீட்டில் இருந்து கண்ணாடிப் போத்தலில் கொண்டு வந்த தண்ணீரில் ஒரு மிடறு குடித்தார்.

''அப்ப இலக்குவன் உண்மையில் ஏன் சிரித்தான்?'' என்று ஆவலை அடக்க முடியாமல் கேட்டார் ஏரம்பர்.



''இராமனும் சீதையும் வனவாசம் போனபோது உடன் போனவன் இலக்குவன்.அப்போது இராமனைப் பாதுகாப்பதற்காக 'மீண்டும் இராமன் அயோத்தி திரும்பும்வரை தனக்கு நித்திரையே வரக்கூடாது' என்று நித்திராதேவியிடம் இலக்குவன் வரம் வாங்கியிருந்தானாம்.அயோத்தி திரும்பிய இராமனுக்கு முடிசூட்டு விழா நடக்கவிருந்தபோது, இலக்குவனுக்கு நித்திரை வந்ததாம்.அதை எண்ணியே இலக்குவன் சிரித்தானாம். தன்னை எண்ணித் தானே சிரித்த இலக்குவனின் சிரிப்பை, தங்களைப் பார்த்துத்தான் சிரிப்பதாக நினைத்த மற்றவர்களின் நிலைதான் நீங்கள் சொல்லுற ஆக்களினதும்.அவர்களைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை''என்றார் வாத்தியார்.

''மொட்டைக்கடிதம் என்பது தவறான விடயமாகத்தான் நம்மால் பார்க்கப்படுகிறது. ஆனால் இந்தியாவில் வல்லுறவு வழக்கில் தண்டனை பெற்ற சாமியாரின் விசயம் இந்தளவுக்கு வந்ததே பாதிக்கப்பட்ட பெண் ஒருவர் பிரதமருக்குப் போட்ட மொட்டைக் கடிதத்தால்தானே. சமூகத்தில் பெரும்பான்மையினரால் கதைக்கப்படாத விடயங்களையும்,குரல் எழுப்ப வாய்ப்பில்லாமல் அடக்கி வைக்கப்படுகின்றவர்களின் குரலையும் பிரதிபலிப்பது ஊடகத்தின் முக்கிய கடமை.அத்தோடை உயர் மட்டத்தில் இருப்பவர்களிடம் சாதாரண மக்களால் அணுகி, தங்களின் கருத்துகளைச் சொல்ல முடிவதில்லை.அந்த மக்களின் கருத்துகளை அதிகாரத் தரப்புகளிடம் எடுத்துச் சொல்வதும் ஊடகங்கள்தானே. வரக்கூடிய ஆபத்துகளை முன்கூட்டியே எச்சரிப்பதும் ஊடகங்கள்தானே. சந்தியடியில் நாங்கள் கதைக்கிற ஊர்வம்பு அந்தக் கடமைகளைத்தான் செய்யுது.இதை பிழையென்று சொல்லுறவையைப்பற்றிகவலைப்படத் தேவையில்லை'' என்று ஆணித்தரமாகச் சொன்னான் பேப்பர்தம்பி.

''நல்லாட்சி அரசாங்கம் 2020ஆம்ஆண்டுவரைஇருக்கும் என்று சொல்லியாச்சு. ஆனாலும் அதுக்கு இடையில் எங்கடை பிரச்சினைகளுக்கு தீர்வு வந்து,அடுத்த சந்ததியாவது நிம்மதியாக வாழ முடியுமா என்பதுதான் சந்தேகமாகவே இருக்கு''என்று அடுத்த கதைக்குத் தாவினான் ரூபன்.

''இதிலை எனக்கு ஒரு விசயம்தான் விளங்குதில்லை. மகிந்த மீண்டும் ஆட்சிக்கு வந்தால் தமிழருக்கு மட்டுமில்லையே; இப்ப அதிகாரத்திலை இருக்கிறவைக்கும்தானே ஆப்பு. அதோடை ஈழத்தமிழர் பிரச்சினையில் தீர்வைத் தரவேண்டிய பொறுப்பு தென்னிலங்கைத் தலைமைகளுக்கும் தானே இருக்கு.சம்பந்தர் ஐயா தமிழர் தரப்பை சமாளித்து தீர்வொன்றை ஏற்கவைக்கிறார் என்றே வையுங்கோ.மகிந்தவை சமாளித்து தீர்வொன்றை சிங்கள மக்களை ஏற்கவைக்க வேண்டியது தென்னிலங்கத் தலைமைகளின் பொறுப்பெல்லோ. பிறகேன் சம்பந்தர் ஐயா மகிந்தவோடை தேத்தண்ணி குடிக்கிறார்'' என்று சலித்தபடி சொன்னாள் செல்லாச்சி.

''நல்லாட்சி அரசின் தலைமைகள் கூடிக்குலாவுகிற அளவுக்கு, அடுத்த மட்டங்கள் மனமொத்துப் போகவில்லை என்றும்,இதைத் தனக்குச் சாதகமாக்கவே மகிந்த வியூகம் அமைப்பதாகவும் தெற்கு நண்பர் ஒருவர் சொன்னார்'' என்றான் பேப்பர்தம்பி.

''கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுமன்''என்றார் ஏரம்பர்.

சொல்லத் தொடங்கினான் பேப்பர்தம்பி.

''சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் காலம் காலமாக எதிரெதிராக மோதியவை. எங்கடை தமிழரசுக் கட்சியும் கொங்கிரஸ் கட்சியும் போல. ஆனால் எங்களுக்கு 'இனப் பிரச்சினைக்குத் தமிழீழம்' என்ற தீர்வைத் தூக்கிக் காட்டினதாலை அந்த இரு கட்சிகளைச் சேர்ந்தவர்களும் சேர்ந்து தற்காலிகமாக இணைஞ்சு செயற்பட்டிச்சினம்.'' என்று சொல்லி மூச்சு வாங்கினான் பேப்பர்தம்பி.

''உண்மையில் தேர்தல் தோல்விப் பயத்தால்தானே இணைஞ்சதாக பழைய ஆக்கள் சிலர் சொல்லுகினம். இப்பவும் தேர்தலுக்காகத்தானே சம்பந்தமில்லாத கட்சியிலை போட்டியிடுவதும், பிறகு தலைமையை எதிர்க்கிறதும் என்று எல்லாமே தேர்தல்,பதவி என்றுதானே சுத்தியடிக்குது'' என்று எரிச்சலுடன் சொன்னான் ஜீவன்.

அதைக் கேட்டுப் புன்னகைத்த பேப்பர்தம்பி ''மகிந்தவின் குடும்ப ஆட்சி' என்ற ஒன்றைக் காட்டித்தான் நல்லாட்சிஅரசுஅமைக்கப்பட்டது. ஆனால் கட்சி வேறுபாட்டால் சிங்களப் பக்கங்களிலை அடித்தட்டு மக்களிடையே இருக்கிற வன்மமும்,அதிகாரம் செலுத்த முடியாத உள்ளூர் அரசியல்வாதிகள் ,பதவியில் இருக்கிற உள்ளூர் அரசியல்வாதிகளின் மீது பரஸ்பரம் காட்டும் பகையுணர்ச்சியும் நீறு பூத்த நெருப்பாக இருக்காம்.இதை விசிறி விட்டு புழுக்கத்தில்இருப்பவர்களைத் தனது பக்கம் வளைக்கத்தான் மகிந்த முயற்சிப்பதாக கதைக்கினம்'' என்றான்.

''உள்ளூரில் இருக்கிற கட்சிபேதங்கள் தேர்தலில் கவிழ்த்துவிடும்என்பதால்தான் நல்லாட்சியை இழுத்துப் பிடிச்சுவைச்சிருக்கும் முயற்சிகளை செய்யினம்போல இருக்கு'' என்றான் ரூபன்.

''இங்கேயும் எங்கடை அரசியல்வாதிகள் மூச்சு விடுறது கூட அடுத்த உள்ளூராட்சித் தேர்தல் வெற்றியைக் குறிவைச்சுத்தானே என்று சனம் கதைக்கத் தொடங்கீட்டுது. இப்பதானே கனபேருக்கு சனத்தின்றை பிரச்சினைகளே ஞாபகத்துக்கு வருகுது. இதெல்லாவற்றையும் விட, முக்கியமான கட்சிகளின் முக்கியமான பதவிகளில் இருப்பவர்கள் 'இல்லாமல் போனால்' அந்தப் பதவிகளைக் கைப்பற்றி கட்சியைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் வித்தைகளையும் சிலர் ஆங்காங்கே சத்தமில்லாமல் செய்யினம் போல இருக்கு''என்று காதில் விழுந்ததைச் சொன்னாள் செல்லாச்சி.

''ஒன்று மட்டும் விளங்குது.மக்கள் அரசியலில் ஈடுபாடுகாட்டாமல் எல்லாப் பிரச்சினைகளையும் மற்றவர்கள் பார்க்கட்டும் என்று விட்டேந்தியாக இருந்தால் ,எதிர்காலம் இருண்டு போவது நிச்சயம்'' என்றபடியே எழுந்து நடந்தார் வாத்தியார்.

மற்றவர்கள் அவரைத் தொடர்ந்தனர். செல்லாச்சியும் கச்சான் கடையைக் கட்டத் தொடங்கவே சந்தியடி அமைதியானது.

## துன்புறுவோரிடம் இயேசு பிரசன்னம்


இன்று துன்புறும் சகோதர சகோதரிகளிடம் இயேசு பிரசன்னமாகியிருக்கிறார் என கட்டாயத்தின் பேரில் காணாமற்போக வைக்கப்படும் மக்களை நினைவு கூரும் உலக நாள் 30 ஒகஸ்ட் 2017 அன்று திருத்தந்தை பிரான்சிஸ் டுவிட்டர் செய்தி வெளியிட்டுள்ளார். 2011ம் ஆண்டு முதல் கட்டாயத்தின் பேரில் காணாமற்போக வைக்கப்படும் மக்களை நினைவுகூரும் உலக நாள் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

காலைக்கதிர்
கிறிஸ்தவ செய்தி இதழ்
TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

## மனித கற்களால் கட்டப்படும் திருஅவை

திருஅவையைக்கட்டியெழுப்புவதில்ஒவ்வொருவரின் பங்களிப்பும் வித்தியாசமானதாக இருப்பினும் ஒவ்வொருவரும் முக்கியமானவர்கள். சிறிய கற்களாக இருக்கும் நாம் இயேசுவால் தேர்ந்தெடுக்கப்பட்டு உயிருள்ள கற்களாக மாற்றம்பெற்று திருஅவையின் கட்டுமானப் பணிகளில் பங்கெடுக்கிறோம். புனித பேதுருவும் பெரிய பாறை அல்ல மாறாக இயேசு அவரைத் தேர்ந்து ஒன்றிப்பின் மையமாக மாற்றினார் என்றார் திருத்தந்தை.

# யாழ் அடைக்கல அன்னை ஆலயத்திற்கான அடிக்கல் நடப்பட்டு 110ஆவது ஆண்டு





யாழ்.அடைக்கல அன்னை ஆலய பங்குத்தந்தை ஜே.பி. அன்ரனிதாஸ் அடிகளார் மேற்படி திருவிழா பற்றிக் காலைக் கதிர் கிறிஸ்தவ செய்தி இதழுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போது தற்போதைய யாழ். அடைக்கல அன்னை ஆலயத்திற்கான அடிக்கல் நடப்பட்டு 2017ஆம் ஆண்டு 110ஆவது ஆண்டாகும். அதையொட்டி ஆலயம் பலவகைகளிலும் புனருத்தாரணம் செய்யப்பட்டு புது வடிவம் கொடுக்கப்பட்டுள்ளது. கூரை திருத்தப்பட்டு - கீழ்சீற் அடிக்கப்பட்டு - மின் இனைப்பு சீர்செய்யப்பட்டு - ஒலி அமைப்பு திருத்தப்பட்டு - புது வர்ணம் பூசப்பட்டு ஆலயமே புது வடிவம் பெற்றுள்ளது. ஆவணி மாதம் 28ஆம் திகதி யாழ்.ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை பங்கு மக்கள் புடைசூழ அடைக்கல அன்னைக்குப் பொன் முடிசூட்டி அன்னை கடந்த போர்க்காலங்களில் பங்கு மக்களுக்குத் தந்த முழுமையான பாதுகாப்பிற்கும் - அன்னை பரிந்து பேசி பெற்றுத்தந்த அனைத்து அருள்வரங்களுக்கும் - அன்னை அன்புத் தாயாய் புரிந்த அனைத்து அற்புதங்களுக்கும் பங்கு மக்கள் எல்லோர் பெயராலும் நன்றி தெரிவித்தார்.

யாழ்.அடைக்கல அன்னை ஆலய பெருவிழா செப்ரெம்பர் மாதம் 8ஆம் திகதி 2017 அன்று காலை 6.30 மணிக்கு யாழ்.ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப் பிரகாசம் ஆண்டகை தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படும். திருநாளுக்கு முன்னைய தினம் நடததப்படும் வேஸ்பர் ஆராதனையை பங்கு மகனும் கொழும்பு உயர் மறை மாவட்டத்தில் கல்விப்பணி ஆற்றுபவருமான பி.அன்ரன் றஞ்சித் அடிகளார் தலைமை தாங்கி நடத்துவார். மறையுரையை பாலதாஸ் பிறையன் அடிகளார் நடத்துவார்என யாழ் அடைக்கல அன்னை ஆலய பங்குத்தந்தை ஜே.பி.அன்ரனிதாஸ் அடிகளார் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கும் போது தற்போதைய யாழ். அடைக்கல அன்னை ஆலயத்திற்கான அடிக்கல் நடப்பட்டு 2017ஆம் ஆண்டு 110ஆவது ஆண்டு கொண்டாடப்படுவதையொட்டி பல பணிகளை ஆற்ற வேண்டிய போது எல்லா வகைகளிலும் துணை புரிந்த அனைத்து பங்கு மக்களுக்கும் அன்பு நன்றி தெரிவிக்கிறேன்.- என்றார்.

## உண்மையின் எண்ணங்கள்

### இளையோரை நெறிப்படுத்துவது இலகுவான காரியமல்ல!

தேசிய கத்தோலிக்க இளையோர் வாரத்தை முன்னிட்டு யாழ் மறைமாவட்ட கத்தோலிக்க இளையோர் ஒன்றியமும் பலநிகழ்ச்சிகளை முன்னெடுத்துள்ளமை பாராட்டத்தக்கது. கொடிவார நிகழ்வை யாழ். மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆணடகை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்து முன்னுரிமைப்படுத்தியுள்ளார்.

எம்.வி.இ.இரவிச்சந்திரன் அடிகளார் இயக்குநராக இளையோருடன் இணைந்து மகத்தான பணி ஆற்றிய பின்னர் இப்போது ஸ்ரீபன் அடிகளார் இயக்குநராக பொறுப்பேற்றுள்ளார்.

இன்று இளையோரை நெறிப்படுத்துவது இலகுவானதல்ல. அன்பு செய்தல் – புரிந்து கொள்ளல் – ஏற்றுக்கொள்ளல் – விட்டுக் கொடுத்தல் – பொறுப்புக்கொடுத்தல் என்பவற்றோடு முன்னே வழிகாட்டியாகவும் பின்னே தள்ளிக் கொடுப்பவராகவும் செயற்பட வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக அவர்களோடு ஒருவாரக நிற்கவேண்டும். இன்று இளையோர் பற்றிய எதிர்பார்ப்புக்கள் விமர்சனங்கள் மத்தியில் ஸ்ரீபன் அடிகளாரின் பணி சிறக்க வாழ்த்துவோம்.

## அன்னை தெரேசாவுக்காக அர்ப்பணிக்கப்படும் புதிய கோவில்

நாளை மறுதினம் அன்னை தெரேசாவின் திருவிழா அன்று அன்னையின் பெயரால் கோசொவோ நாட்டின் பிரிஸ்டினா எனுமிடத்தில் திறக்கப்படவிருக்கும் கோவில் திருநிலைப்பாட்டு நிகழ்வுக்குத் தன் பிரதிநிதியாகக் கர்தினால் சிமோனி அவர்களை நியமித்து செய்தி ஒன்றையும் அனுப்பியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

தற்போது இருக்கும் கோசொவோநாட்டிற்குஅருகிலேயே பிறந்த அன்னை தெரேசாவுக்கு கோசொவோவில் வாழும் அல்பேனிய மக்கள் வெளியிட்ட விருப்பத்தின்பேரில் கட்டப்பட்டுள்ள இக்கோவில் கோசொவோ தலைநகர் பிரிஸ்டினாவில் நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை திருநிலைப்படுத்தப்பட உள்ளது. செர்பியாவிலிருந்து 2008ம் ஆண்டு சுதந்திர நாடாக பிரிவதாக அறிவித்து சில நாடுகளாலேயே அங்கீகரிக்கப் பட்டுள்ள கோசொவோ நாட்டின் தலைநகரில் பெரும்பான்மையாக வாழும் அல்பேனிய மக்களிடையே அன்னை தெரேசாவிற்கு அர்ப்பணிக்கப்பட்ட இக்கோவில் அவ்வன்னை இறந்த நாளும், திருநாளும் இணைந்துவரும் நாளை மறுதினம் திருநிலைப் படுத்தப்பட்டுதிறக்கப்படஉள்ளது.

# கருக்கலைப்பு சட்டத்திற்கு இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் கடும் எதிர்ப்பு



எந்த ஒரு காரணத்தைக் கொண்டும் மனித உயிர்களை அழிப்பதற்கு யாருக்கும் உரிமை இல்லை. பாலியல் வன்கொடுமையால் உருவான கருவையும் அங்கக் குறைப்பாடுகள் உள்ளதெனக் கண்டறியப்படும் கருவையும் கலைப்பதற்கு இலங்கை அரசு அண்மையில் கொண்டு வந்துள்ள சட்டத்தை கண்டனம் செய்து இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை அறிக்கை வெளியிட்டுள்ளது.

கருவில் வளரும் குழந்தை முதல் இயற்கையாக மரணம் எய்தும் மனிதர்கள் வரை எந்த ஒரு நிலையிலும் மனித உயிரைப் பறிப்பதற்கு யாருக்கும் உரிமை கிடையாது என இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை ஆயர்கள் மேலும் வலியுறுத்தியுள் ளனர்.

2016ஆம் ஆண்டின் ஜூலை – ஒகஸ்ட் மாதங்களிலும் இதேபோன்று அரசு முயற்சித்தமையை முன்னிட்டு இலங்கை ஆயர்கள் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்து நீதித்துறை அமைச்சருக்கு கடிதம் அனுப்பியதும் குறிப்பிடத் தக்கது. இலங்கையில் ஒவ் வோர் ஆண்டும் ஏறக்குறைய நான்கு இலட்சம் பெண்கள் கருத்தரிக்கின்றனர். இவர்களில் ஏறக்குறைய 15ஆயிரம் பெண்கள் சட்டத் திற்குப் புறம்பே கருக்கலைப்பு செய்கின்றனர். இவர்களில் பத்துப் பேர் வீதம் ஒவ்வோர் ஆண்டும் இறக்கின்றனர்.

# யாழ்ப்பாண மறைமாவட்டக் கத்தோலிக்க இளையோர் ஒன்றியத்தால் கொடிவாரம்



ஒகஸ்ட் 28ஆம் திகதி முதல் செப்ரெம்பர் 3ஆம் திகதி வரை இலங்கையில் தேசிய ரீதியில் கடைப்பிடிக்கப்படும் தேசிய கத்தோலிக்க இளையோர் வாரத்தை முன்னிட்டு யாழ்.மறைமாவட்ட கத்தோலிக்க இளையோர் ஒன்றியத்தால் கொடிவாரம் 28 ஆவணி 2017 அன்று அனுஷ்டித்தது. அன்றைய கொடிவார நிகழ்வை யாழ். மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண் டகை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டபோது பதியப்பட்ட காட்சிகள் இவை. செப்ரெம்பர் 3ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை திருப்பலியை இளையோருக்கான திருப்பலியாக ஒப்புக்கொடுக்கும்படி இயக்குநர்ஸ்ரீபன் அடிகளார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.




ஆவணி 28ஆம் திகதி முதல் செப்ரெம்பர் மாதம் 3ஆம் திகதிவரை இலங்கையில் தேசிய ரீதியில் கடைப்பிடிக்கப்படும் தேசிய கத்தோலிக்க இளையோர் வாரத்தை முன்னிட்டு யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க இளையோர் ஒன்றியத்தால் கொடிவாரம் 28 ஆவணி 2017 அன்று அனுஷ்டித்தது. அன்றைய கொடிவார நிகழ்வை யாழ். மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையால் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்ட போது பதியப்பட்ட காட்சிகள் இவை. செப்ரெம்பர் 3ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை திருப்பலியை இளையோருக்கான திருப்பலியாக ஒப்புக்கொடுக்கும்படி இயக்குநர் ஸ்ரீபன் அடிகளார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



# மகளுக்கு மார்க் வைத்த பெயர்!

பேஸ்புக் நிறுவனத்தின் இணை நிறுவுநர் மார்க் சக்கர்பெர்க் என்றால் இன்றைய தலைமுறைக்குத் தெரியாமல் இருக்க வாய்ப்பில்லை. மார்க் தம்பதிக்கு இரண்டாவது பெண் குழந்தை பிறந்தது.

இன்று பெரும்பாலானோர் தாங்கள் பெற்றோர் ஆவதை பேஸ்புக் மூலமாகத்தான் உலகிற்கு தெரியப்படுத்துகிறார்கள். இதற்கு பேஸ்புக் இணை நிறுவுநர் மார்க்கும் விதிவிலக்கு அல்லர். தனது இரண்டாவது குழந்தையை இந்த உலகிற்கு அறிமுகம் செய்தார். அந்தக் குழந்தைக்கு ஒகஸ்ட் என்று பெயரிட்டுள்ளார்.


அந்தத் தகவலை,தனது மகளுக்கு எழுதும் ஒரு கடிதமாக அவர் எழுதியுள்ளார். அதில் அவர், “இந்த உலகிற்கு உன்னை வரவேற்கிறேன்’’.

வளர்ந்த பிறகு நீ என்னவாக ஆவாய் என்பதை தெரிந்து கொள்ள நானும் உனது அம்மாவும் மிகவும் ஆர்வமாக உள்ளோம். உனது அக்கா பிறந்தபோது, இந்த உலகம் குறித்து ஒரு கடிதம் எழுதினோம். இந்த சமத்துவமான உலகில் வலிமையான சமூகத்தில் அவளும், இப்பொழுது நீயும் நல்ல கல்வியுடனும் நல்ல உடல் நலத்துடனும் வளர வேண்டும்.

இதை நாங்கள் வளர்ந்து வரும் அறிவியல் தொழில்நுட்பத்தை மனதில் வைத்துக் கூறுகிறோம்.

ஆனால், அதைச் செய்வதில் எங்களின் பங்களிப்பு நிறையவே உள்ளது. உங்களின் வளர்ந்த பருவத்தைப் பற்றி பேசுவதை விட உங்களின் குழந்தை பருவத்தைப் பற்றி பேசவே விரும்புகிறோம். இந்த உலகம் ரொம்ப சீரியஸ் ஆன இடம். அதனால், வெளியே சென்று விளையாடுவது மிக முக்கியம்.

குழந்தை பருவம் என்பது அழகானது. தவிர அது ஒரு முறைதான் நம் வாழ்வில் நடக்கும். அதனால் எதிர்காலம் குறித்த கவலைகளின்றி மகிழ்ச்சியுடன் வாழ வேண்டும் என்று கூறியுள்ளார்.



# 40 லட்சத்துக்கு ஏலம் போன கடிதம்

ஜேர்மனியைச் சேர்ந்த பிரபல இயற்பியல் விஞ்ஞானி ஐன்ஸ்டீன் எழுதிய கடிதம் ஒன்று 40 லட்சம் ரூபாவிற்கு ஏலம் போனது.

ஜேர்மனியைச் சேர்ந்த பிரபல இயற்பியல் விஞ்ஞானி அல்பர்ட் ஐன்ஸ்டீன். இவர் தனது நெருங்கிய நண்பர் மைக்கேல் பெஸ்கோவுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார்.

அதில் கடவுள் மற்றும் பல பொருள்கள் குறித்து விவாதித்து இருந்தார்.

அக்கடிதம் கடந்த 1950ஆம் ஆண்டு ஏப்ரல் 15ஆம் திகதி எழுதப்பட்டது.

அது சமீபத்தில் ஏலம் விடப்பட்டது. அப்போது 40 லட்சம் ரூபாவிற்கு ஏலம் போனது.


# லைக் போடவும் லைசென்ஸ்

## ‘பேக் ஐடி’களை ஒழிக்கும் சீனா!

கருத்துரிமை என்பது ஜனநாயக நாட்டில் மக்களின் அடிப்படை உரிமைகளில் ஒன்று. ஆனால், சீனா ஜனநாயக நாடும் இல்லை. அங்கு கருத்துரிமைக்கு அனுமதியும் இல்லை. அரச அதிகாரிகளின் ஊழல் பற்றி எழுதிய பத்திரிகையாளர்கள், அரசுக்கு எதிராக கருத்துத் தெரிவித்த நெட்டிசன்கள் அனைவரும் எவ்விதப் பாரபட்சமின்றி கைது செய்யப்பட்டிருக்கின்றனர். நாட்டுக்கு எதிரானவர் என்றால் எப்பேற்பட்ட மனிதரையும் சிறையில் தள்ளத் தயங்காது அந்நாடு.

சீனாவில் இணையம் என்பது அனைவருக்குமானது அல்ல. அங்கு தணிக்கை என்ற பெயரில் இணையத் தளங்களுக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் ஏராளம். ஒவ்வொரு பக்கமும் தணிக்கைக்குப் பின்னரே அங்கு வெளியிட முடியும். இதை மீறும் இணையதளங்களுக்கு சீனாவில் இடமில்லை. இணையத்தைத் தணிக்கை செய்யும் அந்நாட்டு அரசின் நடவடிக்கைகளை, ‘தி கிரேட் பயர்வோல் ஒப் சீனா’ என வெளிநாட்டுப் பத்திரிகைகள் விமர்சனம் செய்துவருகின்றன. சீனாவின் சர்வாதிகாரம் காரணமாக விக்கிபீடியா, பேஸ்புக் நிறுவனங்கள் அங்கிருந்து வெளியேறின. உலகில் அதிக அளவில் பத்திரிகையாளர்கள் மற்றும் இணையவாசிகளைக் கைது செய்த நாடு சீனா தான். இதனால், ‘நெட்டிசன்களைப் பொறுத்தவரை சீனா தான் உலகின் மிகப்பெரிய சிறை’ என பாரிஸ் நகரை மையமாகக் கொண்டு செயற்படும் செய்தியாளர்கள், தலைப்புச் செய்திகளை எழுதினர்.

1989 ஆம் ஆண்டு சீன அரசுக்கு எதிராக தியான்மென் சதுக்கத்தில் மாணவர்களும், தொழிலாளர்களும் பல்வேறு போராட்டங்களை நடத்தினர். இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது, அரசு இராணுவத் தாக்குதல் நடத்தியதில் உயிரிழந்தவர்களின் உண்மையான எண்ணிக்கையைக்கூட அந்நாடு வெளியிடவில்லை. தியான்மென் சதுக்கத்தில் நடந்த போராட்டங்கள் குறித்து விக்கிபீடியாவில் இருந்த கட்டுரையை நீக்கச் சொல்லி அந்நாடு உத்தரவிட்டது. இதிலிருந்து தான், சீனாவுக்கும் விக்கிபீடியாவுக்குமான மோதல் போக்கு தொடங்கியது. மேலும், தங்கள் நாட்டைப் பற்றிய தகவல்கள் அனைத்தும் தணிக்கை செய்யப்பட்ட பின்பே, இணையத்தில் வெளியிடப்பட வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கட்டுப்பாடுகளை அதன்பின் சீனா விதிக்கத் தொடங்கியது. தற்போது விக்கிபீடியா அங்கு தடை செய்யப்பட்டுள்ளது. சீன அரசு தனக்கென ஒரு கலைக்களஞ்சியத்தைத் தற்போது உருவாக்கி வருகிறது.



பேஸ்புக், கூகுள் போன்றவை சீனாவில் தடை செய்யப்பட்டுள்ளதால், அவற்றுக்குப் பதிலாக சீனத் தயாரிப்புகளான வெய்போ, பாய்ட் போன்றவைகளே அங்கு அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றன. இந்நிலையில், சோஷியல் மீடியாவைப் பயன்படுத்தும் மக்களுக்கு மேலும் ஒரு கட்டுப்பாட்டை விதிக்க விருக்கிறது சீன அரசு. உண்மையான அடையாளத்துடன் இணைக்கப்பட்ட ஐடிகள் மட்டுமே கமென்ட் செய்யும் வகையில் இணையத் தளங்களுக்கு கட்டுப்பாடு விதிக்கவிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. போலியான கணக்கில் இருந்து கமென்ட் செய்ய முடியாது என்பதால் வதந்திகளும், போலியான செய்திகளும் வெளியாவதைத் தடுக்க முடியும் என சீன அரசு தெரிவித்துள்ளது. இந்தக் கட்டுப்பாட்டால் அந்நாட்டு மக்களின் கருத்து சுதந்திரத்தின் கழுத்து நெரிபடும் என்பதே உண்மை. அரசுக்கெதிரான கருத்தைத் தெரிவிப்பவர்கள் எளிதாக அடையாளம் காணப்பட்டு, அரசின் நெருக்கடிகளுக்கு ஆளாக்கப்படுவர். இதைத் தான் அந்நாடு விரும்புகிறது.

# அனந்தியின் அமைச்சர் பதவி தொடர வேண்டும்

வடமாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் புனர்வாழ்வு மகளிர் அமைச்சராகப் பதவியேற்றமையையிட்டு கிராமிய உழைப்பாளர் சங்கம் மகிழ்ச்சியடைகின்றது. தமிழ்த் தேசிய விடுதலைக்காகத்தன்னை அர்ப்பணித்த ஒரு போராளியின் துணைவி என்ற வகையிலும், வடமாகாண சபைத் தேர்தலில் விக்னேஸ்வரனுக்கு அடுத்தபடியாக அதிகூடுதலான வாக்குகளைப் பெற்றவர் என்ற வகையிலும், காணாமற் போனவர்கள் விவகாரம், போரால் பாதிக்கப்பட்டவர்களின் விவகாரம், அரசியல் கைதிகள் விவகாரம் என்பவற்றில் அக்கறையுடன் தொழிற்படும் செயற்பாட்டாளர் என்ற வகையிலும் -

பெண்களின் நலன்களில் அக்கறையுள்ள பாதிக்கப்பட்ட பெண் என்ற வகை யிலும், தமிழ்த் தேசிய அரசியல் மீது உறுதியான பற்றுடையவர் என்ற வகையிலும், அரசாங்க சேவை அனுபவம் உள்ளவர் என்ற வகையிலும் அமைச்சர் பதவிக்கு அவர் பொருத்தமுடையவர் எனக் கிராமிய உழைப்பாளர் சங்கம் கருதுகின்றது.

தமிழ்த் தேசிய அரசியல் மீது உறுதியான பற்றுக் காரணமாகவும் அதன் வழி போர்க்குற்றம் தொடர்பாக சர்வதேச விசாரணை கோரி நின்றமையாலும் இணக்க அரசியல் நடத்தும் தமிழரசுக் கட்சியின் தலைமையினால் ஒழுக்காற்று விசாரணை எனக்கூறி கட்சியிலிருந்து அவர் தற்காலிகமாக நீக்கப்பட்டார். பல வருடங்களாகியும் சிறிலங்கா அரசு போல ஒழுக்க விசாரணையை கட்சித் தலைமை இன்னமும் நடத்தவில்லை. நீண்டகாலமாக விசாரணைக் கைதி நிலையிலேயே அவர் இருக்கிறார்.

ஒழுக்க விசாரணை என்பதைச் சாட்டி அவரது அமைச்சுப் பதவியை எதிர்காலத்தில் பறிக்கும் சூழ்ச்சி இடம் பெறலாம். இதன் பின்னணியில் முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு மறைமுக அழுத்தமும் கொடுக்கப்படுகிறது போலத் தெரிகின்றது. முதலமைச்சர் இந்தச் சதித்திட்டம் எவற்றுக்கும் இடம் கொடாது மாகாண சபைக்காலம் முழுவதும் அனந்தி சசிதரன் பதவி வகிப்பதற்கு ஒழுங்குகள் செய்யவேண்டும் எனக் கிராமிய உழைப்பாளர் சங்கம் வேண்டுகின்றது.

குறிப்பிட்ட இந்தப் புனர்வாழ்வு மகளிர் விவகாரம் , கூட்டுறவுத்துறை அமைச்சுப் பதவி அவருக்கு முன்னரேயே வழங்கியிருக்க வேண்டும். தற்போதாவது அந்த முடிவை முதலமைச்சர் எடுத்தமையையிட்டு கிராமிய உழைப்பாளர் சங்கம் நன்றி தெரிவிக்கின்றது. அத்துடன், அமைச்சுப் பதவியை முழுமையாகப் பயன்படுத்தி மக்களுக்குச் சேவையாற்ற இருக்கின்ற காலம் போதுமானதல்ல. இருந்தும் அவர் பொறுப்பேற்றுக் கொண்டமையானது அமைச்சரின் தன்னம்பிக்கையையும் தற்றுணிவையும் வெளிக்காட்டி நிற்கின்றது.

அந்த வகையில், அனந்தி சசிதரனின் பணிகளுக்கு கிராமிய உழைப்பாளர் சங்கம் தொடர்ந்தும் ஒத்துழைப்புக்களைத் தரும் என உறுதியளிப்பதோடு அமைச்சருக்குத் தனது வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றது.

**கிராமிய உழைப்பாளர் சங்கம்**
**உரும்பிராய் வடக்கு.**

# உலகையே கலக்கிய...

(14 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

கொடிய சாத் தான்களிடமிருந்து நம்மைப் பாதுகாத்துக்கொள்ள அனைவரும் ஆயுதம் ஏந்துங்கள்'' என்று அனைவரிடமும் யந்திரத் துப்பாக்கியை நீட்டினான்.

பக்தர்கள் சுட்டதில் நான்கு காவலர்கள் பலியாகினர். விளைவு காவலர்களுக்கும், பக்தர்களுக்கும் இடையே கடும் சண்டை நடந்தது. 51 நாட்கள் நடந்த யுத்தத்தின் முடிவில் பீரங்கி வந்ததால், டேவிட் கொரேஷுக்கு பின்னடைவு ஏற்பட்டது. ''பொலிஸ் என்ற சாத்தான்கள் கையில் ஒருவர்கூட சிக்கிக்கொள்ளக் கூடாது. உலக வாழ்வு முடிந்துவிட்டது. நாம் சொர்க்கத்துக்குக் கிளம்புவோம்'' என்று டேவிட் கொரேஷ் சொல்ல... அனைவரும் தங்களது உடலுக்கும், ஆசிரமத்துக்கும் தீ வைத்துக்கொண்டனர். விளைவு 23 குழந்தைகள் உட்பட 80 பேர் தீயில் கருகி மாண்டனர்.

**ரஸ்புடின்**

இந்தச் சாமியார் சற்று வேறு ரகம். 'பொப்படல்' அல்பமெல்லாம் இவரால் தாறுமாறாய் எகிறியது. விவசாயக் குடும்பத் தில் பிறந்த இவரின் ஆசை மனிதர்களைக் கொல்வதல்ல. 'பில்லி சூனியம், ஹிப்னாடிசம் கற்றுக்கொண்டு புகழின் உச்சத்தை அடைவது. அதனால் கிடைக்கப்படும் பலனை அனுபவிப்பது' ஆகியவைதான். இவருக்குக் 'குட்டி கடவுள்' என்ற சிறப்புப் பெயரும் உண்டு. இவருடைய சிறுவயதில், வீட்டில் வளர்க்கப்பட்ட குதிரை ஒன்று காணாமல் போனது. யார் திருடன் என்று ஒருவரை கைநீட்டிக் குற்றம்சொல்லி குத்துமதிப்பாக அள்ளிவிட்டார். காக்கை உட்கார பனம்பழம் விழுந்த கதையாக, அவரேதான் திருடன். இது போதாதா? குட்டிக் கடவுள் என்ற பெயரைச் சூட்டுவதற்கு!

வளர வளர இவரின் ஆசை ரஷ்ய ராஜ குடும்பத்தின் பக்கம் திரும்பியது. இளவரசனுக்கு இருந்த நோயைக் குணப்படுத்துவதாகச் சொல்லி அரண்மனைக்குள் நுழைந்தவர் கடைசியில், ராணியைத் தன் மாயவலையில் சிக்க வைத்தார். இதனால் ஆட்சி நிர்வாகம் சீர்கெட்டு தடுமாறியது. ஒருபக்கம் இவரை மக்கள் குட்டிக் கடவுளாகக் கண்டாலும், மறுபக்கம் மக்களின் கோபம் ரஷ்யப் புரட்சிக்கு வித்திட்டது. ஒருநாள் ரஸ்புடின் மர்மமான முறையில் கொல்லப்பட்டுக் கிடந்தார்.

இதே போல எத்தனை எத்தனையோ போலி சாமியார்கள் உலகம் முழுவதும் முளைத்துக் கொண்டுதான் இருக்கின்றனர். இதில் என்ன கொடுமை என்றால், ஒவ்வொரு முறையும் ஒரு போலி சாமியார் காவலர்களிடம் மாட்டிக்கொள்வதைப் பார்க்கும் மக்கள், அடுத்தமுறை புதிய போலி சாமியார் வரும்போது எல்லாவற்றையும் மறந்துவிட்டு அந்தப் புதுச்சாமியாரையும் நம்புகின்றனர்.

போலிச் சாமியார்களும் இதைத் தமக்கு சாதகமாக்கிக் கொண்டு பல்வேறு முறைகேடுகளை செய்து வருகின்றனர். ஏன், எதற்கு, எப்படி என்ற கேள்விகளைத் தங்களுக்குத் தாங்களே கேட்டுக் கொண்டு ஒவ்வொரு விஷயத்தையும் சுயமாகச் சிந்தித்து முடிவெடுக்கும் திறனை வளர்த் துக்கொள்ளுதலே இதுபோன்ற போலிகளிடமிருந்து மக்களைப் பாதுகாக்கும் வழி! சுருக்கமாகச் சொன்னால், 'பகுத்தறிந்து செயல்படுவதே பாதுகாப்பு!' ★

# இரசாயனக் கலப்பின்றி இயற்கை வழியில் விவசாயம் செய்வோம் வாரீர்!

மேட்டுநிலங்கள் அவை தோட்டம் செய்யும் மண்கள். அந்த மண் வளத்தைச் செழிப்பாக்கவும் அரிதாக விளைவிக்கப்படும் மாரிமழையுடன் வளரக்கூடிய பயிர்வகைகளின்உற்பத்தியை அதிகரிக்கவும் இந்த 2017/2018 மாரி மழைப்போகத்தில் ஓர் அவசர வேலைத் திட்டத்தை செயற்படுத்த முன்வருவீர்களா?



**மேட்டுக்காணிகளில் 2017/2018 ஆம் ஆண்டு காலபோக மானா வாரி பயிர்ச்செய்கை.**
**செய்ய வேண்டிய வேலைத் திட்டங்கள்.**

1.வடமாகாணத்திலுள்ள சகல தோட்டக் காணிகளும் பருவ மழைக்குமுன் துப்புரவாக்கப்பட்டு வேலிகள் சரிபார்க்கப்பட்டு மானாவாரியாக பயிர்ச் செய்கைக்குத் தயார்ப் படுத்தப்படுத்துதல் இது 2017.09.15 ஆம் திகதிக்கு முன்னர் செய்துமுடிக் கப்படுதல்.

**மாரி மழையுடன் எமது மண்வளத்தை செழிப்பாக்குவோமா?**

2.வேலிகளில் கதிகால் நட வேண்டியிருப்பின் பூவரசு, கிளி சூரியா போன்ற மரங்களை மட்டும் நடவேண்டும். இவை பின்னர் பசுந்தாட் பசளைக்கும் மாட்டுத் தீவனத்திற்கும் உகந்த இலை தழைகளாகப் பயன்படுத்தலாம்.

3.இப்போது பெய்துள்ள உழவு மழையைப் பயன்படுத்தி நிலத்தைக் கொத்தியோ உழுதோ மண்ணைத் தகுந்த முறையில் பண்படுத்தி வைத்தல்.

4.பின் புரட்டாதி கடைசியில் அல்லது ஐப்பசியில் பருவமழை ஆரம்பமாகும் போது அந்த மேட்டுக் காணியில் உழுந்து, பயறு, கௌபி, நிலக்கடலை அல்லது சணல் பயிரை விதைத்தல். இந்தப் பயிர்கள் (Legumes) என்ற வகையில் நிலத்தில் நைதரசனை நிலைபெறச் செய்து மண்ணைச் செழுமையாக்கும். (தேவையான விதைகளுக்கு இப்பொழுதே அதற்கேற்ற விதை விற்பனை/ உற்பத்திப் பகுதியினரோடு தொடர்புகொண்டு நேரத்திற்குக் கிடைக்க உறுதிசெய்யப்பட வேண்டும்.)

5.ஓரளவு பள்ளம் சார்ந்த காணிகளாயின் வரகு, சோளன், குரக்கன் போன்ற பயிர்களைச் செய்ய மக்கள் முன்வர வேண்டும். பனங்காணிகளில் வரகு விதைத்தலை மீண்டும் ஆரம்பிக்க முயலுங்கள்.

6.அக்கராயன்குளம், வவுனிக்குளம் போன்ற குடியேற்றப் பகுதிகளில் காட்டோரம் மிருக அழிவுக்கு அச்சமான இடங்களாயின் அங்கு ஆமணக்கம் விதைகளைப் பயிரிட முடியும். இந்தப் பயிர் எந்தப் பராமரிப்புமின்றித் தானாக விளைச்சலைத் தரும். இதன் விளைச்சலைப் பெயின்ற் கம்பனிக்கு விற்கலாம்.

7.வேலிகளில் படரக் கூடியதாக பயித்தை, பாகல், அவரையினம், பிசுக்குவகை போன்ற வேறும் ஏற்ற வகையான கொடிப் பயிர் வகைகளையும் நட்டு வருமானம் பெறலாம்.

உழுந்து, பயறு, கௌபி, நிலக் கடலை, சணல் போன்ற பயிர்களுக்கிடையில் களைகள் வளரமாட்டா. மழை சீராகப் பெய்தால் பூச்சி, புழுத் தொல்லையும் ஏற்படாது. தெளிப்பான்களும் அதிகம் தேவைப்படா.

தெளிப்பான்களாக வேப்பம் மர விதை, இலைகளிலிருந்து தயாரிக்கப்படும் அவித்த நீரையேசாணியையோ, மாட்டு சலக் கலவையையோ பயன்படுத்தவும்.


தேவையான வேலிக்கேற்ற கதிகால்கள் மற்றும் உழுந்து, பயறு, கௌபி, நிலக் கடலை, சணல், எள்ளு, ஆமணக்கு, வரகு, குரக்கன், சோளன் ஆகியவற்றின் விதைகளை தேவையான விவசாயிகளுக்கு விநியோகிக்கக்கூடிய விதை உற்பத்தியாளர்களிடமும் விவசாயத் திணைக் களத்திடமும் முன் கூட்டியே விண்ணப் பித்துப் பெற்றுக்கொள்ளுங்கள்.

வரகு விதைக்க முன்வருபவர்கள் தேவையான விதைக்கு சிறுதானியப் பயிர் உற்பத்தியாளர் சங்கத்திடம் பெற்றுக் கொள்ளலாம். அளவெட்டியிலும் வவுனியாவிலும் விதை வரகு பெறலாம்.

வடமாகாணத்திலுள்ள சகல மேட்டுக் காணிகளும் மானாவாரிப் பயிர்ச்செய்கைக்குள் கொண்டு வரப்பட்டால் எமது மண் வளத்தை செழிப்பாக்குவது மட்டுமன்றி, எதுவித மேலதிக முயற்சியும் இன்றி ஒரு பணப்பயிர்ச்செய்கை யில் இலாபமடையவும் முடியும்.

*இயற்கைவழி விவசாயத்துடன் இணைவோம்.*


*பொருளாளர் - கந்தையா சிவகுமார்*
*தலைவர் - கனக. நமநாதன்*
*செயலாளர் - துரை. கனகரத்தினம்*
*சிறுதானியப்பயிர் உற்பத்தியாளர் சங்கம்*





# பாக். கராச்சி நகரில் மழை, பெருவெள்ளம்!



இஸ்லாமாபாத்.செப்.03

பாகிஸ்தானில் சில தினங்களாகப் பெய்து வரும் கனமழையால் ஏற்பட்ட வெள்ளத்தினால் 23 பேர் உயிரிழந்திருக்கின்றனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாகிஸ்தானின் முக்கிய நகரமான கராச்சியில் கடந்த புதன் கிழமை முதல் கனமழை பெய்து வருகிறது. இதனால் நகரம் முழுவதும் வெள்ளக்காடாக காட்சியளிக்கிறது.

மழை வெள்ளம் தொடர்பான விபத்துக்களில் 7 குழந்தைகள் உட்பட 23 பேர் பலியாகி விட்டனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்களில் பலர் மின்சாரம் தாக்கி இறந்துள்ளனர் மேலும் 400 இற்கும் மேற்பட்ட வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. இதனால் பொதுமக்கள் அதிக அளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பிரதமர் ஷாகித் ககான் அப்பாசியின் ஆணையின்பேரில் இராணுவம் மற்றும் துணை இராணுவப் படைகள் மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் மோட்டர் மூலம் தெருக்களில் உள்ள நீரை வெளியேற்றும் பணியில் ஈடுபட்டுள்ளனர். மேலும் கப்பல் படையினர் படகுகள் மூலம் வெள்ளத்தில் சிக்கியுள்ள மக்களை மீட்டு வருகின்றனர். (ப)

## தனக்குத் தானே பிரசவம் பார்த்த தாய்!

அமெரிக்காபிட்ட்டிஸ்பர்க்கை சேர்ந்த நிறைமாதக் கர்ப்பிணி ஒருவர் தன் காரில் வேலைக்குச் சென்று கொண்டிருக்கும் போது தன் குழந்தையை தானே பிரசவம் பார்த்து காரினுள் பிரசவித்துள்ளார்.

நிறை மாத கர்ப்பிணியான குறித்த பெண் காரில் சென்று கொண்டிருக்கும் போது பிரசவ வலி ஏற்பட உதவிக்கு யாருமில்லாத நிலையில் தனக்குத்தானே பிரசவம் பார்த்துள்ளார்.

ஆனால், பிரசவிக்கப்பட்ட குழந்தை பனிக்குடம் உடையாமல் வெளியில் வந்துள்ளது. பனிக்குடம் உடையாமல் பிறந்த குழந்தையை தாய் உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றுள்ளார்.

வைத்தியசாலையில் தாய்க்கும் சேய்க்கும் விரைந்து சிகிச்சையளிக்கப்பட்டு இருவரும் காப்பாற்றப்பட்டுள் ளனர். பனிக்குடத்துடன் பிறந்த குழந்தை உயிருடன் இருப்பது அப் பகுதி மக்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. (ப)

## வடகொரியா செல்ல அமெரிக்கருக்கு தடை!

வொஷிங்டன்.செப்.03

வடகொரியா நாட்டுக்கு சுற்றுலாவோ அல்லது வேறு பணி நிமித்தமாகவோ அமெரிக்கர்கள் யாரும் செல்லக்கூடாது என அந்நாட்டு அரசு பிறப்பித்த உத்தரவு நேற்று முன்தினம் முதல் அமுலுக்கு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


அமெரிக்காவின் வெர்ஜீனியா பல்கலைக்கழக மாணவரான ஒட்டோ வார்ம்பியர் (22) கடந்தாண்டு வடகொரியாவுக்கு பயணம் செய்த போது, அந் நாட்டு அரசால் உளவு குற்றச்சாட்டின் பேரில் சிறையில் அடைக்கப்பட்டார். அரசின் பிரசார சுவரொட்டியை திருட முயன்ற குற்றச்சாட்டில் 15 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். பின்னர், வாம்பியரின் உடல்நிலை மோசமாகி கோமா நிலைக்கு சென்றதால், கடந்த ஜூன் மாதம் விடுவிக்கப்பட்டார்.

அமெரிக்காவில் மருத்துவ சிகிச்சை மேற்கொண்டு வந்த வாம்பியர் சிறையிலிருந்து வீடு திரும்பிய ஒரே வாரத்தில் மரணமடைந்தார். வாம்பியர் கோமா நிலைக்குச்சென்றதற்கு வடகொரிய அரசின் கொடூரச் சித்திரவதைகள் தான் காரணம் என அவரது குடும்பத்தினர் குற்றம் சாட்டியிருந்தனர். மேலும், வடகொரியாவில் மிருகத்தனமான ஆட்சி நடப்பதாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் காரசாரமான கருத்துக்களைத் தெரிவித்திருந்தார்.

அமெரிக்காவின் கண்டனங்களை பொருட்படுத்தாமல் வடகொரியா தொடர்ந்து ஏவுகணைகளை சோதனை செய்துவருகின்றது. குறிப்பாக அமெரிக் காவைக் குறிவைத்து கண்டம் விட்டுக்கண்டம் பாயும் ஏவுகணைகளை வடகொரியா சோதித்துள்ளதால் அமெரிக்கா ஆத்திரமடைந்தது.

இதனையடுத்து, இரு நாடுகளுக்கும் இடையே போர்ப்பதற்றம் அதிகரித்தது. இந்நிலையில், அமெரிக்க குடிமக்கள் யாவரும் வடகொரியாவுக்கு இன்று முதல் சுற்றுலாவோ அல்லது வேறு பணி நிமித்தமாகவோ செல்லக்கூடாது என்று அமெரிக்க அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. (ப)

## மதிப்புரை எழுதிய 4 பத்திரிகையாளருக்கு மரண தண்டனை விதித்தது வடகொரியா!



டியோல்.செப்.03


அவதூறு செய்தி வெளியிட்டதாக 4 தென் கொரிய பத்திரிகையாளர்களுக்கு மரண தண்டனை விதிக்க வடகொரியா உத்தரவிட்டுள்ளது.

வட கொரியாவுக்கும், தென் கொரியாவுக்கும் இடையே நீண்ட காலமாக பகை இருந்து வருகிறது. தென் கொரியாவுக்கு ஆதரவாக அமெரிக்கா செயற்படுகிறது. அது வட கொரியாவுக்கு கடும் ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது. தென் கொரியா மற்றும் அமெரிக்காவை மிரட்டும் வகையில் அணு ஆயுதங்கள் மற்றும் ஏவுகணைகளை வீசி சோதனை நடத்தி வருகிறது. தற்போது வட கொரியாவுக்கும், தென்கொரியாவுக்கும் இடையே மோதல் உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது.

சமீபத்தில் வடகொரியா புத்தகம் வெளியிட்டது. தென்கொரியாவைச் சேர்ந்த பத்திரிகையாளர்கள் 4 பேர் இந்தப் புத்தகத்துக்கு மதிப்புரை எழுதினார்கள். அதில் வடகொரியா குறித்து அவதூறாக எழுதி இருந்ததாக குற்றம் சாட்டப்பட்டது.

எனவே புத்தகத்துக்கு மதிப்புரை எழுதிய 4 பேருக்கு மரண தண்டனை விதித்து வடகொரியா உத்தரவிட்டுள்ளது.

## அமெரிக்க வெள்ள அனர்த்தம்; வெடிக்கும் தொழிற்சாலைகள்



அமெரிக்காவை தாக்கிய ஹார்வி சூறாவளியால் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டுள்ள ஹூஸ்டன் நகருக்கு அண்மையிலுள்ள இரசாயனத் தொழிற்சாலையில் வெடிப்புகள் இடம்பெற்றுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

குரொஸ்பி பிராந்தியத்திலுள்ள அர்கெமா இரசாயனத் தொழிற்சாலையில் இரு வெடிப்புகளையடுத்து கரும் புகை வெளிப்பட்ட வண்ணம் உள்ளதாகக் கூறப்படுகிறது.

ஹார்வி சூறாவளியையடுத்து அந்த இரசாயனத் தொழிற்சாலையிலுள்ள இரசாயன உள்ளடக்கங்களை குளிர்விப்பதற்கு தேவையான குளிரூட்டல் வசதி செயற்படத் தவறியதையடுத்து அதிக வெப்பம் காரணமாக இந்த வெடிப்புகள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அந்தத் தொழிற்சாலையில் வெடிப்பு இடம்பெறுவதைத் தவிர்க்க வேறு வழி கிடையாது என அந்தத் தொழிற்சாலை நிர்வாகம் ஏற்கனவே தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (ப)

# அரசியலில் குதிப்பதற்கு தயாராகின்றாரா கமல்?

## — கேரள முதலமைச்சரிடம் அரசியல் ஆலோசனை —

அரசியல் பற்றி கேரள முதலமைச்சர் பினராயி விஜயனிடம் ஆலோசனை பெற்றதாக நடிகர் கமலஹாசன் கூறியுள்ளார்.

நடிகர் கமல்ஹாசன் கேரள மாநிலம் திருவனந்தபுரம் சென்றார். அங்கு கேரள முதல் அமைச்சர் பினராயி விஜயனை அவரது வீட்டுக்குச் சென்று சந்தித்து ஓணம் வாழ்த்து தெரிவித்தார். பதிலுக்கு கமல் ஹாசனுக்கு ஓணம் வாழ்த்து தெரிவித்த பினராயி விஜயன்,





**என் கதாநாயகர்கள் பலரும் கம்யூனிஸ்ட் தலைவர்கள் தான்**

அவருக்கு ஓணம் விருந்து வழங்கினார்.

முதலமைச்சருடனான சந்திப்புக்கு பின்னர் வெளியே வந்த கமல்ஹாசன் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

முதலமைச்சர் பினராயி விஜயனுடன் ஓணம் விழாவை கொண்டாடவே திருவனந்தபுரத்துக்கு வந்தேன். நான் ஒவ்வொரு முறையும் கேரளாவுக்கு வருவதை ஒரு படிப்பினையாக எடுத்துக் கொள்கிறேன். பினராயி விஜயனுடனான சந்திப்பில் அரசியல் நோக்கம் இருக்கலாம். அவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்பது முக்கியம் இல்லை. அவரது கருத்துகள், திட்டங்கள், பணிகள் மக்கள் நலனை பிரதிபலிப்பனவாக இருக்கின்றன.

அரசியலில் நான் இப்போது பயிலும் காலத்தில் இருக்கிறேன். அந்த வகையில் அவரிடம் ஆலோசனையும் பெற்றுள்ளேன். தலைவர்களின் அனுபவங்களை அறிந்து கொள்ள அவர்களுடனான சந்திப்பு நன்மை பயக்கும். அந்த வகையில் பினராயி விஜயனின் ஆலோசனைகளை ஏற்றுக்கொள்வேன். கம்யூனிஸ்ட் தலைவர்கள் பலரை நான் கதாநாயகர்களாக பார்க்கிறேன்.

தமிழக சட்டசபையில் பெரும்பான்மையை நிரூபிக்க ஆளுநர் உத்தரவிட மறுத்ததை பற்றி நான் என்ன கூற முடியும்? தமிழக அரசியலில் தற்போதைய நிகழ்வுகளை பார்த்தால் ஒரு கொமெடி படம் போல் உள்ளது.

அரசியலில் ஈடுபடுவது குறித்து பினராயி விஜயன் மட்டுமல்ல வேறு சில தலைவர்களிடமும் ஆலோசனைகளைப் பெறுவேன். நான் எந்தக் கட்சியையும் நோக்கி செல்லவில்லை. அரசியல் கட்சி தொடங்குவது குறித்து இப்போது நான் ஏதாவது கூறினால் அது சரியாக இருக்காது.

இவ்வாறு கமலஹாசன் கூறினார்.

கமலஹாசனிடம் அவரது அரசியல் சார்புத்தன்மை பற்றி நிருபர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்கு அவர் நான் 40 ஆண்டு காலமாக சினிமாத் துறையில் இருக்கிறேன். உங்களுக்கு ஒன்றை சொல்வேன். எனது நிறம் காவி அல்ல என பதில் அளித்தார். (ப)

# சிறை சென்ற சாமியார் குர்மீத்துக்கு பத்ம விருது வழங்குமாறு பரிந்துரை

புதுடில்லி.செப்.03

பாலியல் வன்புணர்வு வழக்கில் சிறை சென்ற தேரா சச்சா சவுதா அமைப்பின் சாமியார் ராம் ரகீம் சிங்கிற்கு 2017ஆம் வருடத்திற்கான பத்ம விருது வழங்க வேண்டும் என 4,208 பேர் பரிந்துரை செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேரா சச்சா சவுதா அமைப்பின் தலைவரான சாமியார் குர்மீத் ராம்ரகீம் சிங் தனது இரு பெண் சீடர்களை வன்புணர்வு புரிந்தார் என்ற வழக்கில் குற்றம் சாட்டப்பட்டார். இந்த வழக்கில் கடந்த 28ஆம் திகதி அவருக்கு சி.பி.ஐ. நீதிமன்றம் மொத்தம் 20 வருட சிறைத் தண்டனை விதித்தது.

இந்நிலையில், பத்ம விருது வழங்குவதற்கான பரிந்துரையை மத்திய உள்துறை அமைச்சகம்



சமீபத்தில் கோரியது. இதைத் தொடர்ந்து, பத்ம விருதுகளுக்காக சுமார் 18,768 விண்ணப்பங்கள் வந்துள்ளன.

இதில், மிகவும் அதிக அளவாக 4,208 பேர் தேரா சச்சா சவுதா அமைப்பின் சாமியார் ராம் ரகீம் சிங் பெயரை பரிந்துரை செய்துள்ளனர் என்று செய்தி நிறுவனம் ஒன்று தொகுத்த தகவலின் அடிப்படையில் தெரிய வந்துள்ளது. ராம்ரகீம் சிங்கிற்கு பத்ம விருதுகளில் மூன்றில் ஏதேனும் ஒன்றை வழங்கும்படி அவர்கள் கோரியுள் ளனர்.

இவை அனைத்தும் தேரா அமைப்பின் தலைமையகம் அமைந்துள்ள சிர்சா நகரில் இருந்தே வந்துள்ளன. ராம்ரகீமின் பெயரை சிர்சா நகரைச் சேர்ந்த அமீத் என்பவர் 31 முறையும், சுனில் என்பவர் 27 முறையும் பரிந்துரை செய்துள்ளனர். மேலும், தனக்கு விருது வழங்கக் கோரி ராம்ரகீம் சிங்கே 5 முறை பரிந்துரை செய்துள்ளதும் அந்த அறிக்கையில் தெரிய வந்துள்ளது.

# ஒரிசாவில் மின்னல் தாக்கி 9 பேர் சாவு!

புவனேஸ்வர்.செப்.03

ஒரிசா மாநிலத்தில் மின்னல் தாக்கியதில் வெவ்வேறு பகுதிகளைச் சேர்ந்த சுமார் 9 பேர் ஒரே நாளில் பலியாகி உள்ளனர்.

ஒரிசா, மேற்குவங்கம், அசாம் உட்பட வட கிழக்கு மாநிலங்களில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது.

இந்த மழையி னால் ஏற்பட்ட வெள் ளத்தில் சிக்கி பலர் உயிரிழந்துள்ளனர். மேலும் பல கோடி ரூபா அளவிற்கு பொருள் சேதம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், ஒரிசா மாநிலத்தில் மின்னல் தாக்கியதில் வெவ்வேறு பகுதிகளைச் சேர்ந்த ஒன்பது பேர் நேற்று முன்தினம் உயிரிழந்தனர். மேலும் ஆறு பேர் காயமடைந்தனர்.

சுந்தர்கர் மாவட்டத்தில் இரண்டு பேர் உயிரிழந்தனர். இதுதவிர பாலசோர், பாத்ராக், ஜார்சுகுடா, பார்கார், கேந்தபாரா, கியோஞ்சார் மற்றும் ஜஜ்பூர் மாவட்டங்களில் தலா ஒருவர் என மொத்தம் ஒன்பது பேர் உயிரிழந்துள்ளனர் என்று வருவாய்த் துறைத் தரப்பில் கூறப்பட்டுள்ளது. (ப)

# நான் ஓர் ஆண்மையற்றவன்; கதறினார் சாமியார் குர்மீத்!

பாலியல் வன்புணர்வு வழக்கில் 20 ஆண்டுகள் சிறைத்தண்டனைவிதிக்கப்பட்டுள்ள ராம் ரஹிம், விசாரணையின் போது தான் ஒரு ஆண்மையற்றவர் என வாதாடினார் என்று தெரியவந்துள்ளது.

2002ஆம் ஆண்டு பெண் சீடர்கள் இருவரை பாலியல் வன்புணர்வுசெய்துகொண்டார் எனத் தொடரப்பட்ட வழக்கில் சாமியார் குர்மீத் ராம் ரஹீமுக்கு 20 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இதையடுத்து ஹரியானா, பஞ்சாப் உள்ளிட்ட வட மாநிலங்களில் பெரும் கலவரம் வெடித்தது. ராம் ரஹீமின் ஆதரவாளர்களால் நிகழ்த்தப்பட்ட கலவரத்தில் 30 இற்கும் மேற்பட்டோர் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்த வழக்கில் சி.பி.ஐ நீதிமன்றத்தின் விசாரணையின் போது, தான் ஓர் ஆண்மையற்றவர் என்றும், கடந்த 1990ஆம் ஆண்டு முதல் யாருடனும் பாலியல் ரீதியான உறவை வைத்துக் கொள்ள முடியாத நிலையில் தான் உள்ளார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சி.பி.ஐ. சிறப்பு நீதிபதி ஜெக்தீப் சிங் முன்பு இவ்வாறு தெரிவித்த ராம் ரஹிம், தான் ஓர் ஆண்மையற்றவர் என்பதை பரிசோதிக்க விசாரணை அதிகாரிகள் மறுத்துவிட்டனர் எனவும், தான் குற்றமற்றவர் எனவும் தெரிவித்துள்ளார்.

இதை கேட்ட நீதிபதிகள், அப்படியென்றால் உங்களுக்கு எப்படி 2 மகள்கள் பிறந்தார்கள் என்ற கேள்வியை எழுப்பிய தோடு, ராம் ரஹீமின் கோரிக்கையை ஏற்கவும் மறுத்துவிட்டனர்.

தன் சீடர்களையே பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கிய ராம் ரஹிம் ஒரு கொடூரமான மிருகம் போன்றவர் எனவும் நீதிபதி தெரிவித்துள்ளார்.

தண்டனை வழங்கப்பட்ட பிறகு தன் இரு கைகளையும் கூப்பி தன்னை மன்னித்து விடும்படி ராம் ரஹிம் கெஞ்சினார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# இலங்கை கிரிக்கெட் வீரர்கள் உளவியல் ரீதியாகப் பாதிப்பு!

ஷெஹான் சேமசிங்க தெரிவிப்பு

இலங்கை கிரிக்கெட் துறையின்வீழ்ச்சிக்குவீரர்கள் காரணமல்லர். கிரிக்கெட் நிர்வாகமே காரணமாகவுள்ளது. எனவே அது தொடர்பில் நாடாளுமன்றில் விவாதம் நடத்துமாறு கூட்டு எதிர்க் கட்சிசபாநாயகரிடம்வேண்டு கோள் விடுக்கவுள்ளது.

அத்துடன் இலங்கை கிரிக்கெட்சபையின்தலைவர் உடனடியாக தனது பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஷெஹான் சேம சிங்க தெரிவித்துள்ளார்.

கூட்டு எதிர்க்கட்சி ஏற்பாடுசெய்த ஊடகவியலாளர் சந்திப்பு பொரளையிலுள்ள என்.எம். பெரேரா நிலையத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்-

இலங்கைக் கிரிக்கெட் தொடர்பில் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும்



திலங்க சுமதிபால

அமைச்சருமான அர்ஜுன ரணதுங்க அரசாங்கத்தின் மீது கடுமையான குற்றச் சாட்டுகளை முன்வைத்தி ருந்தார். எனவே அது தொடர்பில் இருபத்து நான்கு மணி நேரத்தில் மக்களைத் தெளிவுறுத்துமாறு அரசாங்கத்திடம் நாம் வேண்டுகோள் விடுத்திருந்தோம்.

எனினும் இரு வாரங்கள் கடந்துள்ள நிலையிலும் அது தொடர்பில் அரசாங்கம் எதுவித அறிவித்தல்களும் வெளியிடப்படவில்லை.

மேலும் அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவிற்கும் விளையாட்டுத்துறைஅமைச் சருக்குமிடையில் அமைச்சரவையில் பிணக்கு ஏற்பட்டுள்ளதாக அறியமுடிகிறது. எனவே இது மிகவும் பார தூர மான விடயமாகும். ஆகவே உரியவிசாரணை நடத்திமக்களைத்தெளிவுறுத்துமாறு அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் கிரிக்கெட் தரவரிசையில் இலங்கை அணி தற்போது பின்வரிசைக்குச் சென்றுள்ளது. வீரர்கள் அடிக்கடி மாற்றப்படுகின்றனர். இவ்வாறான நிலையில் ஆயிரக்கணக்கான பொலிஸாரைப் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தி போட்டி நடத்தப்படுகிறது.

ஆகவே இலங்கை கிரிக்கெட் துறைக்குள் நுழைந்துள்ள அரசியலை இல்லா மலாக்க வேண்டும். அத்துடன் கிரிக்கெட் சபையின் தலைவர் திலங்க சுமதி பாலவின் உறவினர்களுக்கு விளையாட்டுத் தொடர்பில் சூதாட்டம் நடத்தும் நிறுவனங்கள் உள்ளன. எனவே அவர் மீதும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. அவர்அது தொடர்பில்மக்களை தெளிவுறுத்த வேண்டும்.

அல்லாதுபோனால் அவர் தற்காலிகமாகவாவது கிரிக்கெட் சபையின் தலைமைப் பதவியிலிருந்து பதவி விலக வேண்டும். எனவே இலங்கை கிரிக் கெட் துறையின் வீழ்ச்சி தொடர்பில் நாடாளுமன்றில் விவாதம் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யுமாறு கூட்டு எதிர்க்கட்சி சபாநாய கரிடம் வேண்டுகோள்விடுக்கவுள்ள தாகவும் அவர் தெரிவித்துள்

## உலக பட்மிண்டன் போட்டியில்

# பதக்கத்தின் நிறத்தை மாற்றியது மகிழ்ச்சி!

சிந்து தெரிவிப்பு

உலக பட்மிண்டனில் 2 முறை வெண் கலப்பதக்கம் வென்று இருந்தேன். இந்த முறை பதக்கத்தின் நிறத்தை மாற்றி இருப்பது (வெள்ளி) மகிழ்ச்சி அளிப்பதாக இந்திய வீராங்கனை பி.வி.சிந்து தெரிவித்துள்ளார்

ஸ்கொட்லாந்தின் கிளாஸ் கோவில் நடந்த உலக பட் மிண்டன் போட்டியில் இந்திய வீராங்கனை பி.வி.சிந்து வெள் ளிப்பதக்கத்தைகைப்பற்றி அசத் தினார். நாடு திரும்பிய பி.வி. சிந்து ஐதராபாத்தில் நிருபர் களுக்கு அளித்த பேட் டியில், இறுதிப்போட் டியில் தோல்வி அடைந்ததும் அதிர்ச்சி அடைந் தேன். ஆனால் அதையே நினைத்து வருத்தப்பட்டுக் கொண்டு இருக்கவில்லை.

ரியோஒலிம்பிக் போட்டிக்கு பிறகு சிறந்த ஆட்டங்களில் இதுவும் ஒன்றாகும். ஏற்கனவே உலக பட்மிண்டனில் 2 முறை வெண்கலப் பதக்கம் வென்று இருந் தேன். இந்த முறை பதக் கத்தின் நிறத்தை மாற்றி இருப்பது (வெள்ளி) மகிழ்ச்சி அளிக்கிறது என்று தெரிவித் துள்ளார்.

# 43 ஆவது தேசிய விளையாட்டு விழா!

## ஒலிம்பிக் சுடர் முல்லையில் ஏற்றப்பட்டது



43 ஆவது தேசிய விளையாட்டு விழாவை முன்னிட்ட ஒலிம்பிக் சுடரை முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் வைத்து அரசாங்க அதிபர் மற்றும் படையதிகாரிகள் ஏற்றிவைத் தார்கள்.

கிளிநொச்சியில் இருந்து முல்லைத்தீவு நோக்கிய இந்த ஒலிம்பிக் சுடர் பயணம் செய்து விசுவமடு, புதுக்குடியிருப்பு ,வட்டுவாகல் ஊடாக நேற்றுமுன்தினம் மாலை முல்லைத் தீவு அரச செயலகத்தை சென்ற டைந்தது. இதன் தொடக்க நிகழ்வு முல்லைத்தீவு மாவட்ட செயலகத் தில் நடைபெற்றது.

இதன்போது தேசியக் கொடியை அரசாங்க அதிபரும், மாகாண கொடியினை வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசனும் விளையாட்டுக் கொடியை 59 ஆவது படைப்பிரிவின் படைத்துறை அதிகாரியும் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து மாவட்ட செயலகத்தில் மரக்கன்றுகள் நட்டு வைக்கப்பட்டது.



43 ஆவது தேசிய விளையாட்டு நிகழ்வுக்கான ஒலிம்பிக்சுடர் அரசாங்க அதிபர், படைத்துறை அதிகாரி, விளையாட்டுவீரர்களால் ஏற்றிவைக்கப்பட்டு முல்லைத்தீவு நகரில் இருந்து தண்ணீரூற்று ஊடாக நெடுங்கேணி சென்று அங்கிருந்து வவுனியா சென்றடையவுள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதி இடம் பெறவுள்ள தேசிய விளையாட்டு விழாவை முன்னிட்டு குறித்த ஒலிம்பிக் சுடர் தாங்கிய வாகன அணி நாட்டின் அனைத்து மாவட் டங்களுக்கும் விஜயம் செய்யவுள் ளமை குறிப்பிடத்தக்கது. (ப)

## தரவரிசைப் பட்டியலில் சாய்னா முன்னேற்றம்

சர்வதேசபட்மிண்டன்தரவரிசை பட்டியலில் இந்திய வீராங்கனை சாய்னா நேவால் 4 இடங்கள் முன் னேறி 12ஆவது இடத்தை பிடித் துள்ளார்.

சர்வதேச பட்மிண்டன் தரவரிசை பட்டியல் வெளியிடப்பட்டது. சம்பியன் போட்டியில் வெண்கல பதக்கம் வென்ற இந்திய வீராங் கனை சாய்னா நேவல் 4 இடங்கள் முன்னேறி 12ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். வெள்ளிப் பதக்கத்



தரவரிசையில் பி.வி. சிந்து 4ஆவது இடத்தில் நீடிக்கிறார். இந்திய வீரர் ஸ்ரீகாந்த் கடாம்பி 2 இடம் முன்னேறி 8 ஆவது இடத்தைப் பிடித்தார்.







# மைதானத்துக்குள் பாய்ந்த அம்பு!

## தீவிரவாத அச்சுறுத்தலா...?

லண்டன் ஓவல் மைதானத் தில் இடம்பெற்றுவந்த உள்ளூர் சாம்பியன்ஷிப் போட்டியின் போது மைதானத்திற்குள் அம் பொன்று பாய்ந்தமையால் அந் தப் போட்டி தடைப்பட்டுள் ளது.

நேற்றுமுன்தினம் சர்ரே மற் றும் மிடில் செக்ஸ் அணிகளுக்கு இடையில் இடம்பெற்ற போட்டி யின் போதே மைதானத்துக்குள் அம்பு பாய்ந்துள்ளது.

மேலும், இந்த அம்பானது உலோகத்தால் செய்யப்பட் டுள் ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணை களை மேற்கொண்டு வருகின் றனர்.

மேலும், இத்தாக்குதல் தீவிரவாத எச்சரிக்கையாக இருக் கலாம் என சந்தேகம் எழுந்துள் ளமை குறிப்பிடத்தக்கது.

## சு.க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுப்பப்பட்டுள்ள போதிலும் அவர் அதில் பங்குபற்றமாட்டார் எனத் தெரியவருகிறது. இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறும் அமிர்தலிங்கத்தின் 90ஆவது நினைவு நிகழ்வில் அவர் கலந்து கொள்ள வேண்டியிருப்பதால், அவருக்குப் பதிலாக கூட்டமைப்பு சார்பில் சுமந்திரன் எம்.பி. கலந்து கொள்ளுவார் எனத் தெரிகின்றது.

சு.கவைப் பொறுத்தவரை இந்த மாநாடு மிகவும் முக்கியமான ஒன்றாக அமையும் என அந்தக் கட்சியின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

சுதந்திரக் கட்சியின் ஆலோசகர்களில் ஒருவரான முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிர்க் கட்சியில் அங்கம் வகிக்கும் சுதந்திரக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அவர்கள் அதில் பங்கேற்காமல் போனால், எதிர்காலத்தில் கட்சியின் எந்த அதிகாரபூர்வ நிகழ்வுகளுக்கும் அவர்கள் அழைக்கப்பட மாட்டார்கள் எனவும் அவர் கூறியுள்ளார்.

கட்சியின் மாநாடு முடிந்தவுடன் கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் குமார வெல்கம, பிரசன்ன ரணதுங்க, ரஞ்சித் சொய்ஸா, மஹிந்தானந்த அளுத்கமகே, பிரசன்ன ரணவீர ஆகியோர் ஒழுக்காற்று விசாரணைக்குழுவிற்கு அழைக்கப்படுவார்கள்.

ஏற்கனவே இவர்கள் குறித்து முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. அதேவேளை ஒழுக்காற்று விசாரணையில் குற்றவாளியாக இனங்காணப்பட்டுள்ள புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்தவை கட்சியில் இருந்து நீக்க உள்ளார்கள் என்றும் கூறப்பட்டது.

## பூநகரியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பீற்றர் ரூபன் (வயது 42) என்பவர் கடுமையான பாதிப்புக்குள்ளாகி முழங்காவில் வைத்தியசாலைக்கு கொண்டு விரையப்பட்டு அங்கிருந்து கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

பிற்பகல் 2.39 மணியளவில் மழை பெய்து கொண்டிருந்த போது இருவரும் வீட்டின் கிணற்றில் குளித்துக்கொண்டிருந்த சமயமே இந்தத் திடீர் மின்னல் தாக்கம் ஏற்பட்டுள்ளது.

பலியானவர் ஆறு பிள்ளைகளின் தாய் ஆவார். தமது பூர்வீக நிலமான இரணைதீவுக்கு மீண்டும் செல்ல வேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்டு வருபவர்களில் இவர்களும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## எரிகாயங்களுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

62) நேற்று முன்தினம் இரவு நாவலவில் உள்ளதனது வீட்டில் இடம் பெற்றதாகக் கூறப்படும் காஸ் ஸிலிண்டர் விபத்துச் சம்பவத்தை அடுத்து உடலில் மோசமான எரிகாயங்களுடன் லங்கா தனியார் ஆஸ்பத்திரியின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார்.

அவருக்குத் தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. அவரின் நிலைமை ஆபத்தில் இல்லை என ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## அலிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அலிஸ் வேல்ஸ் அம்மையார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்த சமயம் புதிய அரசமைப்பு உருவாக்கம், ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கையும் அமெரிக்காவும் மற்றைய சில நாடுகளும் சேர்ந்து இணை அனுசரணை வழங்கி இலங்கை தொடர்பாகக் கொண்டு வந்து நிறைவேற்றிய தீர்மானத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் போன்றவற்றில் ஏற்பட்ட தாமதங்கள் ஆகியன குறித்து விரிவாகப் பேசினார்.

இனிமேலும் தாமதிக்காது இந்த வருட இறுதிக்குள் தாம் புதிய அரசமைப்பு உருவாக்கத்தை ஒப்பேற்றி விடுவார் என அச்சமயம் ஜனாதிபதி தமக்கு உறுதிமொழி தந்தார் என அலிஸ் வேல்ஸ் அம்மையார் இந்தச் சந்திப்பின் பின்னர் தாம் சந்தித்த தமிழ்க் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் உட்படப் பலரிடம் தெரிவித்தார் என அறியவந்தது. (உ)

## பலாலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யமாக அபிவிருத்தி செய்யப்பட்டால், சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் கீழ் அது கொண்டுவரப்பட்டு, சிவில் விமான சேவைகள் நிறுவனத்தினால் விமான நிலையம் இயக்கப்படும்.

மேலதிக காணி சுவீகரிப்புக்கு பிரதேச மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருவதால், ஓடுபாதையை விரிவாக்காமல், பலாலி விமானத் தளத்தை சர்வதேச விமான நிலையமாக அபிவிருத்தி செய்வதற்கு இந்தியாவும் இலங்கையும் இணங்கியுள்ளன.

பொதுவாக, எதிர்காலப் போக்குவரத்து மற்றும் பாரிய விமானங்களைத் தரையிறக்கும் வசதிகள் என்பனவற்றைக் கருத்தில் கொண்டே விமான நிலையங்கள் கட்டப்படுகின்றன. ஆனால் காணி சுவீகரிப்புச் சர்ச்சைகள் இருப்பதால் பலாலி விமான நிலையத்தின் ஓடுபாதையை விரிவாக்காமல் அதனை தரமுயர்த்துவதே தற்போதுள்ள நல்ல தெரிவாகும் என்று சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பலாலி விமானத் தளத்தின் தற்போதைய ஓடுபாதை 2.3 கிலோ மீற்றர் நீளம் கொண்டதாக உள்ளது. இங்கு, சுமார் 100 பயணிகளை ஏற்றக் கூடிய, போயிங்-717 போன்ற, ஒடுங்கிய உடலமைப்பைக் கொண்ட விமானங்களைத் தரையிறக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜெனரல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடிந்து நாடுதிரும்பியுள்ளார்.

இந்த நிலையில், வேறு ஒரு நாட்டின் தூதுவராகத் தம்மை நியமிக்குமாறு ஜயசூரிய அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார் எனக் கூறப்பட்டது.

எனினும் இந்தகோரிக்கையை ஏற்றுக்கொள்வதில்லை என அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சின் தகவல்கள் கூறுகின்றன.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் யுத்தக் குற்றங்கள் மற்றும் சித்திரவதைக் குற்றங்களில் ஈடுபட்டார் எனத் தெரிவித்து அவருக்கு எதிராக தென்னமெரிக்காவின் மனிதவுரிமைகள் அமைப்பொன்று பிரேஸிலில் வழக்குத் தாக்கல் செய்திருக்கின்றமை தெரிந்ததே.

அதேவேளை ரோம் உடன்படிக்கையில் கையெழுத்திட்டுள்ள எந்த நாட்டுக்குள் பிரவேசிக்கவும் ஜகத் ஜயசூரியவுக்கு அனுமதி அளிக்கப்படமாட்டாது என வெளிவிவகார அமைச்சின் தகவல்கள் தெரிவித்துள்ளன. (உ)

## சுஷ்மா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு வந்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ் கடந்த வெள்ளியன்று காலையில் தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனையும், எம்.பி.சுமந்திரனையும் சந்தித்துப் பேசியிருந்தார்.

அப்போது அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் ஏற்பட்டுள்ள தாமதங்கள், பின்னடைவுகள் குறித்துசம்பந்தன் இந்திய அமைச்சருக்கு விளக்கியிருந்தார்.

அதன் பின்னர் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துப் பேசினார்.

அச்சமயமே புதிய அரசமைப்பு உருவாக்கத் தாமதம் குறித்து இந்தியாவின் ஆழ்ந்த மனவருத்தத்தைத் தெரிவித்த இந்திய வெளியுறவு அமைச்சர் அது விடயத்தில் விரைவு நடவடிக்கைகளுக்குக் கடும் அழுத்தமும் கொடுத்தார் என அறிய வந்தது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்த இந்திய வெளியுறவு அமைச்சர், அதன் பின்னர் புதுடில்லி செல்வதற்காக கட்டுநாயக்கா விமான நிலையத்துக்குப் புறப்பட்டார்.

நேற்று நண்பகல் தாம் விமானம் ஏறுவதற்கு முன்னர், சம்பந்தனையும், சுமந்திரனையும் கட்டுநாயக்காவுக்கு மீள அழைத்துப் பேசினார் சுஷ்மா.

இலங்கை அரசுத் தலைவருக்குத் தாங்கள் காட்டமாக எடுத்துரைத்த விடயங்கள் பற்றிய தகவலை அவர் கூட்டமைப்புப் பிரதிநிதிகளிடம் அப்போது விளக்கினார் என அறியவந்தது.

இந்திய வெளியுறவு அமைச்சர் இலங்கை ஜனாதிபதியிடம் தெரிவித்த விடயங்களின் சாரம் வருமாறு:-

"இது உங்களுடைய அரசமைப்பு உருவாக்க முயற்சி. அதில் நாம் தலையிட விரும்பவில்லை. அது உங்களைப் பொறுத்தது. அதில் என்ன இடம் பெறவேண்டும், இடம் பெறக்கூடாது என்பதை நீங்களே தீர்மானிக்க வேண்டும். அதில் நாம் வழிகாட்டல் வழங்குவதற்கோ, விருப்புக்களைத் தெரிவிப்பதற்கோ இடமில்லை.

"ஆனால் இனப்பிரச்சினைத் தீர்வையும் உள்ளடக்கிய அரசமைப்புத் திருத்தம் வரவேண்டும். கட்டாயம் வரும் என்று அறிவித்தவர்கள் நீங்கள்தான். அதை நாம் வரவேற்று, எதிர்பார்த்துக் காத்திருந்தோம்.

"பொறுமை தாண்டும் அளவுக்குப் பொறுப்பு நிறைவேற்றப் படாமல் இழுபடுவது பொருத்தமற்றது.

" என்ன செய்ய வேண்டும், அரசமைப்பில் எவை இடம்பெற வேண்டும் என்ற விடயங்களுக்குள் நாங்கள் வரமாட்டோம். ஆனால் நீங்களே வலியுறுத்திக் கூறிய – அவசியமானது என்று வற்புறுத்திய – விடயத்தை இனியும் தாமதிக்காமல் செயற்படுத்துங்கள். தேவையற்ற தாமதம் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்புகளையுமே வீண் விசனத்துக்குள் ஆழ்த்துவதாக இருக்கும்."

– இந்தச் சாரப்பட இந்திய வெளியுறவு அமைச்சரால் இலங்கை ஜனாதிபதிக்கு எடுத்துரைக்கப்பட்டதாம். இந்தத் தகவல் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து நேற்றுக் கூட்டமைப்புத் தலைவர்களுக்கு இந்தியத் தரப்பினால் தெரிவிக்கப்பட்டது என அறியவந்தது. (உ)

## மார்க்ஸிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாள் வெட்டுச் சம்பவங்கள் உட்படபல வன்முறைகள் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் இந்த இளைஞர்களின் பெயரில் நேற்றுப் பகிரங்க அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

'இலங்கை ஜனநாயக சோசலிஸ குடியரசின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஒரு பகிரங்க மடல்' – என்ற பீடிகையோடு இந்த அறிக்கை வெளியாகியுள்ளது.

தமிழ்த் தெரியாத சிங்களப் பொலிஸாரால் 'ஆவத' என்பது எவ்வாறு 'ஆவா' ஆக்கப்பட்டது என்ற விவரிப்போடு ஆரம்பமாகும் இந்த மிகநீண்ட அறிக்கை, இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்திற்கு இந்த மொழிப் பிரச்சினை எவ்வளவு தடையாக உள்ளது என்பதற்கு 'ஆவா' என்ற சொற்பிரயோக விவகாரமே சிறந்த சான்று எனச் சுட்டிக்காட்டுகின்றது.

தமிழ் இளைஞர்கள் முன்னர் பெரும் எண்ணிக்கையில் ஆயுதக்குழுக்களில் விரும்பி இணைந்தமைக்கு முக்கிய காரணமாக அமைந்தது அரச ஆயுதப் படையின் அட்டூழியங்களும், அடக்குமுறைகளும், அதிகாரத் துஷ்பிரயோகங்களும், சித்திரவதைகளுமே என்று விவரிக்கும் இந்த அறிக்கை, 2009 ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்த பின்னர் இங்கு பொலிஸார் காட்டுமிராண்டிகள் போன்றும் கிரிமினல்கள் போன்றும் செயலாற்றுகின்றமையை நீங்கள் அறிவீர்களாக என்று கேள்வி எழுப்புகின்றது.

அத்துடன் அறிக்கையால் பொலிஸ் அராஜகங்களை விலாவாரியாகப் பட்டியலிட்டு விவரிக்கவும் செய்கின்றது.

நீண்ட அந்த அறிக்கையின் ஒரு சில பகுதிகள் வருமாறு:-

கௌரவ ஜனாதிபதி அவர்களே! நாம் கூறிய குற்றச்சாட்டுகளை உங்களுடைய அதிகாரிகளோ, பொலிஸ் திணைக்களமோ ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பதை நாம் அறிவோம். நீங்களும் அப்படியே ஏற்றுக் கொள்ளமாட்டீர்கள். நாம் சேர்ந்து உண்மை எதுவென சோதித்து அறிவோம். நீங்கள் (அரசாங்கம்) கூறுவதையும் அப்படியே திரும்பச் செய்யாமல் உங்களுடன் உரையாடல்களை நிகழ்த்தவே நாமும் விரும்புகிறோம்.

ஜனநாயக அரசியலுக்குப் பலம் சேர்ப்பதாகவே அமையும் வாதப் பிரதிவாதங்களுக்கு நாம் தயாராகவே உள்ளோம்.

'ஆவா குழு' என இந்த நாடு முழுக்க எமக்குக் கிடைத்த எதிர்மறையான பிரச்சாரத்தால் இன்று எம்மை நோக்கி சாரிசாரியாக இளைஞர்கள் திரள்கின்றார்கள். இந்த இளைஞர் சக்தியை அரசியல், சமூக, பொருளாதார, கலை, கலாச்சார, மொழி, பண்பாடு, மதம், இலக்கியம், தத்துவம், மனித சிந்தனை, சமகால வாழ்வியல் சிக்கல்கள், மதிப்பீடுகள், கோட்பாடுகள், தார்மீக நெறிகள், அறம், ஆன்மீகம், மனித உரிமைகள், ஜனநாயக உரிமைகள், சிவில் உரிமைகள், இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் போன்ற திசைகளில் சமூக பிரக்ஞை உடையவர்களாக மாற்ற இன்றிலிருந்து ஓர் அமைப்பு ரீதியாக ஒன்றிணையத் தீர்மானித்திருக்கிறோம்.

ஒட்டுமொத்த மனிதகுல மேன்மைக்காகத் தனது மரணம் வரைப் போராடிய பேராசான் கார்ல் மார்கஸ்ஸின் கோட்பாடுகளின் பால் ஈர்க்கப்பட்ட மாக்ஸிய பின்னணி கொண்ட இளைஞர்களின்

பக்கம் 03 »

## சமஷ்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"இந்தச் சமயத்தில்தான் நாட்டின் இரு பெரும் கட்சிகளும் சேர்ந்து ஒரு கூட்டு அரசை அமைத்திருக்கின்றன.

"எனவே, சமஷ்டி அடிப்படையிலான தீர்வு ஒன்றைத் தமிழ் மக்கள் உரிமையுடன் கோரிப் பெற்றுக் கொள்வதற்கான சரியான தருணம் இதுதான்."

–இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் தமிழ்க் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட எம்.பியுமான எம்.ஏ.சுமந்திரன்.

உடுவில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வி.தர்மலிங்கத்தின் 32 ஆவது நினைவு தினம் நேற்றுக்காலை நடைபெற்றபோது அதில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

தாவடியில் அமைந்துள்ள தர்மலிங்கத்தின் நினைவுத் தூபி அருகே இந்தக் கூட்டம் நடைபெற்றது. அங்கு சுமந்திரன் எம்.பி. மேலும் கூறியவற்றின் சாராம்சம் வருமாறு–

1972 அரசமைப்புக் கொண்டுவரப்பட்டபோது தர்மலிங்கம் எம்.பியும் சேர்ந்து சில யோசனைகளை முன்வைத்தார். அது சமஷ்டித் திட்டம் அல்ல. அதிலும் குறைந்ததுதான்.

தந்தை செல்வாவும் பல ஒப்பந்தங்கள், உடன்பாடுகளைச் செய்து இணக்கத்துக்கு வர முயன்றார். அவையும் சமஷ்டித் திட்டங்களே அல்ல. அதற்குக் குறைவானவைதான்.

இவ்வாறு தொடர்ந்து சமஷ்டியைத் தமிழரசுக்கட்சி வலியுறுத்தி வந்துள்ள போதிலும் இணக்கத்தைக் காண்பதற்காக அதை விடக் குறைந்த ஒன்றுக்கு நமது தலைவர்கள் உடன்பட சம்மதித்து வந்த பல சந்தர்ப்பங்கள் உண்டு.

நாமும் இப்போது ஓர் இணக்கத்துக்கு வர முயல்கின்றோம். ஆனால் சமஷ்டித் தீர்வை சரியாக வலியுறுத்தி நாம் பெறுவதற்கான உரிய சந்தர்ப்பம் இதான்.

பிரிவினையைக் கோருவதைத் தடை செய்யும் ஆறாவது திருத்தத்தை நமது அரசமைப்புக் கொண்டிருக்கத் தக்கதாக இப்போது உயர் நீதிமன்றம் முக்கிய தீர்ப்பு ஒன்றை வழங்கியிருக்கின்றது.

சமஷ்டியைக் கோருவது தவறல்ல, அதைக் கோரலாம், ஏன் சுயநிர்ணய உரிமையைக் கேட்பதைக் கூட பிழை என்று கூற முடியாது என்றுரைக்கும் தீர்ப்பு ஒன்றை – வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பை – உயர்நீதிமன்றம் வழங்கியுள்ளது.

இந்தச் சூழலே சமஷ்டியைக் கோரிப் பெறுவதற்குச் சரியான – உகந்த தருணம்.

உள்நாட்டில் இரண்டு தேசியக் கட்சிகளும் ஒன்றுபட்டு நல்லாட்சி அரசு அமைத்துள்ளன. பிரிவு விடயங்களையும் உள்ளடக்கிய அரசமைப்புக் குறித்துத் தமிழர்கள் உட்பட அனைத்துச் சிறுபான்மையினரையும் அரவணைத்துப் பேசும் சூழல் வந்திருக்கின்றது. இத்தகைய உகந்த சூழல் உள்நாட்டில் முன்னெப்போதுமே கிட்டவில்லை.

வெளிநாட்டிலும் அப்படித்தான். இந்தத் தீர்வு முயற்சியில் உலகில் எந்த நாடும் தமிழர்களுக்கு எதிர்த் திசையில் இல்லை. எல்லா நாடுகளுமே தீர்வை நோக்கிய நகர்வை வரவேற்கும் புதிய சூழல் நிலவுகின்றது.

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் கிட்டியுள்ள இந்த உகந்த சூழலை நாம் வசமாகப் பயன்படுத்த வேண்டும்.

எமக்கு சமஷ்டித் தீர்வுதான் அவசியம் தவிர, அது தொடர்பான

பக்கம் 03 »

# அமெரிக்க – இலங்கை கடற்படைகளுக்கு இடையில் முதலாவது கூட்டுப் பயிற்சி திருகோணமலையில்!

## அமெரிக்காவின் பதில் உதவி இராஜாங்கச் செயலர் அலிஸ் வெல்ஸ் தெரிவிப்பு



கொழும்பு, செப். 03

அமெரிக்க- இலங்கை கடற்படைகளுக்கு இடையில் முதலாவது, கடற்படைப் பயிற்சி எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் திருகோணமலையில் இடம்பெறவுள்ளது என அமெரிக்கா அறிவித்துள்ளது.

இலங்கை- அமெரிக்க கடற்படைகளுக்கிடையிலான உறவுகளை விரிவாக்கிக் கொள்ளும் வகையில் இந்தக் கூட்டுப் பயிற்சி இடம்பெறும் என்று தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் பதில் உதவி இராஜாங்கச்செயலர் அலிஸ்வெல்ஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன் தினம் இந்தியப் பெருங் கடல் கருத்தரங்கில் உரை யாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்து சமுத்திர பிராந்தியத்தில் முன் ஒருபோதும் இல்லாத வாய்ப்புக் கிடைத்தாலும், பயங்கரவாதம், நாடு கடந்த குற்றங்கள், ஆட்கடத் தல்கள் மற்றும் சட்ட விரோதமான மருந்துகள் உட்பட பல எண்ணற்ற பாது காப்புத்தொடர்பான சவால்களைஎதிர்கொள்கின்றது.

இந்து சமுத்திரத்தில் உள்ள பங்குதாரர்களின் கடலோரப் பாதுகாப்புப் படையினரின் மனோபலத்தினைக் கட்டியெழுப்ப அமெரிக்கா உறுதியளிக்கின்றது.

இலங்கைக்கடற்படையினருக்கும் அமெரிக்கக் கடற்படையினருக்கும்இடையிலான உறவினை மேலும் விரிவுபடுத்திக் கொண்டிருக்கின்றோம்.

ஓர் இந்திய பசுபிக் பிராந்தியத்தின் சக்தியாக ஐக்கிய அமெரிக்கா எப்போதும் இருக்கும். ஏழு தசாப்தங்களிற்கும் மேலாக, கிழக்கு ஆபிரிக்காவின் கரையோரங்களிலிருந்து அமெரிக்காவின் மேற்குக் கடற்கரை வரைக்குமான பரந்த வேறுபாடான தனித்தன்மைகளை அமெரிக்கா பொறுப்பேற்றுக் கொண்டுள்ளது. இனிவரும் தசாப்தங்களிலும் இந்தக் கொள்கையில் எந்த விதமான மாற்றங்களும் ஏற்படப் போவதில்லை.

இந்த ஆற்றல் கொண்ட பிராந்தியத்திற்கு அமெரிக்காவின் இணைப்பானது புதிய ஒன்றல்ல. இரு நூற்றாண்டுகளுக்கு முன்னர் புதிய இங்கிலாந்திலிருந்து கப்பல்கள்பொஸ்டனுக்கும் கல்கத்தாவிற்கு இடையில் இந்து சமுத்திரத்தின் வர்த்தகக் கடல் மார்க்கமாக வாசனைத் திரவியங்கள், தேயிலை மற்றும் பனிக்கட்டிகளையும் எடுத்துக் கொண்டு சென்றன.

இன்றுஇந்தநிலைவேகமாக முன்னேற்றமடைந்து இந்தப் பிராந்தியத்தில் எமது கூட்டாண்மை மற்றும் பகிரப்படும் மூலோபாய நலன்களை எப்போதும் நிரந்தரமாகக் கொண்டுள்ளன. இந்து சமுத்திரத்தில் அமெரிக்காவின் ஈடுபாடு மற்றும் இராஜதந்திரச் செயலாண்மை குறித்து வெளிப்படுத்த உள்ளேன்.

முதலாவதாக பொருளாதார வளர்ச்சி, வெளிப்படையான அபிவிருத்தி மற்றும் பிராந்திய ஒருங்கிணைப்பு ஆகியவற்றினை மேம்படுத்தும் இந்து சமுத்திரத்திற்கான பொதுவான ஒரு தூரநோக்கு இருக்கின்றது. பிராந்தியத்தின் குடிமக்களுக்கும் பொறுப்புடைமைகளுக்கும் முன்னுரிமை அளித்தல், திறந்த சந்தை, நிலையான நன்மைகளை வழங்குதல் ஆகிய பிராந்திய ரீதியான முன்னெடுப்புக்கள் யாவும் மிகவும் நிலையானதாக இருக்கும்.

இரண்டாவதாக இந்து சமுத்திரத்தில் பாதுகாப்பு அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளவும், அதேபோல் மனிதாபிமான மற்றும் சுற்றுச் சூழல் பேரழிவுகளுக்குப் பதிலளிப்பதற்கும் நாடுகள் திறம்படச் செயலாற்றக்கூடிய வகையில் இருக்க வேண்டும்.

மனோபலத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் பயிற்சியின் மூலம் இந்தச் சிக்கலான பிராந்தியத்தில் பாதுகாப்புச் சுமையைப் பகிர்ந்து கொள்ள முடியும். இறுதியாக வழிநடத்தும் சுதந்திரம் மற்றும் சிக்கல்களின் அமைதியான தீர்வு ஆகியவற்றினைஉள்ளடக்கும் சர்வதேச நெறிமுறைகளுக்கு ஆதரவளிக்கும் ஒரு கொள்கையான பிராந்திய கட்டிடக்கலை அமைப்பினை ஆதரிக்க வேண்டும்.

அனைத்து நாடுகளும் சுதந்திரமாகப் பறந்து புறப்பட்டுச் சென்று சர்வதேசச் சட்டம் அனுமதிக்கும் இடங்களில் செயற்பட அவற்றிற்கு உரிமை உண்டு.

இந்து சமுத்திரமானது உலகளாவிய வர்த்தகம் மற்றும் வாணிபம் ஆகியவற்றின் அடித்தளத்தில் உள்ளதனால் இதனுடைய கடல் மார்க்கத்தின் வழியாகப் பயணிக்கும் வகையில் உலகில் உள்ள மூன்றில் இரண்டு பங்கு உலக எண்ணெய் வர்த்தகமும் கிட்டத்தட்ட உலகின் அரைவாசியான 90 ஆயிரம் வணிகக் கப்பல்களும் பயணிக்கும் பாதையாக காணப்படுகின்றது.

இந்தப் பிராந்தியத்தில் பூமியில் வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரங்களில் சிலவும், உலகின் மக்கள் சனத்தொகையில் கால்வாசிப் பகுதியும் உள்ளதுடன், அவர்களில் ஐநூறு மில்லியன் பேர் வரையில் இன்னும் நம்பகத் தன்மை வாய்ந்த அதிகாரத்தைப் பெறாத நிலையில் உள்ளனர்.

பொருளாதார ஒத்துழைப்பினை மேம்படுத்துதல் என்பது நிலையான மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கு வழிவகுக்கும் என்று நாம் நம்புகின்றோம். உள்நாட்டுப் பிராந்தியங்களிற்கு இடையி லான வர்த்தகம் 2030ஆம் ஆண்டளவில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கிட்டத்தட்ட 568 பில்லியன் டொலருக்கு நிகராக இருக்கும்.

கடல் மார்க்கம் தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாட்டின் மீது ஈடுபாட்டினை விரிவாக்குவதும் ஒரு முக்கிய தேவையாக உள்ளது. அதிகரிப்பு முறையில் சவாலாக விளங்கும் கடல்சார் சூழலில் நம்பகரமான தகவல்களின் பகிர்வும் பெரும் ஒத்துழைப்பு ஒன்றிற்கான ஓர் அடித்தளமாகும்.

இந்து சமுத்திரத்தில் உள்ள பங்குதாரர்களின் கடலோரப் பாதுகாப்புப் படையினரின் மனோபலத்தினைக் கட்டியெழுப்ப அமெரிக்கா உறுதியளித்துள்ளது. இன்று முதல் இரு வாரங்களிற்குள் கடல்சார் மாசு தடுப்பு, சட்ட அமுலாக்கம், தேடல் மற்றும் மீட்புப் பணிகள் மற்றும் ஏனைய பல சிக்கல்களுக்கான ஒத்துழைப்பினை அதிகரிப்பதற்காக ஜப்பான் உலகக் கடலோரப் பாதுகாப்புப் படையினர் பொது மன்றக் கருத்தரங்கு ஒன்றினை நடத்துகின்றது.

அமெரிக்க - இந்திய - ஜப்பான் மலபார் கடற்படைப் பயிற்சிக்காக பத்தாயிரம் ஆளணி நபர்களை சம்பந்தப்படுத்தி பயிற்சி நெறி ஒன்றினை நடத்தியமை இன்று வரை எமது பெரிய மற்றும் சிக்கலான ஒரு செயற்பாடாக உள்ளது.

இலங்கைக் கடற்படையினருக்கும் அமெரிக்கக் கடற்படையினருக்கும் இடையிலான உறவினை விரிவுபடுத்திக் கொண்டிருக்கின்றோம். கடந்த வருடம் ஒக்ரோபர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள முதலாவது கடற்படைப் பயிற்சியை இதற்கு சிறந்த உதாரணமாக குறிப்பிடலாம்.

இந்து சமுத்திர பிராந்தியத்தின் அனைத்துக் கடற்படைகளும் இணைந்து பயிற்சியில் கலந்து கொள்ளவும் கூட்டுத்திறனை வளர்ப்பதற்காகவும் மற்றும் சர்வதேச ரீதியான தராதரங்களை நிலைநிறுத்துவதற்காகவும் கடல்சார் செயற்பாட்டு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கவும் முடியும் என நம்புகின்றோம்.

தெற்காசியாவிற்கும் தென்கிழக்காசியாவிற்கும் இடையில் ஒரு பொருளாதார, அரசியல் மற்றும் சமூக இணைப்புகளை ஆதரித்தல்.

அனைத்து இந்து சமுத்திரத்தின் பங்குதாரர்களுக்கும் கடற்படைப் பயிற்சிநெறிகள் மூலம் பிராந்தியத்தின் மனிதாபிமான மற்றும் பேரழிவு நிவாரணத் திறன்களை மேம்படுத்துதல் மற்றும், இந்து சமுத்திரப் பொருளாதாரத்தைத் தாராளமயமாக்குதல், போட்டிச் சந்தையை அணுகக்கூடிய மருத்துவம் மற்றும் கல்வி வசதிகளை ஆர்வமாக ஏற்றுக் கொள்வதற்கு ஊக்கப்படுத்த வேண்டும்.

தெற்காசியாவிலும் பரந்துபட்ட இந்திய பசுபிக் பிராந்தியத்திலும் சமாதானத்திற்கும் பாதுகாப்பிற்கும் பகிரப்பட்டுள்ள நோக்கங்களைப் பின்பற்றுவதில் அமெரிக்க உறுதியாக உள்ளது என ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இந்தக் கூட்டு முயற்சியில் இங்கு இணைந்து கொள்வதற்காக நாம் ஒவ்வொரு நாட்டினையும் இத்தருணத்தில் அழைக்கின்றோம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் நகைப்புக்குரியனவாக மாறியுள்ளன!

## முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, செப். 03

தற்போதைய அமைச்சர்களுக்கு எதிராக முன்வைக்கப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் நகைப்புக் குரியனவாக மாறியுள்ளன என முன்னாள் அமைச்சர்ரவிகருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டில் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதாக கூறியே இந்த அரசு ஆட்சிக்கு வந்தது.

எனினும் இந்த விடயத்தில் சில தாமதங்களும் தடங்கல்களும் ஏற்பட்டன, இன்று நீதிமன்ற நடவடிக்கைகள் விரைவாகஇடம்பெற்று வருகின்றன.

நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படுவது தற்போது அர்த்தமற்ற ஒன்றாக மாறியுள்ளது.

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன ஔடதங்களின் விலையைக் குறைத்துள்ள போதும் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டுள்ளது.

இது நகைப்புக்குரிய விடயமாகும் என அவர் தொடர்ந்தும் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க)

# இலத்தீன் அமெரிக்கா நாடுகளில் தம் மீதும் விசாரணை நடத்தப்படும் என்கிறார் மஹிந்த!

தன் மீதும், தனது சகோதரரான கோட்டாபய ராஜபக்ஷ மீதும் கூட இலத்தீன் அமெரிக்க நாடுகளில் போர்க்குற்றம் சாட்டப்பட்டுள்ளது என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பிரேசில் உள்ளிட்ட இலத்தீன் அமெரிக்க நாடுகளில், ஜெனரல் ஜெகத் ஜயசூரியவுக்கு எதிராக தொடரப்பட்டுள்ள போர்க்குற்ற வழக்கு தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜெனரல் ஜயசூரியவுக்கு எதிரானபோர்க்குற்றச்சாட்டுகள் குறித்து, இலத்தீன் அமெரிக்க நாடுகளில் விசாரணை செய்யப்படும் போது, நானும் எனது சகோதரரான முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷவும், கூட குற்றம் சாட்டப்படுவோம்.

இந்த நிலைமைகள் தொடர்பாக மக்களுக்கு விளக்கமளிக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.





முன்னாள் உடுவில் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவருமான வி.தர்மலிங்கத்தின் 32ஆவது வருட நினைவு நிகழ்வு அவரது நினைவுத் தூபி அமைந்துள்ள யாழ்ப்பாணம் தாவடியில் நேற்றுக் காலை நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

### மன்னார் கடற்பரப்பில் வெள்ளியன்று

## தடைசெய்யப்பட்ட உரத்துடன் மூன்று தமிழக மீனவர்கள் கைது

இலங்கையில் தடை செய்யப் பட்டதாகத் தெரிவிக்கப்படும் – சுமார் ஆயிரம் கிலோ – அமோனியம் சல்பேட் என்ற இரசாயன உரத்தை ஒரு படகின் மூலம் தமிழ் நாட்டிலிருந்து மன்னார் கடலூடாக இலங்கைக்குக் கடத்தி வந்தவர்கள் என்று கூறப்படும் இந்திய மீனவர்கள் மூவர் இலங்கைக் கடற்படையினரால் நேற்றுமுன்தினம் பிற்பகலில் கைது செய்யப்பட்டு தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இந்த மீனவர்கள் மூவரும் இன்று ஞாயிற்றுக்கிழமை மன்னார் மாவட்ட நீதிவான் முன் ஆஜர் செய்யப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ)

## பல்கேரியாவுக்கு ரூ.150 கோடிக்கு ஆயுதங்களை விற்கிறது இலங்கை

பல்கேரியாவுக்கு சுமார் கோடி டொலர் (சுமார் 150 கோடி ரூபா) பெறுமதியான ஆயுத தளபாடங்களை விற்பனை செய்யும் உடன்பாடு ஒன்றில் இலங்கைப் பாதுகாப்பு அமைச்சு கையெழுத்திட்டுள்ளது.

கடந்த வெள்ளியன்று இந்த உடன்பாடு கைச்சாத்தானது.

போர் முடிவுக்கு வந்த பின்னர், இலங்கைப் பாதுகாப்பு படையினரின் வசமுள்ள, 264 வகையான இராணுவப் பயன் பாட்டுப் பொருள்களை விற்பனை செய்வதற்குப் பட்டியலிடப்பட்டது. இந்தப் பட்டியலில் மூன்று வகையான ஆயுத தளபாடங்களையே பல்கேரியாவுக்கு விற்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இது மொத்த ஆயுதக் கையிருப்பின் 2 சத வீதம் மாத்திரமே என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, எஞ்சிய ஆயுதத் தளபாடங்களின் விற்பனையை இலங்கையின் தற்போதைய பாதுகாப்புச்செயலர் கபிலவைத்தியரத்ன இடைநிறுத்தி வைத்துள்ளார். கேள்விப் பத்திரம்கோரிஆயுதங்களை விற்பனை செய்யும் நடைமுறையைப் பின் பற்றுவதற்காகவே அவர் இதனை இடைநிறுத்தியுள்ளார்.

சலாவ ஆயுதக்களஞ்சியத்தில் ஏற்பட்ட வெடிவிபத்தை அடுத்து. ஆயுதங்களைக் களஞ்சியப்படுத்தி வைப்பதில் உள்ள பிரச்சினை காரணமாக, மேலதிக ஆயுதங்களை விற்பனை செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று கூறப்பட்டது.

NEW SCIENCE HALL
Kannathiddy Road, Jaffna
2018 A/L
2017 August பரீட்சைக்குத் தோற்றியவர்கட்குரியது
DAY CLASSES
திங்கள் தொடக்கம் வெள்ளி
PHYSICS 11.30 - 1.30 — திரு.G.பிரபா, திரு.S.சோதிலிங்கம்
CHEMISTRY 9.30 - 11.30 — திரு.K.சிவத்திரன்
BIOLOGY 7.00 - 9.30 — வழமையான ஆசிரியருடன், திரு.T.கெங்காதரன்
COM.MATHS 7.00 — திரு.P.செந்தில்நாதன்
ஆரம்பம்: 05.09.2017 செவ்வாய் காலை 7.00
தொடர்பு: 0777 917 611
https://facebook.com/newsciencehalljaffna

எமது அன்னையின் பத்தாவது ஆண்டின் நினைவு கூரல்
தோற்றம் 03 ★ 10 ★ 1917
மறைவு 03 ★ 09 ★ 2007



அமரர் திருமதி சண்முகம் காசுபதி
திதி: சப்தமி 12.09.2017
கடந்த 03.09.2007 ஆம் திகதியன்று சிவப்பேறு பெற்று உயர்ந்த எங்கள் அன்புத் தாயாரின் பத்தாவது ஆண்டின் நினைவு தினமான இன்று அவரை என்றும் நினைத்தவாறு இறைவனை வேண்டி நிற்கின்றோம். என்றும் அம்மா எங்களோடு இருந்து எம்மை ஆசீர்வதித்த வண்ணம் இருக்கின்றார். மட்டுவில் மருதடி விநாயகரின் பூரண அருட்கடாட்சம் பெற்று நித்திய ஆத்மசாந்தியுடன் உய்ந்திட்ட அம்மாவை பாசமுடன் வணங்கி நிற்கின்றோம்.
1010/6, கே.கே.எஸ். வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.
திரு.திருமதி ச.நந்தகோபால் குடும்பத்தினர் (ரூபி யுவலறி)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.09.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.